ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகஞு ஆனிமீ 1உ	இதழ் 87.
Vol. 8.	1933-ம்ஞு ஜூன்மீ 14உ	No. 87.

ஆனந்த  தர்சனம்

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து" என்றபடி அதிகாலையில் ஸயனத்திலிருந்து எழுந்திருக்கும்பொழுதே பகவத் பிரார்த்தனையுடன் அன்றையபொழுதைத் துவக்கவேண்டும். காலைப்பொழுதின் பிற்பகுதிகள் இனியனவாய் முடிவதற்குப் பகவத் கருணைவேண்டும். அந்தந்த தினத்தின் கடமைகளை ஒருபுறம் செய்தவாறும், மற்றொருபுறம் நமது மனமானது கடவுளைத் தியானித்தவாறும் இருக்கவேண்டும். இறைவனையே பரிபூரணமாக நம்பிவிட்ட உள்ளம் தனது குறைபாடுகள் யாவற்றையும் அந்தக் கருணாமூர்த்தியிடம் தாராளமாக வெளியிட்டுக் கொள்வதில் பிசகில்லை. தன்னுடைய உலக கஷ்டங்களையும், எளிதில் தொலையாத நீண்டகால வறுமையையும் பகவானிடம் முறையிட்டுக்கொள்ளுகிற நெஞ்சமானது, அதேகாலத்தில் உலகப் பற்றில்லாததாய், தன்னை நம்பிய மனைவிமக்களைத் திருப்தி செய்துவிட்டுச் சாந்திபெறவேண்டு மென்பதிலேயே திருஷ்டிகொண்டதாய் இருக்குமாயின், அதன் வேண்டுதல்கள் குற்றமும் களங்கமும் கொண்டதாகாது. அந்தத் தூய உள்ளம் கோருவதெல்லாம் மனதின் சமாதானமே; நிம்மதியான சித்தத்துடனிருந்து இறைவனைப் பூஜிக்கவேண்டுமென்ற ஆவலால்தான் தன்னை விடாது பிணிக்கும் பாசபந்தங்களினின்றும் தன்னை விடுவிக்கும்படி பிரார்த்திக்கின்றது. எவ்வாறு விடுவிப்பதென்பது வினா? அந்த விடுவிப்பு கருணாரஸத்துடன் நிறைந்திருக்கவேண்டுமென்பது அந்த எளிய உள்ளத்தின் பிரார்த்தனை. எவ்விதமான கருணையென்பது மற்றொரு கேள்வி. தன்னை நம்பியவர்களைக் காப்பதென்பது தனது கடமையேயாகி, அதுவும் பகவானின் ஒருவித ஆக்ஞையுமாகி, அதைத் தான் சரிவரச் செய்யவேண்டியுமிருக்கிறது. எவ்வளவு உழைப்பினும் இல்லாக்கொடுமையே பெரிதாகிச் சுலபத்தில் தரித்தி

ரம் தொலையாமல் தவித்துத் தனது கடமையிலும் தவற நேர்கிறது. இதற்கு ஒரு நிவர்த்திமார்க்கம் தேடிப் போதிய வருமானமும் செல்வமும் தான் பெறும்படியாகச்செய்து. அதன் மூலம் தனது கடமைகளை விசாரமின்றிப் புரிவதற்குச் சுலபமாக ஆக்கிவிட்டால், அக்கடமைகளிலேயே செலுத்தியிருந்த விசாரத்தைத் திருப்பி பகவானின் பக்கலில் செல்லவிடுத்து ஆநந்திக்கலாமே யென்று அந்த உள்ளம் ஆவலாதிகொள்கின்றது. அவரைத் துதிப்ப தற்காகவே தன் கவலை நீக்கிக் காக்குமாறு வேண்டுகின்றது இவ்வித பிரார்த்தனையில் உலக பாசபந்த அவாக்கள் மிகுந்திருப்பினும் உள்ளத்தின் பரிசுத்தமான திருஷ்டியை நினைக்கையில் அப்பிரார்த்தனை குற்றமுள்ள தாகிறதில்லை. பகவானும் அவ்வித உள்ளத்தின் புனிதமான தன்மையை உணர்ந்து கருணைபுரிவதும் திண்ணமே. தரித்திராவஸ்தையுடன் தம்மை நாடிவந்த குசேலரின் வறுமைப்பிணியை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி உடனே நிவர்த்தித்து ஏராளமான செல்வ போகங்களைக் கடாக்ஷித்தருளினர் குசேலரோ அச்செல்வ போகங்களில் தான் சிக்கிக்கொள்ளாமலும் மயங்காமலும் ஒதுங்கி, தம்மை நம்பிய மனைவிமக்களைத் தான் காக்கும் கடமையின் பளுவு தன்னை விட்டு நீங்கியதென்று ஸந்தோஷித்தவராய்க் குடும்பச் சுமையினின்றும் விலகி பகவத் பிரார்த்தனையிலேயே தமது சித்தத்தை முற்றும் செலுத்தி ஆநந்திப்பதானர். பிரார்த்தனு உள்ளமானது இவ்வாறு குசேலரின் நிர்மல மான மனத்தைப்போன்று பரிசுத்தமாயிருக்கவேண்டியதும் அவசியமாகும்.

ஃ

"பக்தி வியாபாரம்" தனது இவ்வுலக விருப்பங்கள்மட்டும் நிறை வேறுவதற்காகவே பகவானைத் துதிப்பதென்பது முற்றிலும் அறியாமையா கும். தன் தாய்தந்தையர்கள், தான் வேண்டுவனவற்றை யெல்லாம் வாங்கிக் கொடுப்பவர்களென்றெண்ணி அதற்காக மட்டும் அவர்களிடம் ஒரு குழந்தை பிரீதி பாராட்டுகிறதில்லை. தனது தாயிடமும் தந்தையிடமுமுள்ள பிரேமை யினலேயே அவர்களை விரும்பியோடுகின்றது. தனது தாய் எத்தனையோ பொம்மைகளைத் தனக்கு விளையாடக் கொடுப்பினுங்கூட சிறிது நேரத்தில் அவற்றை விட்டெறிந்து தாயினிடமே சென்று அவளைக் கட்டிப்பிடித்துக் கொள்ளுகின்றது. தாய் எங்கு சென்றாலும் தானும் கூடவருவதாய்க் குழந் தை யழுதுத் தொந்தரை செய்கின்றது. தாயுடன் நடந்துசெல்வதில் தனக் குக் கஷ்டமுண்டாகுமேயென்று அக்குழந்தை யெண்ணுமல் அன்னையுடன் உல்லாஸமாகக் கைகோர்த்துச் செல்லும் ஆநந்தத்திலேயே விருப்பங்கொண்ட தாகின்றது. தாய் தனக்குத் தெரியாமல் வெளியில் சென்றுவிட்டால், அவள் திரும்பி வருமளவும் அதே எண்ணமாக ஏங்கி அழுதவாறிருக்கின்றது. பிறகு தாய் நெடுந்தூரத்தில் வருவதை யறிந்ததும் வெகு விரைவுடன் ஓடி அவளை யணைத்துக்கொள்கின்றது. இந்தப் பிரீதிக்கு அப்பால்தான் தனது பொம்மை களுடன் விளையாடுகின்ற அவா ஏற்படுகின்றது. இவ்விதமே, நாமும் கடவு ளிடம் பக்திமிகுந்து அந்தப் பக்திக்காகவே அவரைத் துதிக்கவேண்டும். தாயினிடத்து அன்பு மிகுந்த குழந்தை சில சமயங்களில் தனக்குப் பொம் மைகள் வேண்டுமென்று கேட்பதுபோல், பகவத் பக்திக்கு அப்பால், இவ்

கன்னடபாஷையில் வித்யாபட்டம் பெற்றதனலேயே தெலுங்குபாஷை யில் கவிகள் இயற்றிவிட முடியாது. மற்ற பாஷா பயிற்சியினல் அறிவு வள ரும். அவ்வளவே.

வுலக விருப்பங்களில் சிலவற்றைப் பூர்த்திசெய்யும்படி பிரார்த்திப்பது நலமாகும். அவ்விதமின்றி, தனது இஷ்டசித்திக்காகவே கடவுளைத் தியானிப்பதென்பது கூடாததாகும். கருப்பங்கொல்லையில் ஒருவன் பிரயாஸைப்பட்டு காலமே முதல் அந்திவரையும் நீர்ப் பாய்ச்சினான். ஒரு துளி ஜலம்கூட வேரில் இறங்கவில்லை. நீரெல்லாம் எலி வளைகளில் புகுந்து வீணாகிவிட்டது. பயிருக்கு உபயோகப்படவில்லை. அதுபோல், தன்னுடைய உதர போஷணைக்காகவும், பேராசைக்காகவும், வெளி வேஷத்துக்காகவும் ஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்வோன் முன்னிருந்த சாதாரண நிலைமையே அடைகிறான். புதியதொரு பலனும் ஏற்படுவதில்லை. எவனுடைய ஸ்தோத்திரம் நிஷ்களங்கமான ஹிருதயத்திலிருந்து உண்டாகிறதோ அவனுக்கே பகவான் அருள்செய்கிறார்.

ஃ

"இருப்பதும் இறப்பதும் ஆண்டவன் கையிலே" என்று மகாத்மா தமது உபவாஸத்தின்போது கூறினார். உபவாஸம் என்பது ஹிந்துமதத்திலேயே வேரூன்றியுள்ள ஒரு முக்கியமான தர்மம் என்பது அவரது கருத்து. "என்னுடைய சரீரத்தைக்கொண்டு அதிகமான வேலையைப் பகவான் எதிர்பார்க்காவிடில், இந்தக் கட்டை போய்விடட்டும்" என்கிறார். "இந்த சரீரம் இருந்தாலும் வீழ்ந்தாலும் அது மனித ஸமூகத்தின் நன்மைக்கேதான். பிணிவாய்ப்பட்டிறப்பதைக் காட்டிலும் உபவாஸமூலமாக ஹரிஜனங்களுக்கென்று உயிரைவிடுவது மேலன்றோ" என்கிறார். "நான் கடவுளையே நம்பியிருக்கிறேன்; அடுத்த நிமிஷத்தில் என்ன நடைபெறுமென்று யாருக்குத்தான் தெரியும்? *** என்னுடைய சரீரமானது கண்ணாடி வளையல்களைவிட சுலபமாக உடைந்துபோய்விடக் கூடியது. உள்ளேயிருக்கும் ஆத்மாதான் முக்கியமானது" என்றும் கூறுகின்றார். மகாத்மாவுக்குள்ள தூயஹிருதயமும் பக்தியும் நமக்கு உண்டாகுமாறு பிரயத்தனிக்கக் கடவோம். நாம் மகாத்மாவின் காலத்தில் வாழ்ந்து வருகிறோமென்பது நம்மெல்லோருக்கும் ஒரு விசேஷப் பெருமையன்றோ?

ஃ

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" ஆலயமென்பது பகவத்சாந்நித்தியமென்று சொல்லப்படுகின்ற கடவுளின் சக்தி விசேஷங்கள் தெளிவான நிலைமையில் அமைந்திருக்கும் ஸ்தலமாகும். ஆலயத்திற்குச் சென்றவுடன் பிரபஞ்ச நினைவுகளை மறந்து பகவத் சிந்தையே அதிகரிக்கின்ற ஒருவித சூக்ஷ்மமான பக்குவத்தை நாம் அடையப்பெறுகின்றோம். நமது சித்தம் இறைவனைத் தியானிப்பதிலேயே செல்லுகின்றது. இவ்வுலகினில் எவர்மீது நாம் பூரண நம்பிக்கைகொண்டிருக்கிறோமோ, அந்த நம்பிக்கைகள் ஒருங்கு கூடியுள்ள ஸ்தலத்தில் நாம் இருந்துகொண்டு பரமாத்மாவைத் தியானிப்பதில் மட்டற்ற ஆநந்தத்தை அனுபவிக்கின்றோம். அந்த ஆநந்தத்திலே நம்மையே நாம் மறந்தும்போகின்றோம். நமது கண்களில் ஆநந்தக்கண்ணீர் பெருகுகின்றது. பல்வகையாலும் உலகக் கவலைகளில் உழன்று மெலிந்த நெஞ்சம் ஆலயப்பிரவேச மகிமையால் ஒருவித புது சக்திகொண்டு, "நம்மைக் காப்பதற்குப் பகவான் இருக்கிறார்" என்று திடசித்தத்துடன் பரவசப்படும்படி செய்

எது உபத்திரவமென்று அஞ்சுகிறோமோ, அந்த உபத்திரவமே நம்மிடம் வந்து சேர்ந்துவிடுகின்றது.

கின்றது. இந்த மகத்தான ஆநந்தம் வேறு எவ்விடத்திலும் நமக்குக் கிடைப்பதில்லை. நமது சொந்த வீட்டிற்குள் புகும்போது உண்டாகிற உத்ஸாகத்தை விட, ஆலயத்திற்குள் நாம் செல்லுகையில் உண்டாகும் ஒப்பற்ற ஆநந்தமே மகா பெரிதாகும். அனுபவித்தவர்க்கே அந்த ஆநந்தம் தெரியும்.

ஃ

"மாயை தன்னை யறிந்தவனிடம் தங்காது" மாயை இன்னதென்று தெரிந்தால் அது க்ஷணமே இல்லாமற்போகிறது. இதற்கு அடியில் வரும் கதையை ஒரு பெரியவர் உபமானமாகக் கூறுகிறார். ஒரு கிராமத்தில் ஒரு விப்பிர சிரேஷ்டர் ஒருதினம் அந்திவேளையில் பிரயாணம் சென்றதால் ஒரு சக்கிலியனைப் பின்னோடும் வரும்படி அழைத்தார். அதற்கு அவன் "என்னைப் பார்த்தளவிலேயே ஹீனஜாதியென்று தெரிந்துவிடுமாதலின், தங்களின் வேலைக்காரன் என்று எவரும் எண்ணார்" என்றான். அந்தணர், "அடே அதைப்பற்றி நீ யோசிக்கவேண்டாம்; நீ சக்கிலியனென்று இரவில் யார் அறிவர்? தாராளமாய் என்னுடன் வா" என்றார். இருவருமாகக் குறித்த ஊர் போய்ச் சேர்ந்தனர். பிராமணர் தான்போய்த் தங்கிய வீட்டின் வெளித்திண்ணையில் சக்கிலியனைத் தாராளமாய் உட்காரச்செய்து உட்சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கே மற்றொரு பிராமணன் வந்து "அப்பா, இந்த செருப்பைச் சரிசெய்து கொடு" என்றான். சக்கிலியன் தன் எஜமானனுடைய ஆக்ஞைக்கு விரோதம் செய்ய இஷ்டமின்றி பதில் பேசாமல் சும்மாவிருந்தான். பிராமணன் விடுவதாய்க்காணோம். மறுபடியும் அடே சக்கிலியப் பயலே! நீ என் சும்மாவிருக்கிறாய்? இந்த செருப்பைத் தைத்துக்கொடு என்றான். உடனே சக்கிலியன் பயந்து, "ஓகோ! நம்முடைய ஜாதியை இவ்வந்தணன் அறிந்துகொண்டான். இனி இங்கிருந்தால் ஆபத்துண்டாகும்" என்று ஓடிப்போனான். இப்படியே மாயை தன்னை யறிந்தவனிடமிருந்து விரைந்து ஓடிவிடும்.

ஃ

"பார்த்தவிடமெல்லாம் பரமன்காணம்மானை, பாராமல் இந்நாளும் பாழ்பட்டேனம்மானை" என்பதுபோல எங்கும் பகவத் ஸ்வரூபமாகவே தோற்றக்கூடிய ஞானஒளி பூர்வ புண்ணியம் பலிக்கப் பெற்றோர்க்கே திடீரென்று உண்டாவதாம். அவ்வித பூர்வ சம்பந்தமற்றோர் இந்த ஜன்மத்திலேனும் ஞான ஒளியைப் பெறுதற்கு முயற்சிக்கவேண்டும். அதிகமான ஜலம் கலந்துள்ள பாலைச் சுவையுண்டாகும்படி காய்ச்சுவதற்கு நெடுநேரம் செல்லும். தண்ணீர் முழுதும் வற்றினாலன்றி பாலில் பூர்த்தியான சுவை உண்டாகாது. இதைப்போல ஜீவகாலமெல்லாம் உலக பாசங்களிலேயே உழன்று திரிந்து அலைந்து, மனத்தை சாசுவதமற்ற சுகத்தில் கிடத்தி மதிமயங்கியிருந்தோர் சுலபத்தில் அம்மனதை ஞானவழியில் திருப்பமுடியாது. விரக்தி அதாவது ஆசையை யொழித்தல் என்ற உறுதி அவர்கள் இருக்குமிடத்தில் அரைக்ஷணமும் நில்லாது. ஆதலின், பொறுமையோடும் நல்ல அப்யாஸங்களைச் செய்து, குருவினுடைய அனுக்கிரகம் பெற்று, சிறிது சிறிதாக பகவத் பக்தியில் மனதைச்செலுத்தி பகவானுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாக வேண்டும். ஆகவே, நாமும் பகவானைப் பிரார்த்தித்துப் போற்றக்கடவோம்.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுக௵ ஆனிமீ 1௳

சிறியதென்ற அலக்ஷியம் சரியா ?

பலதுளி பெருவெள்ளம்.

Many a little makes a muckle.

ஆரம்பத்தில் சிறிதாகத் தோற்றுவதை அப்படியே நினைத்துவிடுகிறதா? அவ்விதம் அவசரப்பட்டு அலக்ஷியம் செய்வது சரியா? ஒரு விவாகத்தில் தலைமை வகித்துச் சமாளிக்கிறவன் ஒரு தனி மனிதனே! அவ்வொருவனது உழைப்பில் எவ்வளவோ கூட்டம் கல்யாணத்திற்குக் கூடிக் காரியமும் நிறைவேறிவிடுகிறதல்லவா? ஒருவனுயிருந்தாலென்ன?—எதையும் நிர்வகித்து நடத்திவிடுகிற அவனுடைய சாமர்த்தியத்திற்கேதான் மதிப்பு. எங்கோ ஒருமூலையில் ஒருசிலர் கூடிமுடிபோட்ட அரசியல்திட்டம் தான் பிறகு தேசமுழுதுக்கும் அதிகார தோரணையுடனும் சட்டமாய் வியாபிக்கிறது. ஒரு பெரிய ஜீவநதியின் உற்பத்தி ஒரு ஒண்டி மலையில் ஒரு சிறிய ஊற்றிலேதான்! அந்த நாளிலே சின்னப்பயல் என்று அலக்ஷியம் பண்ணப்போக, இப்போது அவனே ஊருக்கும் வீட்டுக்கும் பெரிய மனுஷ்யன். சொற்ப முதலுடன் ஆரம்பித்த கடைதான் இப்போது பெரிய வியாபாரஸ்தலம். தமது சிறு ரோகத்தை அற்பமாக நினைக்கிற வைத்தியர் அதற்கே பிறகு இரையாகிவிடுகிருர். எதைச் சொற்ப செலவென்று நினைத்தானே அதிலிருந்தேதான் பெருங்கடன் ஏற்பட்டுவிடுகிறது. அத்தனை பெரிய நூலை அந்த ஆசிரியர் எழுதியதற்கு, முதலிலே அவர் மனத்திலே தோன்றிய ஒருசின்ன யோசனைப்புள்ளிதான் காரணம். அந்த அல்ப தனி மனிதனல் என்ன கெடுதி வரப்போகிறதென்று வீட்டிலே சேர்க்கப்போக, அவனல்தான் குடும்பம் பல பிரிவாகி அலங்கோலமாகிறது. ஒரு சிறிய சங்கதியிலிருந்தே பெரிய குடும்பக்கலகம். தன்னுடைய ஒரு சிறு வஞ்சகச்செய்கையே பிறகு தன்னை மற்றவர் சந்தேகிக்கும்படி காட்டிக்கொடுத்து விடுகிறது.

ஃ

கொஞ்சங்கூட உற்சாகப்படுத்தாமலே எப்பொழுதும் அதிருப்தியைக் காண்பித்துக்கொள்வோரின் முன்பு வசித்தலைவிட நரகமே மேல்.

ஒரு காலத்திலே ஒரு ஊரிலே அன்பினருடன் ஒன்றுகூடி மகிழ்ந்து குலாவிப் புசித்த பாக்கியம் பிறகு அந்த அன்பினர் கண் மூடிக்கொள்வதிலே அதுவே கடைசியாகிறது! முன்கொண்ட அந்த சிறு பூரிப்பே என்றைக்கும் நினைத்துக்கொள்ளும்படி பெரிதாகிறது. முதன் முதலாக ஒருவரைச் சந்தித்த வேளையின் ஒரு சிறு நல்ல முகூர்த்தமே காலமுழுதும் அவரது நட்பால் பல உபகாரங்களை யடைய முடிகிறது. ஒரு பவுனிலோ, அரைப்பவுனிலோ ஆகிற சிறு உருவினதாகிய அந்த மாங்கல்ய நலமே மற்றெல்லா ஆபரணங் களையும் மஞ்சள் குங்குமத்தோடும் அணிந்துகொள்ளவைக்கிறது. ஒரு அல்ப சிறு சம்பவமே, நாம் நம்பிவிட்ட மனிதனின் கபட குணத்தை அளந்து காட்டிவிடுகிறது. ஒரு பத்திரத்தில் தவறியிட்ட சின்ன கையெழுத்து வீடுவயல் யாவற்றையும் இழக்கவைத்து விடுகி றது. அல்ப அஜாக்கிரதையே பெருந்தீங்கிற்கு மூலாதாரம். ஒரு சிறு விஷம வார்த்தை ஆயிரங்காலத்து உறவையும் நேசத்தையும் அற்றுப்போகச் செய்கிறது.

ஃ

அந்த ஒரு மனிதன் செய்த சிபாரிசிலிருந்துதான் இப்போது பெரிய பெரிய பதவிகளையடைந்து உத்தியோகஸ்தனுய் வாழ்கிறது. அந்த வழியே போ என்று காட்டிக்கொடுக்கிற சிறு உதவி, தான் போகவேண்டிய இடத்திற்குச் சரியாகக் கொண்டுபோய்ச் சேர்க்கி றது. அவ்விதமே, ஒரு ஞானி தன்னைக் குருவாயடைந்தவனுக்கு 'அதோ பார்' என்று கை காட்டுகிறுர். அவனும் அந்தப் பக்கம் நோக்கி ஞானவெளிச்சத்தைக் கண்டு பக்குவசாலியாகி விடுகிறுன். 'ஆகட்டும், அவனுக்கு இப்போது கல்யாணத்திற்கென்ன அவசரம்' என்று நினைக்கிற சிறு அலக்ஷியமே தன் குமாரனின் விவாகத்தைக் காணுமலே கடவுளிடம்போகச் செய்துவிடுகிறது. ஒருவரது மரணத் தறுவாயிலே, வறண்டுபோன வாயும் தொண்டையும் நனையுமாறு இரவுமுற்றும் கண்விழித்து அருகிலிருந்து சிறு சிறு கரண்டியாகப் பால் ஊற்றுகிற அந்த சமய ஒத்தாசைக்கு இவ்வுலகையே பரிசாகத் தரினும் இணையாகுமா? எந்தத் துணையுமற்ற ஒரு அனுதைப்பெண் ணின் பிரசவத்திற்கு அருகிலிருந்து ஒரு நங்கை செய்கிற சில மணி நேர உதவிக்குப் பதில்செய்ய சாத்தியமா? தவித்த நேரத்தில் கிடைத்த மனுஷ்யத்துணை எத்துணை அல்பமாயிருப்பினும் அது மகத்துவ மிக்கதன்ருே? வக்கீல்களும், வைத்தியர்களும் கருணையோ டும் புரியும் சிறு உதவிகள் ஒருவனைப் பெரிய ஆபத்திலிருந்தும் தப்

ஒரு பல்லாங்குழி விளையாடுகையில் எவ்வளவோ மனஸ்தாபங்களுண் டாகின்றன. சிலர் காய்களைத் திருடியும் விடுகின்றனர். எரிச்சல்களும் கோப ஆத்திரங்களும் வேறே.

புவித்துக் காப்பாற்றி விடுகின்றன; எதிரிகளின் முன்பு தலை நிமிரவும் செய்விக்கின்றன. ஒருவர் தன்னை அவமானப்படுத்துகிற சமயத்திலே, இன்னொருவர் தனது கௌரவத்தை வெகு மேன்மையாக மதித்து, அந்த அவமதிப்பைக் குப்பைத்தொட்டியில் எறியுங்களென்று சமாதானப்படுத்தித் தேறுதல் வார்த்தை கூறும்போது, அவ்வுதவி அல்பமாயினும் என்றும் போற்றத்தக்கதன்றோ?

ஃ

ஒரு சிறு இழிவு, ஒரு சிறு கிழிசல், ஒரு நிமிஷதாமதம், ஒரு சிறு தீப்பொறி, ஒரு சிறு சந்தேகம், ஒரு சிறு கபடநோக்கு, ஒரு சிறு கடிதப்பிழை, ஒரு சிறு தவறு, ஒரு சிறு சுடுமொழி, ஒரு சிறு அலக்ஷியம், ஒரு சிறு பொய், ஒரு சிறு அகந்தை, ஒரு சிறு ஒதுங்குகை—இவற்றினின்றும் எதிர்படும் பொல்லாங்குகளும் அனர்த்தங்களும் பேசப்போமோ? சிலரிடம் அதிகப் பழக்கம் வைத்துவிட்ட ஒரு சிறு தவறுனது, தன்னையவர்கள் சாமானியமாகக் கருதச்செய்துவிடுவதன்றியும், மரியாதையற்ற ஏகவசனத்தில் பேசவும், என்ன 'ஸார்' க்ஷேமமா என்று கேட்டபடியே முதுகில் தட்டிக்கொடுக்கவுமாவதில் மதிப்பும் கௌரவமும் மண்ணுகின்றன. எவரிடமும் ஒரு குறித்த அளவில் நின்று, அம்மட்டில் ஒதுங்கிவிடுதலான ஒழுங்கைச் சற்றே கைவிட்டதில் தன் மானம் கெடவும் வந்துவிடுகிறது. ஒரு சிறு நாணயத் தவறுனது மற்றவர் தன்னிடத்துவைத்த பெரிய நம்பிக்கையை ஸர்வ நாசஞ் செய்துவிடுகிறது. முதலிலேயே முடியாதென்று மறுத்துவிடப் பின்வாங்கிய சிறு தவறுல் பின்வரும் கேடுகளும், பொருள் புத்தக நஷ்டங்களும் அத்தருணம் எத்தனை எத்தனையோ! தன் வீட்டிற் சிலநாள் தங்க வந்தவரை அவமதித்த பிழையால் வருதுயர்—பிரிவினை கொஞ்சமா? என்றைக்குமே மனங்கொதிக்கும்படி அந்த அவமதிப்பு செய்துவிடுகின்றது.

ஃ

சிறியதென்றோ, சிறியவரென்றோ, அல்பமென்றோ எதையும் அலக்ஷியம் செய்துவிடுவதற்கில்லை. ஒரு சிறு கடையாணியே பெரிய தேரின் சக்கரத்தை விழாது காத்துச் செலுத்துகின்றது. பெரிய தேசோபகாரமான பல அரிய செய்கைகள் ஆதியில் அல்பமான சிறு மனிதர்களிடமிருந்தே தோன்றுவதாயின. பனி சிறிதென்று எவராகிலும் அதைத் திரஸ்கரிப்பதுண்டா? ஒரு சிறு பனித்துளியை யாருமே லக்ஷ்யம் செய்யார். ஆயினும், எது சிறியதோ அதைப் பத்திரப்படுத்திக்கொண்டால், பெரியதாயுள்ளது தானே பத்திரப்படும். அல்பமான காசுகளை ஒன்றுசேர்த்துக் கூட்டினால், கடைசியில் ஒரு ரூபாயாகின்றது. காசைப் பத்திரப்படுத்துவோருக்கு ரூபாயின் கவலை வேண்டியதில்லை. காசைப் பத்திரப்படுத்த, ரூபாய் தானே பத்திரமா

கும் என்று இங்கிலீஷில் ஒரு பழமொழியுண்டு. இது ஸத்யவசன மென்று யாவரும் ஒப்புக்கொள்வரன்றோ? ஆயினும், சிறிய காரியத்தை ஜனங்கள் எத்தனை அற்பமாக மதிக்கின்றனர்? ஒரு பனித் துளியும், ஒரு தினையும் மனுஷ்யர்களுக்கு அலக்ஷியமாயிருப்பினும், விவேக ஸம்பன்னர்களுக்கு அப்படியிரா. வர்த்தகர்களின் கடைத் தெருவில் எவ்வளவோ தான்யங்கள் விழுந்துகிடக்கின்றன. அவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளுங்களென்றால் யார் லக்ஷியம் செய்வார்? ஆயினும், அந்தத் தான்யங்களைப் பொறுக்கி எத்தனையோ ஏழைகள் தங்களின் ஜீவனத்தை நடத்திக்கொள்கிறார்கள். அந்த சிதறிக்கிடக்கும் தான்யங்களே பசியால் வாடும் பக்ஷிகளுக்கு ஆகாரமாகின்றன. சிறிய பதார்த்தங்களை அலக்ஷியம் செய்வதும், பெரிய வஸ்துக்களை லக்ஷியம் செய்வதும் ஜனங்களுக்குள் ஸாமான்ய வழக்கம். மனிதர்கள் சிறியது பெரியது என்ற பேதத்தை வைத்துக் கொள்ளக்கூடாதென்று தான் பகவான் சிறிய பாபம், பெரிய பாபம் என்ற பேதத்தை ஏற்படுத்தவில்லைபோலும்! சிறிய பொய், சிறிய மோசம், சிறிய களவு, சிறிய கொலை என்ற பேதமுண்டா? என்றைக்குமே இல்லை. சிறியது பெரியது என்று பிரித்துக்கொண்டது மனிதர்கள் செய்துகொண்ட கற்பனை. சிறிய பையன் கெட்ட வார்த்தைகளைக் கூறின், அவற்றை அருமையாகப் பாவித்து, இன்னும் நன்றாய்த் திட்டு பார்க்கலாமென்று சொல்லிக்கொடுக்கும் தாய் தந்தையரின் அவிவேகந்தா னென்னே! சிறுபோதில் தலையெடுக்கும் கிளை முட்களுக்கு ஸமானமான துர்க்குணங்களை உடனுக்குடனே நிர்மூலம் செய்யாவிட்டால், அவைகள் வரவர முற்றிக் கடைசியில் எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும் ஒழிப்பது அஸாத்தியமாகிவிடும். இவ்விதமிருக்க, சிறியவைகளென்று அலக்ஷியம் செய்வது விவேகிகளுக்கு அழகாமா? சிறியதாய்த் தோன்றும் கெட்ட காரியத்தை விட்டு நடக்கும் விஷயம் ஒன்று மாத்திரமல்ல; சிறியதாய்க் காணப்படும் நற்காரியத்தைச் செய்யும் விஷயத்திலும் விவேகிகள் அலக்ஷியத்தை வகிக்கக்கூடாது.

ஃ

தான் அற்பனென்று அறிந்திருந்தாலும், செய்யும் காரியம் சிறியதென்று நினைத்திருந்தாலும், சிறியனவெல்லாம் ஒன்று சேர்ந்தால் மிகப்பெரியதாய் முடியுமென்பதை மறக்காமல், சிறு காரியத்திலேயே பூரண நம்பிக்கைவைத்துப் பிரயத்தனம்செய்வது பிரதியொரு மனிதனுடையவும் கடமையாகும். கொஞ்சமாயிருப்பதில் நம்பிக்கைவைப்பவன் வெகுவாயுள்ளவைகளிலும் நம்பிக்கை கொள்வான். அற்பத்தில் அநியாயம் செய்வோன் அதிகத்திலும் அநியாயக்காரனுவான். இதனை யுணர்ந்து மனிதர்களெல்லோரும் அற்ப விஷயத்திலும் நியாயத்தையே மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின் நடத்தை

யைத் திருத்திக்கொள்வாராயின், பூலோகம் எத்தனை ரமணீயமாயிருக்கும்! இவ்விதமே, அவரவர்களும் தமது ஒழுக்கத்தவறினை ஒரு அல்பமென்று எண்ணாமல், அதை ஒரு கனத்த பிழையாகக் கருதி அகற்றிவிடில், குடும்பத்திற்கும் தேசத்துக்கும் எத்தனை க்ஷேமம்? பெரிய தொழிற்சாலையில் வேலைசெய்யும் ஆட்களெல்லாம் எஜமானன் எதிரிலிருந்தாலும் இல்லாமற்போனாலும், சோம்பி நிற்பதான அல்ப தன்மையைக் கொள்ளாமல் ஒரேவிதமாய் விஸ்வாசத்துடனும் வேலை செய்தால், அதனால் இவர்களுக்கும் எஜமானனுக்கும் நன்மையுண்டன்றோ? நாம் எதைச் செய்தாலும் பகவான் பார்க்கிறார்; அவர் மகிழும்படி செய்யவேண்டுமென்ற அபிப்பிராயத்தோடும் செய்ய நிர்ணயித்துக்கொண்டால் சிறு காரியமாகட்டும், பெரிய காரியமாகட்டும் நன்றாய் நடக்கும்.

ஃ

முற்காலத்தில் ஒரு சிற்பி ஒரு பிரதிமையின் தலையின் பின்புறத்தில் மயிர்கூடத் தெரியும்படி வெகு பிரயாஸத்தோடு ஸூக்ஷ்ம வேலையைச் செய்துகொண்டிருந்தான். இதைக் கண்டு ஒரு ஸ்நேகிதன், "ஐயா சுவரின்பக்கத்தில் மறைவாய் நிற்கும் தலையின் பின்புறத்துக்கு இத்தனை சிரமப்பட்டு வெட்டுகிறீரே, இதனாலென்ன பிரயோஜனம்?" எனவே, சிற்பி, "ஐயா மனிதர்கள் பாராவிட்டாலும் தேவதைகள் பார்த்து மகிழுவர்" என்றான். ஆதலின், பகவான் நமக்கு நியமித்திருக்கும் காரியங்களைச் சிறிதாகட்டும் பெரிதாகட்டும் "ஈசுவரன் பார்க்கிறார், அவர் நம்மைக் கைவிடார், என்றும் துணையிருந்து காப்பார்" என்ற மனோ உறுதியான சிந்தையோடும் செய்து முடிக்கக் கடவோம். அல்பம் அல்பமன்று. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும். சட்டென்று நம்மனத்தில் உதிக்கும் ஒரு சிறு யோசனையானது நம் வாழ்நாள் முழுமைக்கும் அபிவிர்த்திக்குக் காரணமாய் இருக்கவும்கூடும். அவ்விதமே சிறுபிழை பெருந்துயராதலும் உண்டு. அஜாக்கிரதையாக வைத்த ஒரு சிறு நெருப்புப்பெட்டியின் மூலமாக எத்தனையோ பொல்லாங்குகள் விளையலாம். ஒருவன் தனது காரியங்கட்குப் பெரும் சமய உதவியாயிருக்கிறானென்று மயங்கி, அவனது ஒழுக்கக்கேட்டினை அல்பமாக நினைத்துவிடப்போக, அதிலிருந்தும் குடும்பத்திற்கே அவனால் பெரிய மானபங்கம் நேர்ந்துவிடுவதும் கூடும். எனவே, எதையும் அல்பமாக எண்ணி அலக்ஷியம் செய்யாது சிரத்தையுடன் விழித்த கண்களோடு மிருந்து, இக்கபட உலகினில் எதையும் கவனித்து ஆராய்ந்து செய்து பயன்பெறக் கடவோம்.

கற்பனை மிகுதியுமில்லாது வாக்சாதுரியத்திலேயே கதையைச் சுவைக்கச் செய்வது ஒருவிதம். இதில் சொல்லின் கனமும், அதன் நடையும், உணர்ச்சியும், கதைகளைச் சுவைக்கச்செய்து படிப்பவர்களைப் பரவசப்படுத்தும்.

ஆரவாரம்.

ஆரவாரம் என்பது ஒரு பகட்டு. பிரமிக்க வைக்கும் ஒரு செய்கை. அது ஒரு வீண் தொனியாவதும் உண்டு. சந்தை இரைச்சலுக்குப் பொருள் எது? அதனை வாக்கிய ரீதியாகப் பிரித்து விளக்க எவரால் ஆகும்? ஆரவாரத்தின் முடிவும் இவ்விதம் அர்த்தமற்றதே. அது கூச்சலுடன் தீர்வதே. அது காரியத்திற்கு வந்து பொருள்தந்து கைவசமாவதில்லை. அது கனி தருவதும் அரிதே. எங்கோ அபூர்வமாய் ஒரு பூ பூக்கும். அதுவும் மறுகணத்தில் உதிர்ந்து உலர்ந்துபடும். வெளிமுகத்தில் கனத்த ஆரவாரம் உணர்த்திப் பகட்டுசெய்து அவ்வழியில் ஜீவனம் நடத்துவோரும் உண்டு. ஆயினும் அது நிச்சயமில்லா வாழ்வு.

ஃ

அரசனுக்கு ஆரவாரம் தகும். கடவுளுக்கு ஆரவாரம் பொருந்தும். மணக்கோலத்திலும் பிணக்கோலத்திலும் ஆரவாரம் நியாயம். ஒரு உபன்யாஸ காலத்திலோ, ஒருசங்கம் கூடுகையிலோ, ஆரவாரம் சரி. உத்ஸவ காலங்களில் ஆரவாரம் ஏற்றதே. ஆயினும், இவற்றினைச் சிறிது உற்று நோக்குக. அரசன் தானே ஆரவாரம் செய்துகொள்வதில்லை. அவன் சாந்தவடிவினன்; அடக்கமும் கம்பீரமும் பொருந்தியவன். அவனது அரசஸ்தானமே அவ்விதம் ஆரவாரிக்கின்றது. இறைவன் அடியார்கட்கு உள்ளடங்கியவர். அவருக்கு ஆரவாரம் பக்தர்கள் செய்வதே. மணநாளில் மணமகன் சொன்ன சொல்லுக்கெல்லாம் தலைவணங்க வேண்டியவன். அவனுக்கு ஆரவாரம் பந்துமித்திரர்கள் புரிவதே. பிணக்கோலத்தில் சவம் உயிரற்ற பதுமை. அதற்கு ஆரவாரம் கையைத் தலைமேல் வைத்தழும் மைந்தர் மனைவி சுற்றத்தார் இயற்றுவதாகும். உபந்யாஸம் நிகழுங் காலங்களில் அதன் பிரதானஸ்தர் அமைதியோடும் நடந்துகொள்ள, சூழ நிற்பவரே ஆரவாரம் விளைப்பவராகின்றார். உத்ஸவகால ஆரவாரம் பக்தர்களின் கோலாகலமன்றி வேறில்லை.

ஃ

இவ்வண்ணமே பிறர் உன் தூய தன்மையையும், உன் அமிர்த குணங்களையும் பாராட்டி உயர்த்தி ஆரவாரிப்பாராயின், அது மற்றவர் செயல். அது உன்னைக் குற்றப்படுத்தாது. உன்னில் ஒரு களங்கம் புகுத்தி அகந்தை கொள்ளவைக்கவும் அது செய்யாது. ஆனால், உன்னைப்பற்றி நீய தனியாக ஆரவாரம் செய்துகொள்வையாயின், அதுமட்டும் பிழையின்பாற் படுவதாகும். அது வீண் தற்புகழ்ச்சியில் துலைந்திடும். இதிலும் ஒரு விலக்கு உண்டு. போர்க்களத்தில் புகுந்த வீரன் தன் ஆண்மையை உயர்த்திப் பிரதாபம் பேசி எதிரிகளைத் தாக்குதல்போல, ஆரவாரம் கொள்ளத்தக்கதான உசிதசமயத்திற் கொண்டால் அது குற்றமுடையதாகாது. ("முனைபுகு சேவகன் முனிந்தார்ப்பதுபோல், கசடறக்கற்ற கல்வியாற்றலால் தன்னைப் புகழத்ததுமெனச் சாற்றினர்.") உன் ஆரவாரிப்புக்குத் தகுந்தபடி உன் திறமையும் இருக்க வேண்டும். அவ்விதமின்றி, வெளிப்பகட்டான ஆரவாரம் நீடித்த நேரம் நிலைநிற்காது. "அவர் ஆரவாரமற்ற மனுஷ்யர்; எவரும் போய்க் காண்பதற்கு மிகவும் சுலபர்" என்ற தன்மையில் விளங்கிடுக. அதுவே பெருந்தன்மையும் சிறப்புமாகும்.



இன்று கூடிய நமது கடையில் பம்புளிமாஸ் புலவர் பிறர்க்கு அநுகூலம் செய்வதுபோல் காண்பித்துத் தங்கள் காரியத்தை முடித்துக்கொள்கிறவர்களைப் பற்றிப் பேசினார். ஒருவர் இன்ன இடத்திலிருக்கிற பெண்ணைத் தமக்குப் பேசி முடிக்கும்படி வேண்டுகிறார். அதற்கு மற்றவரும் ஒப்பி ரயில் செலவுகளுக்கும் பெற்றுக்கொண்டு போய்ப் பெண்ணைப் பார்த்துவிட்டு, தன் குமாரனுக்கே பேசி எற்பாடு செய்து முகூர்த்தமும் வைத்துக்கொண்டு வந்து விடுகிறார். பிறகு அந்த ஒருவரிடம் சென்று ஜாதகம் பொருத்தமாயில்லாததால் அவர்கள் ஒப்பவில்லையென்று புளுகிவிடுகிறார். இவ்விதமாகப் பிறரது பணத்திலேயே தமது காரியங்களை முடித்துக்கொள்ளுகிறவர்கள் எத்தனையோ பேர் என்றார்.

ஃ

வரவரப் பெரிய மனுஷிகளாகிற சில பெண்களைப்பற்றி ஆமவடைப் பண்டாரம் பேசினார். நாளுக்கு நாள் ஒவ்வொரு வேலையாகக் குறைத்துக் குறைத்துக்கொண்டு, தான் வீட்டுக்கு எஜமானிபோல நினைத்துக்கொள்கிறது சில பெண்களின் போக்கு. மாலையில் விளக்கு துடைக்கிற வேலையையும், காலையில் பாத்திரங்கள் தேய்க்கிற வேலையையும் தன் மகளிடத்திலே ஒப்புவித்துவிடுகிறது! கணவனுக்கு சாதம் போடுகிறவேலையையும், அவன் நீராடுகையில் முதுகுதேய்த்து அருகிலிருந்து உதவுவதையும் இன்னொருமகளுக்குக் கொடுத்துவிடுவது! ஸ்நானத்துக்கு எண்ணெய் காய்ச்சி வைக்கிறதையும் நிறுத்திப் போடுகிறது. தான் பக்கத்துவீட்டுப் பெண்களுடன் கச்சேரி செய்யப்போய் விடுகிறது இப்படியாகப் பெரிய மனிதத் தன்மைக்கு வர நினைக்கிறவர்கள் பெண்களா பேய்களா என்று ஸ்ரீமான் பண்டாரம் கேட்டார். அதற்கு அல்லா பிச்சை கணவனுக்கு இனிப்பாக நடந்து சுகிக்கத் தெரியாத ஈனத் தடிக்கட்டைகள் என்று கூறினார்.

ஃ

தாண்டவக்கோன் இத்தகைய வடபத்திரகாளிகள் நல்வாழ்வு வாழ்வதில்லை யென்றும், மேலுக்கு விருத்தியின்றி, தங்களுக்கு வேண்டியவர்களிடமும் சண்டையை விளைத்துக்கொண்டு எங்கும் மதிப்புமானம் கெட்டு, இவர்களைத் தங்களின் வீட்டுவழியே வரவேண்டாமென்று மற்றவர்கள் கேவலப்படுத்திவிட, நாறி நாற்றமெடுத்துப் போகிறார்களென்றும், புருஷனைப்படுத்துகிற பாட்டுக்குப் பிறகு படவேண்டிய அனுபவம் தப்பாதென்றும் பேசினார்.

ஃ

சிலர் தாங்கள் கொள்ளுகிற கோபத்தைப் பிறர் மதிப்பார்களென்று

கௌரவமான மோசங்களை வெளியிற் சொல்லவும் முடியவில்லை. சொல்லினும் பிறர் நம்புவதில்லை. ஓ! அவர் அப்படி செய்யக்கூடியவரல்லவே என்று பதில் சொல்லத் தொடங்குகிறார்கள்.

நினைத்து, அந்தக் கோபத்துடன் தாங்கள் எழுதவேண்டிய பதிலையும் எழுதாமல் நிறுத்திவிடுகிறார்கள். இந்தக் கோபத்தையும் அலக்ஷியத்தையும் மற்றவர்கள் பார்த்து வெறுத்தவர்களாய், அவர்களால் ஆகவேண்டிய காரியத்தை வேறு மனிதர்களின் மூலம் முடித்துவிட்டு—இன்னும் நன்றாகக் கோபித்துக்கொள்ளட்டுமென்று விலகிவிடுகிறார்கள். யோக்கியமும் சாதுவுமான மனிதரென்று முதலில் நினைத்தவர்களிடம் பிறகு பெரிய பெரிய அழுக்கு நாற்ற மூட்டைகளைக் காணும்போது இந்த மூஞ்சிக்கா இவ்வளவு மஞ்சள்—என்று மனம்விட்டுப் போகிறது என்று பிஸ்கோத் பிச்சைமுத்து கூறினர்.

ஃ

பிறரை எதிர்த்து விரோதிக்கிறவர்கள் தாங்கள் உண்மையான பரிசுத்தர்களாயிருந்து, மோசமும் ஏமாற்றமும் அடைந்தவர்களானால், அவர்கள் எதிர்த்த இடம் எவ்வளவு தான் மேன்மையான வாழ்விலிருந்தாலும் பிறகு சோதனைகள் உண்டாய்விடுகின்றது. ஒருநாளும் பிரியமாட்டார்களென்று நினைக்கும்படி யிருந்தவர்களும் பத்துத் துண்டுகளாகப் பிரிந்து விடுகிறார்கள். இப்படிப் பிரிந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பெரிய மனக்குறை பட்டவர்களாய் நொந்துவெந்து போகிறார்கள். கலகத்துக்கு முக்கியமாயிருந்தவன் தனக்குப் பிரியமானவர்களை யெல்லாம் இழந்து ஒண்டிக் கருப்பனாகிறான். இது ஒருவிதம். தாங்களும் மனதில் கபடமாகி, தங்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருப்பவர்களை ஒரு அற்ப சங்கதியில் எதிர்த்துக்கொண்டு அவர்களுக்குத் தீங்கு விளைக்க முற்படுகிறவர்களுமுண்டு. இந்த எதிர்ப்பிலே, எதிர்த்தவர்கள் மேலுக்குமேல் சோதனைகள் கண்டவர்களாய்த் தேய்ந்துத் தாழ்ந்து போக, இவர்களுக்கு நல்லதேசெய்து வந்து விரோதிகளானோர் எல்லா நலங்களுடனேயே ஓங்கி வாழ்கிறார்கள். இது மற்றொரு விதமாகும். ஆகவே, பிறரை எதிர்த்துக்கொள்வோர் பரிசுத்தர்களாயின் நலமே காண்கிறார்கள். அவ்விதமின்றிக் கபடப்பூனைகளாயிருந்து நன்றி மறந்து எதிர்த்தோர் கடைசிவரைக்கும் அழிவையே தேடி யடைகிறார்கள் என்று தொந்திப் பெருமாள் சாற்றினர்.

ஃ

எப்பொழுதும் பெருத்த வாயை யுடைய சிமோட்டிகள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே என்றைக்கும் விழுந்து கிடப்பவர்களா யிருந்தால் தான் நல்லதென்றும், ஒருசமயம் தப்பித்தவறி எந்த உறவினருடனாவது வெளியூர் செல்ல நேர்ந்து விட்டால் போன இடத்தில் தங்களின் திருவாயைத் திறந்துகொண்டு வசைகள் பாடிக் கலகமிட்டுக் கொள்ளும்படியாகி விடுமென்றும், இந்த சிமோட்டிகளை மணந்த பாக்கியசாலிகள் இவர்களை எந்த ஊருக்காவது வீட்டுக்காவது அழைத்துச் சென்றால், அங்கும் ஒரு பெருங் கலகமாகிப் பிறகு அந்த வீட்டிற்குப் போகவே முடியாமற் போய், அவ்வளவு விரோதத்தில் முடிந்துவிடு மென்றும், இத்தகைய வாய்பெருத்த துந்துபிகளையும் தர்முகிகளையும் அவர்களின் வாய் நாற்றம் வெளிப்படாமல் வீட்டிலேயேகிடந்து உருண்டு குலத்துக்கொண்டிருக்கும்படி செய்வதே மானங் காப்பாற்றிக் கொள்வதற்கு வழியென்றும் முள்ளங்கி முத்தப்பனார் பகர்ந்தார். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

பழநூர் போன்வண்டு செட்டியார்.

மதிப்புரை.

ஹரிஜனசேவை :—

12-பக்கங்களுள்ள சிறுநூல். மகாத்மா எழுதிய ஹரிஜனசேவை அறிக்கையின் ஸாராம்ஸங்களைக் கீதரூபமாய்க் கொண்டது. மதுரை ஸ்ரீமான் ஜி. எஸ். அழகர்சாமி அவர்களால் ஆக்கப்பெற்றது. பாடல்கள் இனிமையும் மதுரமும் வாய்ந்து கம்பீரமாயுள்ளன.

ஃ

நான் கண்ட கனவு :—

ஸமூகத் திருத்த நூல். மாஜி 'இந்திய மித்திரன்' ஆசிரியராய் இப்பொழுது பினங்கு Buttorworth கோலப்பிறை, 1775-கம்பம் காஜா ரோட்டிலிலுள்ள ஸ்ரீமான் B. வேணுகோபாலசாமி நாயுடவர்கள் இயற்றியது. விலை அணு 6. கிளேஷ் காகிதம், 40-பக்கங்கள் கொண்டது.

ஆசிரியரின் நடை இலக்கணத் தமிழ் வாய்ந்து இனிமை ததும்பியுள்ளது. வரதக்ஷிணை வாங்கும் கொடுமைகளை ஸ்திரீசக்தியே ஏகமனதாயிருந்து ஒருமித்து அகற்றவேண்டுமென்று மிக்க ஸ்வாரஸ்யமாய்க் கற்பனை செய்யப்பட்டுள்ளது. ஒருவிதமான முடிவும் ஏற்படாதிருப்பதை இரண்டாம்பதிப்பில் ஆக்கியோன் பூர்த்திசெய்வாரென நம்புகிறோம். வாசிக்குந்தோறும் அதிவிநோதமும் பரவசமும் தருகின்றது.

ராட்டூர் வீரன்—துர்க்கதாஸ் :—

ஓர் தேசிய நாடகம். வங்கதேசத்தின் மகா கவி பாபு துவிஜேந்திரலால் ராய் எம். ஏ. அவர்கள் இயற்றியது. ஸ்ரீமான் தினகன் அவர்கள் தமது அற்புதமான தமிழ்நடையில் மூலநூலின் சுவை குன்றாது தமிழ் மொழியில் பாஷாந்தரம் செய்வித்துள்ளார். உத்தமபாளையம் பாரதிப் புஸ்தகாலயத்தார் பதிப்பித்தது. 380-பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-4-0.

துர்க்கதாஸ் நாடகம் மகா அற்புதமாய் விளங்குகின்றது. துர்க்கதாஸ், திலோர்கான், காஸிம் இம்மூவரும் அமரத்தன்மை வாய்ந்த பூஜார்ஹமான மஹா புருஷமூர்த்திகளாவர் மஹாராணியாரின் கற்பும், க்ஷத்திரிய வீரமும், ஸகமனமும் எத்தகையோரின் மனத்தையும் உருக்கிவிடும். இந்நூல் முற்றும் அபார வர்ணனைகளும், மகத்தான அநுபவங்களும் நிறைந்து எல்லா ரஸங்களும் கூடியதாய் மிக்க அற்புதமாய் ஆக்கப்பெற்றுள்ளது. இது போன்றதொரு நாடகம் தமிழ்மொழியில் இதுகாறும் வெளிப்போந்ததில்லை. இயற்றிய பெருமை வங்க ஆசிரியருக்கே எனினும், மொழி பெயர்த்த கௌரவம் ஸ்ரீமான் தினகரருக்குரியதாகும். இந்நூல் மொழி பெயர்ப்பாகவே தோன்றவில்லை. அத்தனை ஸ்வாரஸ்யமாய் பதஜோடி

"நான் எழுதியதற்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக அர்த்தம் செய்துகொள்வதை நான் தடுக்க முடியாது. இது எனக்குப் புதிய அனுபவமல்ல" என்கிறார் மகாத்மா. நேரில் பேசும்போதே அதற்கு வேறொரு அர்த்தம் செய்துகொண்டு தடுமாறுகையில், கடிதத்தின் எழுத்துகளுக்கு எந்த மாறான பொருளையும் கற்பித்துக்கொள்ளலாம்.

னை புரிந்து. நூலின் கௌரவத்திற் குத்தகுந்த புதியதோர் அமரநடையில் ஸ்ரீமான் தினகரன் தமிழணங்கை அலங்கரித்துள்ளார். ஸமஸ்கிருதபதங்கள்சேர்ந்திருப்பது வாசகநடைக்கு மிகுமேன்மையைத் தருகின்றது. ஹாஸ்யரஸமும் மற்ற ரஸங்களும் தகுந்த இடங்களில் அற்புதமாய் அமைந்துள்ளன. வங்கதேசத்தில் தேசபக்தி ததும்பி நிற்பதன் காரணம் இத்தகைய நூல்களால்தான். இந்நாடகத்தின் மகத்தான தன்மையைக் குறித்து எவ்வளவு விவரிப்பினும் தகும். ஒவ்வொரு தமிழரிடமும் அவசிய மிருக்கவேண்டிய நூலாகும். வங்கதேசத்தின் நூல்களுக்கே ஒரு தனி மதிப்பு வைத்து வணங்கவேண்டி யிருக்கின்றது. இந்நாடகம் விரிவன்று; மிகச் சுருக்கமேயாகும். அந்த சுருக்கத்திற்குள்ளாக எத்துணையோ இன்பச் சுரங்கங்கள் நிறைந்துள்ளன வென்பதை அவரவரே வாசித்துணர்ந்தாலன்றி நம்மாற் கூறமுடியாது. இதற்கு இணையாக வேறெந்த நாடக நூலினையும் சொல்லவொண்ணாது. இதனைப் பதிப்பித்துத் தமிழுலகுக்குதவிய முயற்சியைப் பெரிதும் போற்றுகின்றோம்.

சாமர்த்தியமான தந்திரம்.

ஒருவன் எவ்வளவோ புத்திசாலியா யிருந்தபோதிலும், அதை வெளியிடாமல் அவனைவிட மூடன் வேறில்லையென்றே எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு, அதையே பிறரும் நம்பும்படி செய்துவிடுகின்றனர். ஒருவன் பிணியிலிருந்து பிழைக்கக்கூடிய நிலையிலிருப்பது தெரிந்தும், அவன் அமாவாசைக்குள்ளாகத் தீர்ந்துவிடுவானென்றே பலரிடமுங்கூறி மற்றவரும் அவ்விதமே எண்ண வைத்துவிடுகின்றனர். ஒருவன் தன்னிடம் எந்தப் பணமும் இல்லையென்று உண்மையாகவே வெளியிட்டும், அதைத் தாங்கள் அறிந்தபோதிலும், அதை மறைத்துவிட்டு, அவன் பாங்கியிலும், சர்க்கார் பத்திரங்களிலும் ஏராளமான பணத்தைப் போட்டுவிட்டு ஏதும் இல்லாதவன்போல் வேஷம் போடுவதாகப் பறையடிக்கின்றனர். அதையே பிறரும் நம்பிவிடுகிறார்கள். இவ்விதமே நிலம் நன்றாக விளையாதிருக்கும்போதே வெகு நேர்த்தியாக அருவடை நடந்துவிட்டதென்று கீழ் உத்தியோகஸ்தர்கள் ரிப்போர்ட்டுகள் எழுதியனுப்பிவிட, அதையே மேலதிகாரிகளும் நம்பிவிடுகிறார்கள்.

பெரிய மனஸ்தாபத்தை உள்ளுக்குள் வைத்துக்கொண்டு, வெளிக்கு அதை மூடிவிட்டு சாதாரணமாய்க் களங்கமின்றிக் கடிதம் எழுதுவதுபோல் அபிநயிக்கிறார்கள். அந்தக் கடிதமோ புகைப்படம்போன்று அவர்களின் நடிப்பை அப்படியே எடுத்துக் காண்பித்துவிடுகிறது.

அசூயையின் காட்சி.

(ஓர் சிறு நாடகம்.)

இடம் :—புதுத்தெரு. ஓர் ஏழை குமாஸ்தா வீடு.

வேதகிரி ஐயர் :—நான் அப்பவே சொன்னேனே. உன் தங்கை இங்கேயே இருக்கட்டும்னு; கேட்டையா என் பேச்சை? இன்று நீ வீட்டுக்குத் தூரமாய் விட்டாயே. இப்போ யார் அழறது கிளப்புக்கு மூனு ரூபா ?

சுப்பம்மா :—அவள் இருந்தால் மட்டும் நமக்கெல்லாம் இப்போ சமைச்சு போட்டுடுவாளா என்ன? அது சிறுசுதானே.

வேதகிரி :—சுற்றுவேலை எல்லாம் அவள் செய்தா, நான் சமைச்சுட மாட்டேனே ?

சுப்பம்மா :— இப்போ தான் என்ன முழுகிப் போயிட்டுது? முத்தத்திலே குழாய் இருக்கு. ஜலம் பிடித்து அரைப்படிஅரிசி களைஞ்சு வைச்சுடுங்களேன்.

வேதகிரி :— சாதம் மட்டும் என்னமா போரும் ?

சுப்பம்மா :—நான் எள்ளுப்பொடி, கொத்தமல்லி விரைப்பொடி, துவரம்பருப்புத்தூள் எல்லாம் செய்து வைச்சிருக்கேன். இஞ்சி ஊறுகாய், வடுமாங்காய் இருக்கு. தயிர் மட்டும் கூட அரைப்படி வாங்கினால் சரியாப் போறது.

வேதகிரி :— நான் ஸ்னானம் பண்ணி ஸமயல் செய்து சாப்பிடத் தான் பொழுது இருக்கு. சரியா பதினொரு மணிக்கு எல்லாம் ஆபீஸ் போகவேண்டும். உனக்கு யாரு சாதம் போடுவா ?

சுப்பம்மா :— நீங்க சாப்பிட்டு விட்டு பத்திரமாக எல்லாவற்றையும் மூடிவைச்சுட்டுப் போங்கோ ; நான் அடுத்தாத்து அலமுவை எனக்குச் சாதம் போடச் சொல்றேன்.

வேதகிரி :— ஸரி, எப்படியாவது செய். இனிமேல் நமக்கு ஸகாயமாக ஒருத்தர் பெரியவாளோ, சின்னவாளோ, மனுஷ்யாள் இல்லாதே சரிப்படாது. இந்த ஞாயிற்றுக் கிழமை ஊருக்குப் போய் எங்க அண்ணா குழந்தை பங்கஜத்தைஅழைத்து வந்துவிடுகிறேன். வயது பத்து தான் ஆகிறது. இருந்தாலும் எல்லா காரியமும் செய்யத்தெரியும். இதைப் போன்ற சந்தர்ப்பங்களுக்குக் கவலை யில்லை.

II

இடம் :— காசுக்காரத் தெரு. பாங்கர் வீராசாமி ஐயர் வீடு.

வீராசாமி :— அடீ நம்ம சீனு வந்திருக்கான் ; ஜல்தியா சமையல் பண்ணு.

ஜானகி :— சீனு — — ஆ — — யாரது ?

வீராசாமி :— அவன் தாண்டீ எங்கண்ணா பிள்ளை. பட்டனத்திலே இஞ்சினீர் ஆபீஸிலே வேலையா யிருக்கானே அவன்தான்.

ஜானகி :— ஸரி ஸரி, யாரானா என்ன ; எனக்குத் தலைவலி உயிர் போகிறது. வேணும்னா நீங்க சமைச்சுக் கொட்டுங்க. முடியாதபோனால் கிளப்பிலேயிருந்து எனக்குஞ் சேர்த்து வாங்கிக்கிண்டு வந்துடுங்கோ.

வீராசாமி :— இந்த ஒருவேளை மட்டுந்தாண்டீ. ராத்திரிக்கு அவனை ஊருக்கு அனுப்பிச்சுட்றேன். கொஞ்சம் பெரிய மனஸு பண்ணி எழுந்திரு. என் மானம்—மதிப்பு எல்லாம் உன்னாலே மண்ணாகிறதே?

ஜானகி :— நீங்க அப்படித்தான் சொல்றது. ஒரு வேளையின்னு அப்புறம் பத்து நாளோ ஒரு மாதமோ? வர்ரவா என்னமோ வீட்டைவிட்டு நகர்ரதே யில்லே. அவாளுக்குப் பொங்கிக் கொட்றதே எனக்கு உத்தியோகமாய்ப் போயிட்டுது.

வீராசாமி :— (சற்றுகோபத்துடன்) ஏண்டீ, அப்படி எத்தனை பேர் வந்துட்டா நம்மாத்துக்கு ? அதைத்தான் சொல்லித் தொலையேன்.

ஜானகி :— அதை நான் தான் சொல்லணுமா? ஒங்களுக்குத் தெரியாதாக்கும். மூணுமாசம் முழுக்க உங்க அம்மாள் வந்திருந்தா. போன மாசம் தான் உங்க தங்கை இருந்தா. இந்த மாசத்திற்கு உங்க அண்ணு பிள்ளை வந்துவிட்டான் இப்போ. அடுத்த மாசத்திற்கு உங்க தம்பி பெண் வந்துடப் போரு பெரியப்பா ஆத்திலே சீராட்றத்துக்கு.

வீராசாமி :— உனக்கேன் இவ்வளவு அல்பத்தனம் ? ஈசுவரன் நமக்கு வேண்டியது கொடுத்திருக்கிறார். கோட்டை மாதிரி இரண்டு வீடுகளும் இருபதுகாணி நஞ்சை நிலமும் இருக்கும்போது, வர்ரவாளுக்குச் சாப்பாடு போட்டா என்ன குறைஞ்சு போகும்? நீ இப்படி நினைக்க நினைக்கத்தான் நமக்கு ஒரு வீட்டிற்குக் கூட மனுஷ்யாள் வரத்துப்போக்கு இல்லாதுபோகிறது. ஒரு குழந்தை குட்டி பிறக்கவும் காணோம் !

ஜானகி:—(அழுதகுரலுடன்) ஆமாம்! என்னாலேதான் எல்லாம். நீங்க குசாலா எதுவாண்ணு பண்ணுங்களேன். சொத்தெல்லாம் சேர்த்து தர்மத்திற்குதான் எழுதி வையுங்களேன்-யாருக்கென்ன? எனக்கு வேலைசெய்யத் தள்ளல்லே இண்ணு உங்களுக்கு இவ்வளவு சோபம் வர்ரதே. நான் இனிமேல் ஒன்றும் பேசவில்லே.

வீராசாமி:—உன் தம்பி வேதகிரியையும் அவன் மனைவி சுப்பம்மாளையும் பாரு. இருவரும் எவ்வளவோ ஒற்றுமையாக இருக்கிறார்கள். அவனோ பரம ஏழை. அவனுக்கு வர்ர சம்பளம் ஒருத்தர் சாப்பாட்டிற்கே காணாது. அப்படியிருந்தும் அவாத்திலே விருந்திற்குக் குறைவேயில்லே. யாராகிலும் தினம் வந்துகொண்டேயிருக்கிறார்கள். மனம் கோணாமல் அவனும் அவாளுக்கெல்லாம் அன்னம் போடுகிறான். அவனோடுகூடப் பிறந்த உனக்கு என் இவ்வளவு எச்சில் புத்தியும் லோபித்தனமும்?

ஜானகி:—உங்கம்மா மேலே சத்தியமாய்ச் சொல்றேன். உங்க மனுஷா வந்தா நீங்க பார்த்துக்கோங்கோ. என் மனுஷா வந்தா நான் கவனிச்சுக்கிறேன். ஒரே வார்த்தை. விடுங்கோ அதோடே பேச்சை.

III

இடம்:—புதுத் தெரு; குமாஸ்தா வேதகிரியின் வீடு.

வேதகிரி:—ஏண்டீ—குட்டி பங்கஜம் எப்படியிருக்கா?

சுப்பம்மா:—அவ ரொம்ப சமத்தாச்சே. நான் எழுந்து பத்து பாத்திரம் தேய்க்கிறத்துக்குள்ளே, அவ

மதிப்பாக நினைத்திருக்கும் மனிதர்களைப்பற்றிக் கேட்கக்கூடாத விஷயங்கள் காதிலே படுகின்றன. அவற்றை நம்பக்கூடாவிடினும், அவை உண்மையே யென்று பிறகு தெரிகின்றன.

அடுப்புமெழுகி கோலம் போட்டேட்ரு. நான் சாதம் வடிக்கிறத்துக்குள்ளே கறி நறுக்கி தந்துட்ரு. மத்யான்னம் எல்லாம் புஸ்தகம் வைச்சிக்கிண்டு படிக்கிரு. தட்டிஞ முட்டிஞ காபி டீபன்கூட அவளே உங்களுக்கு ஆபீஸுக்குக் கொண்டுவந்து கொடுப்பாளே.

வேதகிரி:—அப்படியா! சந்தோஷம். குழந்தையை அதிகமாக வேலை வாங்காதே. கூடமாட ஏதாவது செய்யச்சொல்லு போரும். அதற்காக மக்குமாதிரி உட்கார்த்தியும் வைச்சுடாதே.

சுப்பம்மா:—நான் வேண்டாம்னு கூட அவதான் ஆசையா எல்லா காரியமும் செய்ருளே. அவள்வீட்டுவேலை பண்ணுதிருக்க—நாளைக்குப் பள்ளிக்கூடத்திலே சேர்த்துவிடுங்கோ. அடுத்த மாசம் முதற்கொண்டு, ஹார்மோனியம் சொல்லிவைக்கலாம். அவளை இன்னும் இரண்டு வருஷமாவது இங்கேயே வைத்துக்கொள்வோம். எனக்கு ரொம்ப உதவியாயிருக்கிருள். நல்லாப் படிக்கட்டும்.

வேதகிரி:—அடுத்த புதுத்தெருவிலே எங்க அக்கா ஜானகி, தன் ஆத்திலே நாலுநாள் குழந்தை இருக்கட்டும்னு சொன்னு. அங்கே கொண்டு போய்விட்டுடு. நாலுநாள் இருக்கட்டும். பிறகு ஸ்கூல்லே சேர்த்துட்றேன்.

IV

இடம்:—புதுத்தெரு; குமாஸ்தா வேதகிரியின் வீடு.

வேதகிரி:—இன்னும் குழந்தையைப் புதுத்தெருவிலேயிருந்து ஏன் அழைத்துக்கொண்டு வரவில்லை?

சுப்பம்மா:—நான்போய் கூப்பிட்டேன், அது வரமாட்டேன்னு சொல்றதே.

வேதகிரி:—ஏன், அப்படி?

சுப்பம்மா:—இங்கே நம்மாத்திலே எப்போ பார்த்தாலும் கூட்டமும் விருந்துகளுமாய் அதுக்கு வேலை ஜாஸ்தியாயிருக்காம். வெட்டிக்கு வரப்பட்டவாளுக் கெல்லாம் கொட்டி வேலையை அதிகப்படுத்திக் கொள்ளுகிருமாம். அங்கே துணி துவைக்க வேலைக்காரியாம். தினம் ஒரு அணு பக்ஷணமாம். ஒரு அணுவுக்குப் பூவாம். அந்த இடத்தைவிட்டு அசையமாட்டேனென்கிறதே.

வேதகிரி:—என் தமக்கையின் வழக்கம்தான் அது. குழந்தைகளை உருப்படாமல் அடிக்கிறத்திலேயே குறி அவளுக்கு. எங்க அண்ணு பிள்ளையை இப்படித்தான் கழுதையா யடிச்சுட்டா முன்னே. இப்போ பொண்ணேயும் அந்த மாதிரி செய்யத்தலைப்பட்டிருக்காப்பிலே இருக்கு.

சுப்பம்மா :— அவாளுக்குத்தான் குழந்தைகள் இல்லையே, பிறர் குழந்தைகள் நல்ல வழிக்குத் திரும்புவதில் ஏன் அவாளுக்கு இந்தக் கெட்ட எண்ணம்?

வேதகிரி:—பிறரது குழந்தைகளும் நன்ருயிருக்கக் கூடாதென்கிற அசூயைதான். தனக்கு ஒரு குழந்தையும் இல்லாதபோது பிறர் குழந்தைகள் சமத்தாகவும் புத்திசாலித்தனமாகவும் இருப்பதைக் கண்டால், அவளுக்கு அப்படியே பொங்கி வழியும் பொருமையும் துவேஷமும். நமக்கேன் பிறருடைய பேச்சு? இப்போ

இன்னொருவர் பிணியுற்றிருக்கையில் தான் உடனிருந்து கவனிக்காமற் போனது தன் மனதிற்படாமல், தான் நோயுற்றிருக்கையில் மற்றவர் வந்து பார்க்காததுமட்டும் குற்றமாகத் தோன்றுகிறது.

மூது குழந்தை பங்கஜத்தை அழைத் துவந்ததிற்குப் பலன் என்ன தெரியுமா? நாம் வேலை செய்யச்சொல்லிக் குழந்தையைப் பாடு படுத்தினேம்னு நமக்குக் கெட்ட பேயர். பாலும் வெண்ணெயுமாக ஊட்டி ஊட்டி செல்லமாக வைத்துக்கொண்டாள் என்று எங்க அக்காவுக்கு நல்ல பேயர். இதுதான் கண்டது.

சுப்பம்மா:—என்மேலே உங்கள் அக்காவுக்கு அருவைபோலிருக்கு. இவள் பவிஷிக்கு ஒருதுணை ஆள் கூடவா என்று பங்கஜத்தை அனுப்பாமல் நிறுத்திக்கொண்டார்கள்போலிருக்கிறது. இன்னும் எவ்வளவு அருவைப்பட்டாலும். நான் வணங்கித்தான் நடந்துகொள்வேன். எனக்கு யார்மீதும் கோபமில்லை.

வேதகிரி:—அக்காவுக்கு என் மேலே எப்பவும் பிரியம் தான். உன் பேரைச் சொன்னால்தான் அவளுக்குப் பிடிக்காது. நீ வருகிறவாள் போகிறவாளுக்கெல்லாம் கொட்டித் துலைக்கிற மட்டி என்று பழிக்கிருள். உன்னை எவரும் நல்ல பெண் என்று கொண்டாடுகிருர்களே என்றும் அக்காவுக்குப் பொருமை. நீ என் அக்காவின் வயிற்றில் பிறந்து அவளுடைய சொந்தக் குமாரியாயிருந்தால் இந்தப் பொருமை ஏற்படாது. அதற்கு என்ன செய்வது? நமக்கென்று ஒரு குழந்தை சொந்தமாய்ப் பிறந்தால் தான் நமக்கு உதவும். ஊரார் குழந்தை உதவாது. எதற்கும் பகவானை நம்பியிருப்போம்.

ஹேமவதி.

தேவை.

நமது அமிர்த குணபோதினிப் பத்திரிகைகளை எல்லா ஊர்களிலும் விற்பனை செய்யவும், புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்து கொடுப்பதற்கும், தக்க சாமர்த்தியம் வாய்ந்த ஏஜெண்டுகள் தேவை. முழு விவரத்துக்கு எமக்கு எழுதித் தெரிந்துக் கொள்ளலாம். நமது அமிர்த குணபோதினிக்கு ஏஜெண்டாகச் சேர்ந்து அதிக லாபம் அடைந்து திருப்திபெறுவீர்களாக.

மானேஜர்.

சதா கணவனின் மனத்தை நோகவைக்கும் மனைவியின் பிற்கால வாழ்வு பலராலும் கேவலப்படுத்தப்பட்டதாய் மதிப்பின்றி அலங்கோலமாகின்றது. தன்னிடமும் தன் குழந்தைகளிடமும் தன் கணவன் கொள்ளவேண்டிய அன்பையும் அவள் இழந்துவிடுகிருள்.

உப்புமாவைப் பொல பொலவென்று இலையில் வைப்பதைவிட ஒரு கிண்ணத்தில் வைத்து அமுக்கிக் கிண்ணத்தின் வடிவம் பதியும்படி இலையில் வைத்தால் அது எல்லோருக்கும் ஒரு குறித்த அளவாக வைத்ததுபோலாவதுடன் சிக்கனமாகவும் சிங்காரமாகவும் இருக்கும் என்கிருர் ஒரு நண்பர்.

நமது தமிழ் வைத்தியம்.

பூர்வ காலத்தில், கை பார்த்தற்குரிய அதாவது நாடிபரீக்ஷை பார்த்துத் தெளிதலான, நெடுநாடி, லகுநாடி, குருநாடி, தசநாடிஸ்தானம், அஷ்டவிதப்பரீக்ஷை முதலிய பற்பல சாஸ்திரங்களை ஐயமறக்கற்று மிகுந்த பழக்கமுள்ளவர்களாய், விதிப்படி ரோகிகளின் கரங்களைப்பற்றி, வாதாதி நாடிகளின் தன்னிலை பிறநிலை தொந்தம் பிறழ்தல் முதலியவைகளை முக்கண் கொண்டறிந்து அறிவைச் செலுத்தி, ஒவ்வொரு ரோகிகளின் ரோகங்களையும், பொறுமையோடு நிதானஞ்செய்து “உற்றானளவும் பிணியளவுங் காலமுங் கற்றான் கருதிச்செயல்” என்பதற்கிணங்க ஔஷதப் பிரயோகஞ் செய்து வந்தார்கள்.


தற்போது, இவைகளிருக்குமிடம் அறியாமல் அன்னிய பாஷாபிவிர்த்தியினாலும், ஆடைகளினாலும் டாம்பீகமான பட்டங்களைப்பெற்று டாக்டர்கள் என்ற நாமமெய்தி, அந்நியதேசங்களிலிருந்து நம் நாட்டுக்குவரும் ஔஷதங்களை அந்நியநாட்டின் வியாபாரிகளுக்கு நம் தேசத்துப் பணங்களைக் கோடி கோடியாக வாங்கிக் கொடுக்கும் தரகர்கள்போன்று மிருக்கிறார்கள். அதனால், நம் புராதன வயித்தியத்திற்குத் தாழ்வைத் தேடிக் கொண்டு டாம்பீகக் கொள்கைக்கும் உடன்பட்டுள்ளோம். நம் மூதாதைகளின் முறைகளையும் கைவிட்டு அல்ப வயதிற்காளாகித் தவிக்கின்றோம்.

இவைதான் இப்படி என்றால், நமது தமிழ் வயித்தியர்கள் பிணியாளிகளின் சரீரக்கூறுகளையும், ரோக நிதானங்களையு மறியாமல் தக்கவாறு சுத்திசெய்யாத ரஸகெந்தக பாஷாண பச்சைவெட்டு மருந்துகளைக் கொடுத்து வாய் வயறு முதலானவற்றை வேகவைத்து, உள்ள வியாதிக்குமேல் ஒன்பது உபாதிகளை உற்பத்தி செய்து நமனுலகனுப்ப நாள் பார்த்து விடுகிறார்கள். தற்காலம் இவ்வித வைத்தியர்களால், நம்முன்னோர்களின் அரிய முறைகளும் சீர்கேடடைந்து விட்டன. நமது வைத்தியர்கள் பிணியாளியிடம் அதிகரூபாய்கள் கேட்பதால், அவர்கள் கேட்லாக் மருந்துகளைத் தேடிப்போக வேண்டியதாய் முடிந்தது.

முன்காலத்தில், நரை திரை மூப்பு வாய்ந்த எண்பது வயதுள்ள ஓர் விர்த்தாப்பியருக்கிருந்த தேகபலமும், மனோபலமும், வீரியமும் தற்காலமுள்ள இருபது வயதுள்ள பாலயர்களுக்கு முற்றிலும் காணப்படவில்லை. ஆயுள் விருத்தியும் இவ்வாறே குறைந்துபோயிற்று. ஆகவே, அந்தந்த ஊர்களிலிருக்கிற வைத்திய பண்டிதர்கள் சிரத்தை எடுத்து கொண்டு சங்கமொன்று ஸ்தாபிப்பது நலம்.

ந. போ. சுந்தரேசன்.

[இச்சொற்களால் ஏதேனும் பயனுண்டாமா? நாட்டு வைத்தியரும் தம் வீட்டில் அதிக சங்கடமானால் உடனே ஆங்கில டாக்டரைத் தருவித்து விடுகிறார்!—ப-ர்.]



மகாத்மா ஒரு புரட்சிக்காரரர்—?

(‘உண்மை விளம்பி’)

உலகம் போற்றும் உத்தம குணாளரைப்புரட்சிக்காரரென்றும், நம் நாட்டிலுண்டாயிருக்கும் பல குழப்பங்கள், வேலை நிறுத்தங்கள் முதலிய சகலவித அமைதியின்மைக்கும் காரணகர்த்தாவென்றும் நம் சகோதரியாகிய ஓர் உயர்குலத்துதித்த அம்மையார் உரைத்ததை நினைக்கும்போது அயல் நாட்டார் அவரைத் தூஷிப்பதைப்பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லையன்றோ?

* * *

நான் சில தினங்களுக்குமுன் சென்னையிலிருந்து திண்டுக்கல்லுக்குப் போக எண்ணி எழும்பூரில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறினேன். உட்காரும் சீட் சற்று ஈரமாயிருந்ததால், என்னிடமிருந்த பேபரின் முதல்தாளை சீட்டில் விரித்துவிட்டு, ரயில் புறப்பட சற்றுநேரமிருந்ததால் என் மேற்சட்டையை அவிழ்த்துப் பேப்பரின்மேல் வைத்துவிட்டு பிளாட்பாரத்தில் உலாவினேன். பின் முதல் மணி அடித்ததும் வண்டிக்குள் ஏறினேன். வண்டியில் ஏறியவுடன் என் மேற்சட்டை நான் வைத்திருந்த இடத்தைவிட்டு எதிர் சீட்டில் அலங்கோலமாய்க் கிடந்ததையும், நான் விரித்துவைத்திருந்த பேப்பரின்மேல் சுமார் இருபத்தைந்து வயதுடைய ஓர் உயர்குலஸ்திரீ உட்கார்ந்திருந்ததையும் காணவே ஆச்சரியமடைந்தேன். அவ்வம்மையார் என்னை அலட்சியமாய் ஓர் பார்வை பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டார்கள். நான் என் கோட் கிடந்த இடத்திலேயே என் கையிலிருந்த பேப்பரை விரித்து உட்கார்ந்துகொண்டேன். அடிக்கடி ரயில் பிரயாணம் செய்பவனாகையாலும், ரயிலின் ஆட்டங்களெல்லாம் என் தூக்கத்தைக் கலைக்க முடியாதாகையாலும், செங்கற்பட்டில் ஆறிப்போன சிற்றுண்டிகளைச் சாப்பிட்டுப் படுத்தவன் ரயில் திருச்சி போனபோதுதான் எழுந்தேன். மற்ற வண்டிகளிலெல்லாம் கூட்டம் அதிகமாயிருந்தும் நானிருந்த வண்டியில் மாத்திரம் பிரயாணிகள் குறைவாயிருந்ததைப்பற்றி எண்ணிக்கொண்டேயிருக்கையில், “ரயில் நின்று அரைமணிநேரமாகியும் பல் தேய்க்க ஜலம் கொண்டுவராமல் பேப்பர் வாசித்துக் கொண்டிருக்கிறீரே?” என்று என்னெதிர் சீட்டில் என் பேப்பர்மேல் படுக்கைவிரித்து சய

புத்தி தீக்ஷண்யத்தில் உயர்ந்திருப்பதைக்கொண்டே சத்தியவந்தராகவாவது, சிறந்த ஒழுக்கத்தன்மையுடையோராகவாவது நினைத்துவிடக்கூடாது.

னித்திருந்த ஸ்திரீரத்னம் கர்ஜித்தாள். அவள் கால்பக்கத்திலுட்கார்ந்திருந்த அவள் கணவன்—அல்ல—வாழ்க்கைப்பட்டவன்— திடுக்கிட்டெழுந்துபோய் ஜலம் கொண்டுவந்து கொடுத்ததன்றி, காப்பி முதலிய பலகாரங்களும் வாங்கிக்கொடுத்துவிட்டு, என்னை நோக்கி, என் சார் "மகாத்மாவின் உபவாசம் எப்படி முடியுமோ?" என்று என்னை ஜோசியம் கேட்டார். நான் என்ன சொல்லலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே—"எப்படி முடியுமா! கிழடு மல்லாந்துடப் போரது" என்று என் எதிரிலிருந்த ஸ்திரீரத்னம் வாய்கூசாது சொல்லவே, பரம சாதுவாகிய அந்தம்மாளின் கணவரும், "அசடே உனக்கு ஊர் விவஹாரம் என்னதெரியும்? வாயை மூடிண்டிரு" என்று துணிந்து சொல்லிவிட்டார். அவ்வளவுதான் அம்மாள் சீறி எழுந்து உட்கார்ந்தாள். "ஊரிலே நடக்கிற கலகங்களுக்கெல்லாம் இந்தக் கிழடுதான் காரணம். பறையனைக் கோவிலுக்குள்ளே விடனுமாம், முண்டைச்சி கல்யாணம் பண்ணிக்கிணனுமாம்" என்று பலவாறு அடுக்கிவிட்டு, "வெள்ளைக்காரனில்லாவிட்டால் இன்னைக்கு இந்த இரயிலேற முடியுமா! அவன் நமக்கு செய்திருப்பதையெல்லாம் மறந்து இந்தத் திக்குப்பிடிச்ச கிழடு சொல்வறதைக் கேட்டுண்டு ஆணும் பொண்ணுமா ஊரெல்லாம் தலைவிரிச்சிண்டாடுரதுக" என்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அந்தம்மாளின் அழகிய வதனத்தில் வீசிய கோபத்தணலைப் பார்க்கச் சகியாதவனாய் பிளாட்பாரம் பக்கம் பார்க்கவும், எதிர் பிளாட்பாரத்தில் நின்றிருந்த வண்டியின்மேல் "மெட்ராஸ்—தூத்துக்குடி" என்றிருந்ததைக் காணவே, அங்கு வந்த டிக்கட் கலெக்டரிடம் விசாரித்ததில் நான் ஏறியிருந்தது "மெட்ராஸ்—தனுஷ்கோடி" வண்டியென்றறிந்தேன். நான் போகவேண்டிய ரயில் மெதுவாக நகர ஆரம்பித்தது. என் பெட்டி படுக்கை முதலியவற்றைச் சுற்றிக்கொண்டு அந்தம்மாளின் கணவரைப் பார்த்து. "ஸ்வாமிகள் ராமேஸ்வரத்திற்குப் போராப்பிலிருக்கு என்றேன்" அவர் "ஆம்" என்று தலையசைக்கவே, "அம்மாளுக்கு சமுத்திரத்தின் ஆழம் பார்க்கும் வித்தையைக் கற்றுக்கொடுங்கள்" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் நகர்ந்துகொண்டிருந்த ரயிலில் ஏறிக்கொண்டேன். நான் ஓடிய வேகத்தில்கூட "சூத்திரக் கட்டையிலே போறவன்" என்ற திவ்யசொற்கள் என் காதைத் துளைத்தன. ரயிலில் ஏறின பிறகுகூட எதிர்வண்டியைப் பார்க்கத் தைரியம் வரவில்லை.

[இத்தகைய ஸ்திரீ ரத்நங்கள் சிரஞ்சீவிகளாக வாழ்ந்து வருகையில் நம் நாட்டுக்கும், நம் குடும்பங்களுக்கும், அவர்களை மணந்த புருஷமூர்த்திகளுக்கும் வேறென்ன பாக்கியம் வேண்டும்? ஹா! மூடமே! ஹா! அஞ்ஞானந்தகாரமே!—ப-ர்.]

"நான் ஜில்லாபோர்ட் தலைவராயிருந்தபொழுது தமிழ்ப் பண்டிதர் தேவையென்று அறிவித்த சமயம் அவ்வேலைக்கு வருபவர்கள் ஆங்கிலத்தில் பேசியதையும், மனுக்களையும் ஆங்கிலத்தில் எழுதியதையும் காண நான் அதிக வருத்தமுற்றதுண்டு.

—திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள்.

புராதன மகோன்னதம்.

பாரத வருஷமென்கிற இந்தப் புண்ணிய பூமியைத் தங்கள் ஜன்ம தேசமாகப் பெற்று, அதைத் தங்கள் வாஸத்தாலும், பஸ்ம சேஷத்தாலும் புனிதமாக்கின பெரியோர்களை நம் முன்னோர்களாகக் கொண்ட நாம், அத்தகைய தேசத்தின் பூர்வீக சரித்திரத்தைக் கற்காமல் முன்னோர்களுடைய பெருமைகளை யறியாதவர்களா யிருக்கிறோம். இக்காலத்து இளைஞர்கள் சிலர் பூர்வகாலத்து இந்தியாவை இகழ்வதும், தற்காலத்து மேற்றிசைத் தேசங்களைப் புகழ்வதுமான இயல்புள்ளவர்களா யிருக்கிறார்கள். இந்த இயல்பு எத்தேசத்திலும் எந்த ஜனங்களுக்கு மில்லாத விபரீதமான இயல்பாகும். தங்களின் ஜென்ம தேசத்தை அன்புடன் நேசிக்கும் எந்த ஜாதியாரும் அத்தேசத்துப் பூர்வீக சரித்திரத்தைக் கற்று, முன்னோர் செய்த பெருங் காரியங்களின் மகிமையை யுணர்ந்து அவ்வாறு அன்பு கொண்டாடுகிறார்கள். தற்காலம் இந்திய ஜனங்கள் தன்னினைவு பெற்று தங்களுடைய பிற்காலச் சரித்திரம் பெருமைகொண்டதா யிருக்கவேண்டுமென்ற விருப்பம் மேற்கொண்டிருப்பதால், நம்முற்கால சரித்திரத்தைச் சற்றுப் பரிசோதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். புராதனமான பழமையிலும் பற்றுதல்வைக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

ஃ

அன்னிய தேசங்களிலிருந்து இந்தியாவின் பெருமையையும் வளப்பத்தையும் கேட்டு, இங்கு யாத்திரை செய்துபோன சீனர்கள், ஐரோப்பியர்கள் பலரும் இந்தியாவில் தாங்கள் கண்ட அதிசயமான சக்திகளையும், செல்வக்குறிகளையும் மகிழ்ந்து விஸ்தாரமாய் வரைந்திருக்கிறார்கள். பதினெட்டாம் நூற்றாண்டிலுங்கூட கிழக்கிலும் மேற்கிலும் பல தேசங்களுடன் இந்தியா கப்பல் வியாபாரம் செய்துகொண்டிருந்தது. இந்தியாவின் அதிசயமான செயற்கைப் பொருள்கள் அன்னிய தேசங்களுடைய அரண்மனைகளையும் மாளிகைகளையும் அலங்கரித்தன. இந்தியாவில் தொழில் செய்தவர்களின் திறமையைக் கண்டு, அத்தொழில் சிற்பமோ, சித்திரமோ, பிரதிமை செய்வதோ, சங்கீதமோ—இவைகளை அந்நியர் வியந்தனர். எந்த சாஸ்திரமானாலும், வித்தையானாலும், தொழிலானாலும் அதில் நம்முன்னோர் சாமர்த்தியசாலிகளாய் உலகத்தாரால் போற்றப்பட்டனர். மொத்தத்தில் இந்தியாவானது இருள் மூடியிருந்த உலகத்து ஜனங்களுக்கு ஞான ஒளியை ஏற்றிற்று. மனிதவர்க்கத்துக்கு ஆரிய சிரேஷ்டர்கள் தங்களுடைய மதத்தையும், சாஸ்திரங்களையும், நூல்களையும், நாடகங்களையும் கொடுத்து உதவினதல்லாமல், நிகரற்ற சௌரியத்தையும், ராஜபக்தியையும், மகோன்னதமான தேசாபிமானத்தையும் கொடுத்து உதவினார்கள். அப்படிப்பட்ட தேசம் அதன் கர்ப்பத்தில் தோன்றின மக்களின் மதிகெட்ட சுயநல துரோகத்தாலன்றி, உலகத்துச் சரித்திரத்தில் எக்காலத்தும் மங்கிப்போகாது.



ஹாஸ்ய சஞ்சீவினி



உபாத்தியாயர்:—அடே ரங்கா! நீ என் சரியாய்ப் படிப்பதில்லை?

ரங்கன்:—என் தகப்பனார் வித்வான் ஸார். வீட்டுக்கு அவர் படிப்பே போதும் ஸார்.

ஃ

நண்பர்;—அந்தக் குமாஸ்தாவுக்கு எவ்வளவு சம்பளம்?

புது கம்பெனி மானேஜர்:—இதுவரை யாருக்கும் சம்பளம் தந்ததில்லை. ஒவ்வொரு குமாஸ்தாவிடமும் இரண்டுமாதம் நன்றாக வேலை வாங்கிக்கொண்டு, பிறகு சுறுசுறுப்பு போதாதென்று தள்ளிவிட்டு, வேறு குமாஸ்தாவை நியமித்து, அவனையும் முன்போலவே தள்ளி, எவருக்கும் சம்பளம் தராமலே வேலைகளை நடத்திப்போகிறேன்.

ஃ

பிச்சு:—இந்தக் காப்பியில் பாலையே காட்டவில்லையே?

முத்து:—கிளப்பே பால்க்காட்டார் கிளப் தானே.

ஃ

உபாத்தியாயர்:—மூர்க்கமான குணமுடைய மனிதனுக்கு ஒரு உவமானம் சொல்லு.

பையன்:—ஊரார் பெற்ற பிள்ளைகளைத் தன் இஷ்டம்போல் பளீர் பளீர் என்று அடிக்கிற உபாத்தியார் தான்.

ஃ

ராமு:—உன் வீடு எங்கே?

சோமு:—கோயிலுக்குப் பக்கத்தில்.

ராமு:—எந்தக் கோயிலுக்குப் பக்கத்தில்?

சோமு:—என் வீட்டுக்கருகிலுள்ள கோயிலுக்குப் பக்கத்தில்.

ஃ

வினா;—சிக்கனம் என்பது என்ன?

விடை:—வெளியில் இரண்டு ரூபாயும், வீட்டில் வெகு செட்டாக இரண்டணாவும் செலவிடுவது!

ஃ

—“குதிரைப் பந்தயத்துக்குப் போயிருக்கிறாயா?”

—“குதிரைகள் தங்களுக்குள் எந்தப் பந்தயமும் போட்டுக்கொண்டதாகக் கேட்கவில்லையே!”

ஃ

புது மாப்பிள்ளை:—பெண்களை யடக்கியாளுகிற தெப்படி?

பழய மாப்பிள்ளை:—ஒரு நாளைக்கு அவர்களை அடக்கியாண்டால், இரண்டு நாளைக்கு அவர்களுக்கு உட்பட்டுச் சொல்லியவண்ணம் செய்ய வேண்டியிருக்கிறது.

ஃ

குமரன்:—குடிக்கூலிக்கு ஒரு வீட்டிலிருப்பதற்கும், சொந்தவீட்டிலிருப்பதற்கும் பேதமென்ன?

புஸ்தகம் இனாம் கேட்டவருக்கு, ஒவ்வொரு தினுசிலும் ஒவ்வொரு புஸ்தகம்தான் இருக்கிறதென்றும், ஒரே தினுசில் இரண்டிருந்தால் தரத் தடையில்லையென்றும் ஒருவர் பதில் கூறினார்.

மதுரன்:—குடிக்கூலி வீட்டில் எப்படி நாசம்செய்தாலும், எந்த சுவர் இடிந்துவிழுந்தாலும் கவலையில்லை. சொந்த வீட்டில் அப்படிச் செய்ய மனம் வராது. குடிக்கூலி வீட்டில் வாடகை தரவேண்டுமே என்ற விசாரம். சொந்த வீட்டிலோ சுதந்திர நினைவு.

ஃ

சுல்தான்:—பரமசிவத்திற்கு நெற்றியிலே நெருப்புக்கண் இருக்கிறதாமே? அந்த நெருப்பு அவர் முகத்தில் படாதா!

கரீம்:—முகத்தைச் சுடாமலிருப்பதற்குத் தான் தலையில் (வாட்டர் டாங்க்) கங்கையை வைத்திருக்கிறரே!

ஃ

காமி:—இப்போது உனக்கு என் மீது இருக்கும் ஆசை எப்போதும் குறையாதே!

தாசி:—தங்களிடம் பணம் குறையாதிருந்தால் ஆசையும் குறையாதுதான்.

காமி:—என் யௌவனம் மாறிப் போனுல் அப்போது ஆசை குறையுமோ!

தாசி:—கிழட்டுப் பிணமாயிருந்தாலும் சரி, பணமிருந்தால் ஆசை குறையாதுதான்.

ஃ

வினு:—நெருங்கிய நேசம் என்ருல் என்ன அருத்தம்?

விடை:—எதிலும் பட்டுக்கொள்ளாமல் சிரித்துப் பேசிப் பக்குவமாய் அனுப்பிவிடுவது. ஏதாவது கேட்டால் அதற்கு மௌனமாயிருந்துவிட்டு வேறு பேச்சை ஆரம்பித்துக் கொள்வது! ஐயோ! இருந்தால் கொடுக்கமாட்டேனு என்று கண்ணைத் துடைத்து அனுப்புவது. நாற்காலியிலிருந்தபடியே தனது தொடைகளின் கனத்தைக் கொஞ்சம் கஷ்டத்தோடு தூக்கி, தலையைச் சிறிது ஆட்டி, போய் வருகிறீர்களா என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டு உட்கார்ந்துகொள்வது.

ஃ

புளியோதரை:—ஓ! தயிர் சாதமே! உன்னைப் புசித்தால் உடனே ஜலதோஷம் பிடித்துக் கொள்கிறதாமே?

தயிர்சாதம்:—எப்போதோ ஒருவருக்கு என்னுல் ஜலதோஷம் பிடித்தாலும், உன்னைப்போல வயிற்றுக் கோளாறையும், வயிற்றுப் போக்கையும் நான் உண்டாக்குகிறதில்லை.

ஃ

துப்பன்:—எந்த க்ஷேத்திரத்தில் என்ன உற்சவம் நடந்தாலும் அங்கே ஓடிவிடுகிறீரே? ஒரு கல்யாணம் செய்துகொண்டு வீட்டோடு கிடக்கிறதுதானே?

பெருமாள்;—எனக்கு விவாகமே வேண்டாம்.

துப்பன்:—ஓ! தெரிந்தது! நீர் உற்சவத்திற்கென்றுபோகிற ஒவ்வொரு ஊரிலும் 'ஒன்றை' ஏற்படுத்திக் கொண்டிருக்கிறுய்போலிருக்கிறது. அப்படியா சங்கதி?

ஃ

வேதவல்லி:—நீ பால் வியாபாரம் செய்கிறுயே, அதில் என்ன லாபம் சம்பாதித்தாய்?

வீட்டில் எந்த சங்கதியின் மூலமாய்ச் சண்டையுண்டாகுமோ அதைத் தடுக்க வழி தேடுகையில், அந்த வழியின் மூலமாகவே மற்றொரு சண்டையும் தோன்றிவிடுகிறது.

நித்தியவல்லி:—நான் ஊற்றும் தண்ணீர் அளவுதான் லாபம்.

ஃ

வேணு:—அவருக்கு இன்னும் நீ பதில் எழுதவில்லையா?

நாணு:—என் செய்வது, ஒரு கார்டின் விலை முக்காலணுவல்லவா?

ஃ

வினு:—வீட்டுக்காரன் இன்னார், விருந்தாளி இன்னார் என்று எப்படி அறிவது?

விடை:—இலையில் சாதத்திற்கு நெய் ஊற்றுகையிலே போதும் போதும் என்று சொல்லுகிறவனை வீட்டுக்காரனென்றும், எவ்வளவு நெய் ஊற்றினுலும் ஜாடையாக மௌனமாயிருப்பவனை விருந்தாளியென்றும் தெரிந்துகொள்ளலாம்.

ஃ

சேஷி:—ஏண்டி காமாக்ஷி உன்னை எத்தனைதடவை கூப்பிட்டேன். ஏன் என்னெடு படுத்துக்கொள்ள வரவில்லை?

காமாக்ஷி:—நான் என்ன செய் வேண்டியம்மா. அவர் தன்னேடேயே இருக்கவேணுமென்று சொல்லிவிட்டாரு. நானும் வரமுடியவில்லே.

ஃ

முருகன்:—நம்மவருக்கெல்லாம் உபதேசம் செய்யும் சென்னைப் பத்திராசிரியர்கள் அங்கே ஒற்றுமையாயிருக்கிறார்களா?

அருகன்:—அந்த நாற்றத்தை வெளியில் அவிழ்க்காதே. ஒவ்வொரு பத்திராசிரியரும் தத்தம் பெருமையில் முழுகிப்போயிருப்பார். எப்படி இன்னும் அதிகமாய்ப் பணம் சேர்ப்பதென்பதே ஒவ்வொருவருக்கும் பெரிய யோசனை. பத்திராசிரியர்களிலே ஒருவருக்கு இன்னொருவர் மேல் எந்த அன்பும் கிடையாது. அவர் 'மூஞ்சி'யின் அடையாளம் கூடத் தெரியாது. ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வதும் கிடையாது. அரசாங்கத்தை மகா கண்டிப்பதுபோல முதல்வரியைக் காரமாக எழுதுவார்கள். பிறகு நடுவிலும் கடைசியிலும் வளவளா என்று பல திசைப் போக்காய் ஜாடையாக நழுவ விட்டு விட்டுத் தங்கள்மீது எந்தக் குற்றமும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வார்கள்.

ஃ

பொன்னப்பன்:—இப்போது எங்கு பார்த்தாலும் விகடப் பத்திரிகைகளாக இருக்கிறதே! காசுக்கு அதிக கஷ்டமாயிருக்கிற இந்தக் காலந்தான் விகடத்துக்குத் தகுந்த காலமோ?

நல்லப்பன்:—சென்னப் பட்டினத்து வேடிக்கை தெரியாதா? ஒருவர் ஒரு புஸ்தகம்போட்டுக் கொஞ்சம் பணம் தேடிவிட்டால், எல்லோரும் அதைப்போன்ற புஸ்தகத்தைப் போடப் புறப்பட்டு விடுவார்கள்! ஒருவர் ஒரு விகடப்பத்திரிகையில் பேர்வாங்கினுல் எல்லாரும் ஒவ்வொரு விகடப் பத்திரிகையைத் தொடங்கிவிடுவார்கள். தமிழ் நாட்டிற்கு மஹா விகடதூதன் பத்திரிகைதான் முதல் ராஜாதி ராஜா. அதற்குப் பிறகு தோன்றியதும், மறைந்ததும் இப்போது புறப்பட்டிருப்பதுவும் எவ்வளவோ! எத்தனை நாளைக்கோ!

சிலருக்கு நேரில் அன்புடன் நடந்துகொள்ளத் தெரிகிறது. ஆனுல் கடித மூலமாக அந்த அன்பைக் காண்பித்துக்கொள்ளத் தெரிகிறதில்லை. சிலருடைய கடிதங்கள் கற்கண்டுக் கட்டிகளாக இருக்கின்றன. அவர்களுடைய உள்ளத்திலோ அன்பின் பசையே அரிதாகின்றது.



நமது கதாப் பிரஸங்கி.

பிரிந்த இரு நண்பர்கள்.

'நீ என்ன இப்படிப் பேசுகிறாய்? கொஞ்சமாவது நமது ஜனங்கள் என்ற விசுவாச நினைவு உனக்குக் காணோமே. ஆலயப்பிரவேசம் கூடாதென்பதற்கு அர்த்தமேயில்லை. மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலில் நாடார்கள் பிரவேசிக்கக் கூடாதாம். ஈரோட்டில் ஈசுவரன் கோவிலில் வாணியர்கள் புகக்கூடாதாம். இந்த நாடார்களும், வாணியர்களும் பெரிய க்ஷேத்திரமான ஸ்ரீரங்கம் கோவிலில் புகுந்தால் தோஷமில்லையாம்! ஸ்ரீரங்கத்தில்மட்டும் நுழையலாமாம்! மற்ற இடத்தில் பிரவேசிக்கக்கூடாதாம்! இதென்ன கட்டுப்பாடோ சாஸ்திரமோ தெரியவில்லை. என் பிரிய நடராஜா! எங்கள் இனத்தில் நல்லவர்கள் இல்லையா? பக்திமான்கள் இல்லையா? ஸனாதனஹிந்து தர்மத்தை என்னால் கூடியவரை சிரத்தையாகவே அனுஷ்டித்து வருகிறேன். உனக்கு முன்னாலேயே யான் எழுந்து நீராடுகிறேன். உன்னைப் போலவே காலையிலும் மாலையிலும் ஈசனைத் துதிக்கிறேன். மகாத்மாஜீயினுடைய உபதேசப்படி தினந்தோறும் பகவத்கீதையைப் படித்து அதனுடைய அருஞ்சுவையை அனுபவித்து வருகிறேன். இவ்வளவும் செய்தும் இவ்வூரின் ஆலயத்திலுள்ள புவனேச்வரரின் தரிசனம் மட்டும் எனக்குக் கிட்டவில்லை. நான் ஆலயத்துக்குப் போகக்கூடாத ஆதிதிராவிட ஜாதியாம்! இவ்வளவு படித்து முன்னேற்றமடைந்த நீயும் உங்களின் இனத்தினர் பக்கமே சேர்ந்து பேசுகிறாய்? இது நீ படித்த படிப்புக்கு அழகல்லவே.'

நடராஜன்:—ஏதேது, அண்ணாசாமி! இன்று உன்னுடைய பிரசங்கம் கரைகடந்து போய்விட்டது? நானும் உனக்குச் சிறிதும் பின்வாங்கப் போவதில்லை. ராஜீய விஷயத்தில் நம்மிருவருக்கும் சிறிதும் அபிப்பிராயபேதமில்லை என்பது உண்மையே. மகாத்மா காந்தியைப் பூர்ணமாக விசுவாசிப்பதிலும் உன்னைவிட நான் குறைந்தவனன்று. ஆனால். மத சம்பந்தமான விஷயங்களில் அவர் தலையிடுவதை யான் கண்டிக்காமல் இருக்கமுடியாது. ஸனாதன தர்மத்தைத் துலைக்க முயன்ற எவ்வளவோ இயக்கங்கள் நசித்துவிட்டன. அதைப்போலவே இந்தக் கிளர்ச்சியும் நசித்துவிடுவது திண்ணம். வர்ணாசிரம தர்மத்தைப் புகழ்ந்து கூறிவிட்டு அதே வாயினால் தீண்டாமை வழக்கத்தை உதறி எறியவேண்டுமெனக் கூறும் ஒருவருடைய தர்க்கபுத்தியை யான் சிலாகித்துக் கூறமுடியாது.

வீட்டுக்காரியினுடைய மூடத்தனமும் பிடிவாத புத்தியும்—குடித்தனத்தில் அவள் செய்கிற பிழைகளையும் தாறுமாறுகளையும் அவள் உணர்ந்து திருந்தாதபடி செய்துவிடுகிறது.

மகாத்மாவினுடைய வர்ணாசிரம தர்மத்தின்படி அதில் தீண்டாமைக்கு இடம் கிடையாது; உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி இல்லையா? இதென்ன வர்ணமோ; ஆசிரமமோ? யானறிகிலேன். மத விஷயத்தில் நுழையாமல் ராஜீயத் துறையிலேயே மகாத்மா காந்தி நிற்பாராயின் இந்தியாவுக்கு விசேஷ நன்மையாகும்.

அண்ணாசாமி:—ஐயோ! இவ்வளவு படித்து முன்னேற்றமடைந்த நீயும் இந்தக் குறுகிய நோக்கத்திற்கு ஆளானதைக்கண்டு யான் மனங்கலங்குகிறேன். நீதான் ஒரு சொல்லில் உன்னுடைய நிலைமையைக் கூறிவிட்டாயே! உன்னுடன் இனி வாதாடுவதில் யாது பயன்? ஆனால், ஸ்வாமி விவேகானந்தர் பிராம்மணர்களுக்குச் சொன்ன புத்திமதியை யான் உனக்கும் கூறவேண்டும். உங்களிடம் நமது முன்னோர்களுடைய மகிமை சற்றும் இல்லை என்பது வெளிப்படை. அங்ஙனமிருந்தால் அதை வெளிக்குக் காட்டுங்கள். அந்தப் புராதன மகிமையைப் பெறாத நீங்கள் உங்கள் கர்வத்தை விட்டொழித்து ஞானாலயத்தின் கதவுகளை அனைவருக்கும் திறந்துவிடுங்கள்.

நடராஜன்:—அதெல்லாம் கிடக்கட்டும் நண்ப! என்ன சொல்லினும் என் மனஉறுதியை மாற்றமுடியாது. கோயிலினுள்ளும், பிராம்மண அக்கிரகாரத்திலும் நீங்கள் பிரவேசிக்கலாமென்பது பகற்கனவேயன்றி நடக்கக் கூடிய காரியமல்ல. மேலும், கடைசி முறையாக உனக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இதுவரையில் நாமிருவரும் ஒரே கலாசாலையில் பயின்று வந்ததால் சேர்ந்து உட்கார்ந்துகொண்டு சம்பாஷித்தும் உறவு கொண்டாடியும் வந்தோம். இதன் முடிவு காலம் நெருங்கிவிட்டது. யான் இனிக் குடும்பவாழ்க்கை நடத்தவேண்டும். எனவே நம்மிருவருக்கும் இனி அவ்வளவு அன்னியோன்னியமும் உறவும் இருப்பது கடினம். இதனால் உன்னிடம் வெறுப்பு ஏற்பட்டுள்ளது என எண்ணாதே. அவரவருடைய தொழிலுக் கேற்றபடி நடந்துகொள்வதே உலக முறையாகும் வீணாக அதர்ம வழி சென்றால் அழிவேற்படுவது திண்ணம். நீயும் மற்ற மூடர்களைப்போன்று கூக்குரலிடாதே. வேண்டுமாகில் சட்டசபையில் ஒரு நியமனம் பெறுவது கடினமல்ல; அதைப்பெற்று புத்திசாலியாகப் பிழை. அங்ஙனமின்றி ஸனாதன தர்மத்தைத் தலைகவிழ்க்கப் புறப்பட்டாலோ நீ வீணாக நசித்துவிடுவாய். இதுவே யான் உனக்குக் கூறும் கடைசி உபதேசமாகும்.

ஃ

புவனபுரி தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒரு சிறிய நகரமாகும். அவ்வூரில் காவிரிநதி தெள்ளிய நீருடன் பாய்ந்து செழிப்பைத் தருகிறது. அந்நதியின் கரையில் மிகப் புராதனமான புவனேச்வரரின் ஆலயம் உள்ளது; அவ்வாலயம் பழைய தமிழ் அரசர்களால் நிர்மாணிக்கப்பட்டது. அக்கோயிலின் சுவர்களிலெங்கும் பல சாஸனங்களை இன்றும் காணலாம். அங்கு வீற்றிருக்கும் ஈச்வரர் கண்கொள்ளாக் காக்ஷியாகும். அவ்வூர் பிரசித்தமான புண்ணியஸ்தலமாகும்.

பேருக்கு மனைவியும் புருஷனும்தான். ஆனால், உள்ளுக்கோ கணவன் செய்த கொடுமையை மனைவி மறப்பதில்லை. மனைவியின்மீது ஏற்பட்டுவிட்ட வெறுப்பைக் கணவனும் கைவிடுவதில்லை. அவளை விலக்கவும் முடியாமல் குழந்தைகள் வேறே பிறந்துவிடுகின்றன. சில இடங்களில் எஜமானனும் வேலைக்காரனும் இவ்விதமே யிருக்கின்றனர்.

புவனபுரியில் மிகப் பெரிய மிட்டாதார் ஸ்ரீமான் சிவசங்கரய்யர் என்பவர். அவருக்குப் பல பட்டங்கள் உண்டு. கலெக்டர் துரைக்கு ஒரு விருந்து நடத்தியதற்காக 'ராய்பஹதூர்' என்ற சர்க்கார்பட்டமும், கும்பகோணம் சங்கராசாரியருக்குப் பூஜை செய்ததற்காக 'வித்தியா பூஷணர்' என்ற பட்டமும், சிருங்கேரி சங்கராசாரியருக்குச் செய்த மரியாதைக்காக 'தர்மபரிபாலனர்' என்ற பட்டமும் அவருக்குக் கிடைத்துள்ளன. இதைத் தவிரப் புரோகிதர்களால் அவருக்குப் 'பெரிய யஜமானர்' என்ற பட்டமும், சோம்பேறிப் பரதேசிகளால் 'அன்ன ராஜா' என்ற பட்டமும் அளிக்கப்பட்டுள்ளன. அவர் வீட்டைப் 'பெரியாரகம்'என்றே அவ்வூரில் குறிப்பிட்டுப் பேசவேண்டும். புவனபுரி மிட்டாதார் ராய்பஹதூர் வித்தியா பூஷண தர்ம பரிபாலன ஸ்ரீமான் சிவசங்கரய்யர் வீட்டின் வழியே எவரும் செருப்புடன் நடந்து செல்லக்கூடாது.அவ்வூருக்கு அவரே அரசன்போலிருந்தார்.

சிவசங்கரய்யருக்கு நடராஜன் என்ற ஒரு புத்திரனுண்டு; அவன் பி. ஏ. வரையில் வாசித்துவிட்டு, குமாஸ்தா வேலையைத் தேடியலையாமல் தகப்பனுக்கு உதவி செய்துகொண்டு வீட்டிலேயே இருந்துவருகிறான். அவன் நல்ல புத்திசாலியாயினும், மிக முறட்டு வைதிக கோஷ்டியைச் சேர்ந்து அதன் குறுகிய நோக்கத்தை முழுவதும் பெற்றவன்.

அதேஊரில் அண்ணுசாமி என்ற ஆதிதிராவிட வாலிபன் ஒருவன் நடராஜனுடன் சேர்ந்து பி. ஏ. வரையில் படித்துவந்தான். இவ்விரு வாலிபருக்குமே முன் எழுதியுள்ள சம்பாஷணை நடந்தது. அண்ணுசாமி மிக நுண்ணறிவு வாய்ந்த நற்குண சிகாமணி; மதப்பற்றுள்ளவன். பொறுமையும் சாந்தமும், விசாலபுத்தியும் உடையவன்.

இந்த சம்பாஷணைக்குப் பிறகு அண்ணுசாமியை அவ்வூரில் காண முடியவில்லை. ரங்கூனில் ஒரு தொழிற்சாலையில் அவன் வேலை பார்த்து வருவதாக வதந்தி கூறுகிறது.

ஃ

வருடங்கள் பன்னிரண்டு கழிந்தன. புவனபுரியின் வாழ்க்கைச் சக்கரம் பழையபடியே சென்றுகொண்டிருந்தது. காவிரிநதியும், சூரியவெப்பமும். புவனேச்வரரின் லிங்கமும் முன்போலவேதான் இருந்தன. மாந்தரிடையே சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஸ்ரீமான் சிவசங்கரய்யர் காலமாய் இரண்டு வருஷங்கள் ஆய்விட்டன. இப்பொழுது அவருடைய ஸ்தானத்தில் ஸ்ரீமான் நடராஜய்யரே வீற்றிருக்கிறார். இவரும் தனது தகப்பனைப்போலவே அதிகாரதோரணை செலுத்தி வருகிறார்.

இவ்வருஷத்தில் அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை ஏற்படுத்திப் புராதனமான கோயில்களிலுள்ள சாஸனங்களை ஆராய்ச்சி செய்யும்படித் தூண்டினர்கள். இந்தியதேச சரித்திரத்தை உண்மையாக எழுதும்பொருட்டு இந்த முயற்சி செய்யப்பட்டது. சென்னை சட்டசபையில் இதைப்பற்றி விவாதம் நடந்தது. ஸ்ரீமான் சாந்தமூர்த்தி ஐயர் கொண்

தன் குழந்தையினிடத்தில் தன் கணவனுக்கு அன்போ வெறுப்போ தோன்றுவது, தான் அவனுக்கு நடந்துகொள்ளும் விதத்தைப் பொறுத்திருக்கிறது.

டுவந்த பிரேரணை சட்டசபையில் நிறைவேறிவிட்டதன் பயனாகவே இக்கமிட்டியானது நியமிக்கப்பட்டது இக்கமிட்டிக்கு அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் யசோதபாலன் என்பவர்.

19—வருஷம் மார்ச்சுமீ 18ம் தேதி பிரசுரமான 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் இச்செய்தி வெளியானது. 'ஸ்ரீமான் யசோதபாலன் என்பவரைத் தமிழ் நாட்டினர் அறிந்திருக்கமாட்டார்கள். அவர் தக்ஷசீலா நகரத்தில் Director-general of Archealogy யாய் உள்ள ஸர் ஜான் மார்ஷல் என்ற பிரபலருக்கு வலது கை போன்றவர். தக்ஷசீலா நகரத்தில் இருந்த பல சிலா சாஸனங்களை ஆராய்ச்சி செய்து இந்தியதேச சரித்திரத்தைப் புதிப்பித்தெழுதுவதில் அதிகக் கியாதிபெற்றவர். அவருக்கு இந்தியாவில் உள்ள பாஷைகள் யாவற்றிலும் பயிற்சியுண்டாம். முக்கியமாகத் தமிழ்ப்பாஷையில் நல்ல பாண்டித்தியமாம். தமிழ் நாட்டினருக்கு அவர் செய்யப்போகும் உதவி மறக்கக்கூடியதல்ல. அவரது வரவு நல்வரவாகுக. அவரது முயற்சிகள் சிறந்த பயனளிக்குமாக!'

இந்த விளம்பரத்தின்கீழ் இவ்வாராய்ச்சிக் கமிட்டியார் சென்று பார்க்கக்கூடிய ஆலயங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. அவைகளில் மிகப் புராதனமான புவனேச்வரரின் ஆலயமும் ஒன்றாகும். புவனபுரியில் இச்செய்தி அதிக பரபரப்பைத் தந்தது. அவ்வூரின் கோயில் தர்மகர்த்தா நமது ஸ்ரீமான் நடராஜய்யரேயாவர். எனவே, கமிட்டியாரை வரவேற்று உபசரிக்கும் பொறுப்பு அவரையே சேர்ந்துவிட்டது. புவனேச்வரரது ஆலயத்தின் கர்ப்பகிருகத்தின் சுவரில் ஒரு முக்கியமான சிலாசாஸனம் இருப்பது எவ்விதமோ வெளிவந்துவிட்டது. இப்பொழுது அக்கமிட்டியினரை கர்ப்ப கிருகத்திற்குள் இட்டுச் செல்லவேண்டுமே என்ற கவலை அவ்வூர் பிராம்மணரைப் பிடித்துக் கொண்டது. அதிலும் ஸ்ரீமான் யசோதபாலன் எந்த ஜாதியினரென்பதை யாவராலும் அறிந்து கொள்ளக் கூடவில்லை. யசோதபாலன் என்பது கிருஷ்ணரின் நாமமேயாதலால் அவர் ஹிந்துமதத்தினராகவே இருக்கவேண்டுமென்றனர் ஒரு சாரார். மற்றவர் ஜீஸஸ் பால் (Jesus Paul) என்ற கிருஸ்துவப் பெயரே மருவி யசோதபாலன் என ஆயிருக்கிறது என்றனர் ஒரு சாரார். சென்னையிலிருந்துவந்த ஒரு கனவான் தான் ஸ்ரீமான் யசோதபாலனை நேரிற் பார்த்ததாகவும் அவரது தோற்றத்திலிருந்து இன்ன ஜாதியினரைச் சேர்ந்தவரென்பது தெரியவில்லை எனவும் உறுதி கூறினர். கடைசியாக, ஸ்ரீமான் நடராஜய்யர் கம்பீரமான குரலில் 'அவர் யாராயிருப்பினும் அவமரியாதை செய்வது கூடாது. அவரை உள்ளே அழைத்துச்சென்று தானாகவேண்டும்' என்று கூறிவிட்டார். யாவரும் அதையே ஒப்புக்கொண்டு விட்டனர்.

ஃ

ஜூன் மாதம் 26-ந் தேதியன்று சிலாசாஸன ஆராய்ச்சிக் கமிட்டியினர் புவனபுரியை அடைந்தனர். அன்று அவ்வூர் மிகுந்த உற்சாகமாக இருந்தது. எங்கும் தோரணமும் வரவேற்பு வளைவுகளுமே நிறைந்திருந்தன. ஸ்ரீ யசோதபாலனும் மற்ற நான்கு கனவான்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். கோயில் மிகு ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஊருக்குத் தலைவரான ஸ்ரீமான் நடராஜய்யரே முன்னின்று அனைவரையும் வரவேற்றார். முதலாகக் கோயிலைச் சுற்றியிருந்த புராதன இடங்கள் ஆராய்ச்சியிடப்

பட்டன. ஆலயத்தினுடைய கர்ப்ப கிருகம் ஒன்றே எஞ்சி நின்றது. அங்கு நுழையும்பொழுது காலிலுள்ள பூட்ஸை யசோதபாலன் எடுத்துவிட்டார். அவருடைய முகத் தோற்றத்தினின்றும் அவருடைய மதத்தை நிர்ணயிக்கமுடியாது சஞ்சலித்திருந்தவர்களுக்கு இது வெகு ஆச்சரியமாக விருந்தது. ஆனால், முன்பு ஒரு தடவை சென்னையிலுள்ள கிருஸ்துவக் கோயிலினுள் யசோதபாலனைக் கண்டிருந்த ஒரு கனவானுக்குமட்டும் ஒரு கிருஸ்துவன் இவ்வளவு மரியாதை காட்டுகிறானென்று மிக உற்சாகமாய் இருந்தது. ஆலயத்தினுட் சென்ற யசோதபாலன் அரைமணி நேரம் தன்னை மறந்து ஈசனைத் துதித்து நின்றார். ஆனந்தபாஷ்பம் ஆறுய்ப் பெருகிற்று. அந்தப் பரவச நிலையினின்றும் விழித்தெழுந்ததும் 'அடியார்க்குமடியேன்' என்ற பெயரால் ஸஹஸ்ரநாம அர்ச்சனை நடத்தினர். பிரசாதத்தை பக்தி சிரத்தையுடன் வாங்கிக்கொண்டார். மகா சாந்தகுணசீலராயும், உத்தம பக்தனுகவும் அவர் விளங்கினர்.

அங்கு ஆராய்ச்சி முடிந்ததும் 'கல்யாணமண்டப'த்தில் அனைவரும் வந்து கூடினர். அங்கு கமிட்டியினருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. ஸ்ரீமான் நடராஜய்யர் அனைவருக்கும் மாலையிட்டார். கடைசியாக, யசோதபாலன் எழுந்து நின்று கம்பீரமாகக் கூறலானர்.

'ஸ்ரீமான் நடராஜய்யரே! கனவான்களே! எனக்கும் எனது நண்பர்களுக்கும் இன்று நீங்கள் செய்த உபசாரமும், அளித்த வரவேற்பும், காட்டிய அன்பும் எங்களை ஆனந்தசாகரத்தில் ஆழ்த்திவிட்டன. எவ்விதம் தான் எங்களது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதென்பது எனக்குப் புலப்படவேயில்லை. எங்களது சரீரம் முழுவதும் நன்றியெனும் ஒரே உணர்ச்சியே பரவி நிற்கிறது. உங்களது அழகியகிராமமும், அதனுடைய காக்ஷிகளும், புராதனமான இக்கோயிலும், இங்கு வீற்றிருக்கும் ஈசனும் எங்களைப் பரவசப்படுத்திவிட்டன. இன்றையதினம் யாங்கள் அனுபவித்த ஆனந்தத்தை என்றும் மறக்கவே மாட்டோம். யாங்கள் வந்தகாரியம் இனிது நிறைவேறிற்று. இங்குள்ள சிலாசாஸனங்கள் மிகவும் முக்கியமானவையேயாகும். இதைப் பற்றி நாங்கள் ஆராய்ச்சிசெய்து நாளடைவில் அறிக்கையொன்று வெளியிடுவோம்.

கனவான்களே! இப்பொழுது என்னுடைய தனிஹோதாவில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அந்த ஆவலை என்னால் கூடியவரை அடக்கிப் பார்த்தும் முடியவில்லை. உங்களுக்கும், முக்கியமாக உங்களுடைய தலைவரான ஸ்ரீமான் நடராஜய்யருக்கும் மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கக்கூடிய சில விஷயங்களை யான் இப்பொழுது வெளியிடப்போகிறேன். புவனபுரி எனக்குப் புதிய ஊர் இல்லை. இவ்வூரிலேயே பிறந்து இதே காவிரிநதியின் தண்ணீரை அருந்தி வளர்ந்த இவ்வூர் வாசியான பழைய அண்ணுசாமியே யான். உங்களூர் மிராசுதாரரான ஸ்ரீமான் நடராஜய்யருடைய அருமைநண்பனுவேன். தீண்டாத ஜாதியினரை ஆலயத்தி

நீங்கள் ஊருக்குப் போங்கள், நான் எல்லாம் செய்து அனுப்பிவைக்கிறேன் என்கிறீர்களே தவிர, பிறகு தாங்கள் கூறிய வாக்குறுதிகளை மறந்துவிடுகிறீர்கள்.

னுள் பிரவேசிக்கச் செய்யும் விஷய மாக எனக்கும் அவருக்கும் ஒருநாள் விவாதம் எற்பட்டது. அதனுல் மன முடைந்த யான் அன்றிரவே இவ் ஆரைவிட்டுப் புறப்பட்டு வடக்கே சென்று விட்டேன். என் பெயரை யும் அன்றே மாற்றிக்கொண்டேன். வட இந்தியாவிலுள்ள சகலமான க்ஷேத்திரங்களேயும் தரிசித்துக் கொண்டேன். கடைசியாகத் தக்ஷ சிலா நகரத்தில் எனக்கு வேலே கிடைத்தது. ஆனுலும் எனது பிறந்த ஊரின் கண்ணுள்ள ஆலயத்தில் வீற் றிருக்கும் ஈசனேத் தரிசிக்கவேண்டு மென்ற ஆசை தீவிரமாக இருந்தது. அந்த இச்சை இன்றே பூர்த்தியா யிற்று. எனது ஜன்மமும் இன்றே சாபல்யமாயிற்று.

இதினின்றும் நீங்கள் கிரகிக்க வேண்டிய நீதியொன்றுண்டு. தீண் டாத ஜாதியினரைக் கடவுள் சந்நி தானத்தில் வரவொட்டாது தடுப்பது மிகவும் பாபமாகும். பறையனுன காளியை பிராம்மணர் அக்கிரகாரத் தில் வரவொட்டாதபடி தடுக்கும் மனிதர் அவன் கிறிஸ்துவமதத்தைத் தழுவி ஜான் காளியாய் விட்டால் அவனேத் தடுப்பதில்லே. பிராம்மண வீதி வழியே பன்றிக்கும் நாய்க்கும் செல்ல இருக்கும் உரிமை உங்களு டைய மனித சகோதரருக்கு இல் லேயா? இதைவிட வெட்கக்கேடு வேறென்ன வேண்டும்? உங்களுடைய மதத்தைச் சேர்ந்தவர்களேயே இவ் வ னம் நடத்திவிட்டு, அவனேப் பிறமத த்தை நாடும்படி செய்வதுதான் அழகோ? அவ்விதமே எனது மதம் இன்னதென்று நீங்களறியாதபோதி லும், யான் அதிகார தோரணேயுடன் வருவதால் என்னேக் கோயிலுக்குள் இட்டுச்செல்ல நீங்கள் தயங்கவில்லே. திருச்சியில் யானும் எனது நண்பர் நடராஜய்யரும் படித்துவந்த சமயம் வைஸ்ராய் பிரபு அங்கு விஜயம் செய்தபொழுது அவரைத் தொட்டி லில் வைத்து மலேக்கோட்டையின் உச்சிக்கு எடுத்துச்சென்று, அவரைக் கோயிலின் உச்சியிலும் ஏற அனு மதித்தனர். அன்னிய மதத்தினருக்கு இருக்கும் உரிமை உங்களுடைய சகோதரருக்கு மறுக்கப் படுகி றதே. இதென்ன நியாயமோ? இனி புவனேச்வரரின் ஆலயத்திலாவது இந்தக் கொடுமை வேண்டாம். இது வே யான் உங்களுக்குச் செய்து கொள்ளும் வேண்டுகோள்.'

ஸ்ரீமான் நடராஜய்யரது கண் களினின்றும் நீர் ஆருய்ப் பெருகி யது. அடுத்த நிமிஷம் அவர் யசோத பாலனே ஆலிங்கனம் செய்த நிலேயில் காணப்பட்டார்.

ஃ

சென்ற வாரம்தான் யான் புவன புரி சென்று வந்தேன். இப்பொழுது புவனேச்வரரின் ஆலயத்தின் வெளி ப்பிராகாரத்தில் உள்ள ஒரு மண்ட பத்தில் ஆதிதிராவிடச் சிறுவர்களுக் காக ஒரு பாடசாலே நடத்தப்படுகி றது. ஸ்ரீமான் நடராஜய்யரும் ஸ்ரீ யசோதபாலனுமே பாடம் கற்பித்து வருகின்றனர்.

இப்பொழுது புவனேச்வரரது ஆலயத்தின் வெளியே ஆதிதிரா விடர்கள் உள்ளே நுழையக்கூடாது என்ற விளம்பரம்காணப்படுவதில்லே. ஆதிதிராவிடர்களே உள்ளே விட்ட தன் பயனுக வானம் இடிந்து விழ வில்லே. காவிரிநதி அங்கு பிரவகிக் காமற் போகவில்லே. புவனேச்வரர் முன்போலவே மாக்ஷிமையுடன் கா க்ஷி யருளி வீற்றிருக்கிறுர்.

உலாவப் போதல்.

தனிமையாய் உலாவப்போவதால் ஏற்படும் நன்மைகள்.

உலாவப்போகும்போது யாதாமொருவரை உடனழைத்துச் செல்ல வேண்டுமென ஜனங்கள் கூறுவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். அதற்கு மாறாக, தனிமையாய் உலாவப்போவதால் உண்டாகும் நன்மைகள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நாம் தனிமையாய் உலாவப்போகுங்கால் நாசித்துவாரங்களின் வழியாகவே மூச்சுவிடுகிறோம். நமது சுவாசம் அப்பொழுது இயற்கையானதாயும் ஒழுங்குபட்டதாயும் தேகத்திற்கு ஆரோக்கியத்தைத்தரக் கூடுமானதாயுமிருக்கின்றது. நாசித்துவாரங்களின் வழியாய் நுரையீரல்களுக்குச் செல்லும் காற்று நாசித்துவாரங்களிலுள்ள ரோமங்களால் பரிசுத்தமடைகிறது. 'நாசித்துவாரங்களின் வழியாக சுவாசித்தல் நமக்கு திடத்தை உண்டுபண்ணுவதுடன் நுரையீரல்களுக்கு பலத்தையும் கொடுக்கிறது. ஆயின், நாம் நடக்கும்போது பேசுவதால் வாய் வழியாகவே சுவாசிக்கவேண்டிவரும். இது இயற்கைக்கு மாறானதன்றி நுரையீரல்களுக்குக் கெடுதியையும் உண்டாக்குவதால் இதை அறவே ஒழிக்கவேண்டும். கடவுள் உயிர்ச்சுவாசத்தை மானுடனின் வாய் வழியாகவன்றி நாசித்துவாரங்களின் வழியாகவே செலுத்தினர். கான்ட் என்னும் தத்துவஞானி என்றும் தனிமையாகவே உலாவச் சென்றதாயும், அதனாலேயே அவர் நல்ல விருத்தாப்பியப் பிராயம்வரை ஜீவித்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

தனிமையாய் நடக்கும்போது தான் சிந்திப்பதற்கு ஏற்ற நிலைமை நம்முன் இயற்கையாகவே ஏற்படுகிறது. மேலான எண்ணங்களும் நம்மனதில் உதிக்கின்றன. நமது அறிவு விருத்திக்கு இது மிகவும் இன்றியமையாதது. இதற்கு மாறாக துணைவர்களுடன் சென்றால், அன்னோர் பேசி அவரது எண்ணங்களையும் நோக்கங்களையும் நம் பால் செலுத்துவதால் நம்முள் எழும் சுய எண்ணங்கள் தடைபடுகின்றன. நம் நாட்டில் ஆங்கில ஆதிபத்யத்தை நிலைநாட்டின கிளைவ் பிரபுவானவர் இந்திய இராஜீய விஷயங்களில் சிக்கலான பிரசினைகளுக்கு சமாதானம் அறிய விரும்பியபோது தனிமையாக இங்குமங்கும் நடந்தே பரிகாரம் அறியும் வழக்கமுடையவரெனத் தெரிகிறோம்.

மேலும் வைதிக சம்பந்தமாய் யோசிக்குங்கால் தனிமையாய் உலாவப் போவதே உத்தமமானது. இனிது இனிது ஏகாந்தம் இனிது. தனிமையே விஷயங்களில் செல்லும் மனதின் சலனத்தை நிறுத்தி அம்மனதிற்கு ஒருவித சாந்தி நிலையை அளிக்கிறது. ஆத்மா பந்தத்தைவிட்டு நீங்குதற்கு வேண்டற்பாலதான மனோபாவம் தான் தனிமையாயிருக்கும்போது தனது பூரண கலைகளுடன் பிரகாசிக்கிறது.

மேற்போந்த காரணங்களால், தனிமையாய் உலாவப்போதல் தேக சம்பந்தமாயும் மானசிக சம்பந்தமாயும் நமக்குத் திடத்தை அளிக்கிறது. என்பது ஒருவாறு விளக்கும்.

யூ. என். இராமஸ்வாமி நாயுடு.

அத்தேரி பாக்ஷா மேதாவிகள்!



கேளுங்கள் என் விகடக் குஞ்சுகளே! எங்கேயோ ஒரு ஊராம்! அதற்கு என்னவோ ஒரு பேராம்! அங்கே எவனோ ஒரு செக்கடி முண்டமாம்! அந்த சக்கரைத் தீவட்டித் தடியனுக்கு ஒரு பெண்டாட்டியாம்! எதற்காகவோ அந்த மகானுபாவன் மாமிவீட்டுக்குப் போனானாம்! அழகு மாப்பிள்ளை வந்தானேயென்று அன்பு பொங்கிய மாமி அதிசயமான ஒரு பலகாரஞ் சுட்டு அருமை மருமகனுக்குப் பெருமையாகப் படைத்தாளாம்! அது செக்கடிமுண்டத்திற்கு ரொம்ப ரொம்ப ருசியா யிருந்ததாம்! உள்ளுக்குப் பூரணம் வேறே பதுங்குகொண்டு நாவுக்கு நல்ல சுவைகொடுத்ததாம்! நன்றாகத் தின்று எப்பம்விட்டு "மாமி! மாமி! அந்தப் பணியாரத்துக்கு என்ன பேரு" என்று செக்கடிமுண்டம் கேட்டானாம்! அது 'கோழக்கட்டை' யென்று மாமி சொல்ல, அதை மறவாமல் மனப்பாடம் பண்ணிக்கொண்டு தன் ஊருக்கு வரும் வழியிலே, ஒரு சாயபு வஸ்தாத் மாமா ஒரிடத்தை 'அத்தேரி பாக்ஷா' என்று தாண்டவே, இந்த முண்டமும் கொழுக்கட்டை என்பதை மறந்து அத்தேரி பாக்ஷா என்று தியானித்தபடி வீடுவந்து: அத்தேரிபாக்ஷா சுட்டுக்கொடடி என்று கேட்க, அவள் தெரியாதென, இவன் அவளை நையப் புடைக்க. அவள் ஐயோ! அடித்த அடிகள் கொழுக்கட்டைபோல் உடம்பெல்லாம் உப்பிப்போச்சே யென்று ஒப்பாரிவைத்து அழ, அதைத் தாண்டி—அந்தக் கோழக்கட்டையைத் தாண்டி சுட்டுக்கொடுக்கச் சொன்னேன்—என்றானாம்! பிறகு அவளும் இந்த முண்டத்திற்கு அப்படியே சுட்டுப் படைத்தாளாம்! 'அத்தேரிபாக்ஷா' என்பது கொழுக்கட்டையே என்று சாதித்து, அப்படியே முழுதும் நம்பிய இந்த மேதாவியைப் போன்ற அரை குறைப் பேர்வழிகள் நமது பக்கத்தில் எவ்வளவோ பேர் கிடக்கிறார்கள்! இவர்களின் பெருமை ஒரு முழநீளம்! புடைத்தெடுத்தால் ஒண்ணுமிராது! அந்த வேடிக்கை மத்தாப்புகளைச் சற்றே வெளியிலிழுக்கட்டுமோ? பார்க்கிறீர்களா!

ஃ

பெருமை பிடித்தவன் ஓரிடத்திலே தங்க நேரும்போது, தான் பதினாயிரத்திலே பிறந்து லக்ஷத்திலே கால் நீட்டியதுபோலக் காட்டிக்கொண்டு அந்த வீட்டிலிருக்கிற ஒவ்

வொன்றுக்கும் குறைபேசித் தன் மேதாவித்தனத்தைக் காட்டிக்கொள்கிறது! இலையிலே நெய் ஊற்றவந்தால் அதைக் கையிலே வாங்கி முகர்ந்து பார்த்துவிட்டு, அது என்ன நல்ல நெய்யாக இருந்தாலும் நாற்றமெடுத்த நெய்யென்று பேசி இலைக்குப் பக்கத்திலே கொட்டிவிடுகிறது! அந்த சமயத்தில் வீட்டுக்காரனுக்கு எவ்வளவோ தலையிறக்கம்! இலையிலே நல்ல பதார்த்தங்களே இருந்தாலும், ஒவ்வொன்றுக்கும் ஒரு சொட்டு கூறிவிட்டு எல்லாவற்றையும் இலையிலே அப்படியே வைத்து, சாதத்திலும் பாதியை இலையில் எறிந்து கை கழுவிக் கொள்கிறது! சொம்பு நன்றாகத் தேய்த்திருக்கவில்லையென்றும், லோட்டா சுத்தமாயில்லையென்றும், குடிக்கிற ஜலம் தெளிவாகக் காணோமென்றும் நீள நீளக் குறைப் பேச்சுகளைக் கொட்டுகிறது! அடிக்கடி தன்கையில் கட்டியுள்ள கடியாரத்தைப் பார்க்கிறது! இப்படியாகப் பெருமைபிடித்த இந்த மேதாவிகள் கப்சுப் என்று தங்கள் வீட்டிலே ரகசியமாய்ப் பழைய சோற்றையோ எதையோ உண்டுவிட்டு வாயைக் கழுவிக்கொள்கிறார்களப்பனே!

ஃ

புதிதாக வீட்டுக்கு வாழவந்த பெண்ணின்மீது தாங்கள் ஏதேனும் குறைப்பேச்சுகளைச் சொல்லி, அது தப்பு—இதுகோணல் என்று சதா தப்பிதங்கள் கற்பித்தால்தான் தங்களின் நாத்திப்பெருமைகளும் மாமிப் பெருமைகளும் தலைக்குமேல் ஓங்கி நிற்குமென்று மேதாவித்தனம் காட்டுகிறவர்களைப்பற்றி விகடன் என்னென்று சொல்வேன்! மாமி என்பவள் தன் புருஷனின் வயிற்றுக்குச் சரியாக இடாமல் வதைப்பது தெருவெல்லாம் சிரித்த சங்கதி! அப்படிப்பட்டவள் தன் மருகியிடம், தான் மகா பத்தினிப்பெண்ணாக எண்ணித் தன் மேதாவித்தனம் காட்டிக் குற்றங்கள் ஏற்படுத்துகிறாள்! நாத்தியின் நாற்றம் அவள் வாழுகிற வீட்டில் பார்த்தால் தெரியும்! அந்த நாறுகிற ரம்பை இங்கு புதுப்பெண்ணிடம் காட்டுகிற அதிகார மேதாவித்தனம் அப்பப்பா சொல்லி முடியாது! இப்படியே தாய் வீட்டில் ஒரு பாவாடைக்கும் கதியற்று கஞ்சிச் சோற்றுக்குத் திண்டாடிய மருமகள் பாரம்பரியமாய்ச் செல்வமுஞ் சீருமாயுள்ள குடும்பத்தில் பெண்ணாக வாழவந்ததும், தன் பழைய நாற்றத்தை மூடிவிட்டு, தான் ஏழுக்கு மெத்தைவீட்டிற் பிறந்ததுபோல மேதாவித்தனம் பேசி மற்றவர்களைத் தாழ்த்தி பலே புளுகுமலையாய்ப் பட்டாங்கடிக்கிறாள்! காலையில் காபி இல்லாவிட்டால் தனக்கு அந்த தினப் பொழுதுபோவதே முடியாதென்று மேதாவித்தனம் செய்கிறாள்! பிறக்கும்பொழுதே பாலிலே பிறந்து, வெண்ணெயும் நெய் சீனியுமாகப் புசித்து வளர்ந்து, பிறகு காலக்கோணலாலே இப்போது வெறும் ஜலம் குடிக்கிறவர்கள் இந்த மேதாவி மருமகள் பேசுவதைக் கேட்டுச் சிரிக்க வேண்டி வருகிறது! என்றைக்கும் ஒரே சீராகப் பெருமையில் வாழ்பவர்கள் எவ்வளவோ அடக்கமாகக் கிடக்க, நேற்று முளைத்து உயரக்

---

1. தர்மம் உன் வாழ்வில் ஆரம்பமாகிறது. ஆனால், உன் வாழ்நாளோடு முடிவதில்லை.

2. பணத்தினால் என்னென்ன நன்மைகள், முயற்சிகள் செய்யலாமென்று எவனுக்குத் தெளிவாகத் தெரிகிறதோ அவனிடத்தில் பணம் இருக்கிறதில்லை.

O. V. R. S, சொக்கலிங்கம்.

கிளம்பிய ஆகாசவாணங்கள்தான் மெத்த மெத்த மேதாவித்தனங்களை யளந்து கொட்டிவிடுகிறார்கள்! தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்பதுதான் இந்த மேதாவித்தனத்திலே முக்கிய சங்கதி!

ஃ

தங்கள் புத்தியும் படிப்புமே ரொம்பவும் உயர்ந்ததென்றுகொண்டு, மற்றவர்களையெல்லாம் ஒவ்வொரு படி தாழ்த்தி மகா மேதாவித்தனம் காட்டுகிறது! மற்றவர்களின் கல்வி சாமர்த்தியங்களையெல்லாம் குப்பைத் தொட்டியிலே எறிகிறது! தாங்கள் பேசுவதையும், குதிப்பதையும், சிலுக்குவதையும், துள்ளுதுள்ளிச் செய்வதையுமே சரியென்று புகழ்ந்துகொள்கிறது! தானே தான் தலைக்குயர்ந்து வாழப்போவதாகவும் மற்றவர்களெல்லாம் தவிடுபொடியாகப் போவதாகவும் நினைத்துக் கொக்கரிக்கிறது! உன் மனைவிக்கு என்ன குழந்தை பிறந்ததென்றால், அதைப்பற்றி இன்னும் விசாரிக்கவில்லையென்று தான் அத்தனை ராங்கியாயிருப்பதாகக் காட்டிக்கொள்கிறது! உன் மனைவி மக்கள் நாலுநாள்போல என் வீட்டில் தங்கியிருந்தார்களென்று ஒருவன் கூறினால், அப்படியா, அது எனக்குத் தெரியாதேயென்று பெருமைத்தனம் படிக்கிறது! என்னடா அப்பா! உன் மனைவி வீட்டிலிருப்பதும் இல்லாததுங்கூடவா நீ அறியாத மனிதனாக ஊர்திரிய விட்டிருக்கிறாய் என்றாலோ, அப்போது பல்லைக் காட்டி இளிக்கிறது! தன் உள்சரக்கு முழு ஒட்டையானாலும், தன் அறிவு முழு மொட்டையானாலும், எல்லாமுமே தெரிந்தவைத்த மாதிரி மேதாவிப் பசப்புகாட்டி ஒவ்வொன்றுக்கும் அது சொத்தை, இது புளியங்காய் என்று நோட்டம்பேசித் தன்னை மகா சாமர்த்தியவானாகக் காட்டிக்கொள்கிறது!

ஃ

ஊர் சங்கதிகளிலே மேதாவித்தனம் காட்டிப் பெரியமனுஷப் பெருமையடைந்துவிட்டு, தன் சொந்த வீட்டுச் சங்கதியிலே முழுமோசமாய் ஒரு காசுகூட வீட்டில் வைக்காமல் கண்மூடிக்கொண்டு கைலாசம் போய் விடுகிறது! ஆக்கின சோற்றுக்கும், கட்டின வீட்டுக்கும், ஒருவன் துணிச்சலாய் நடத்துகிற வியாபாரத்துக்கும், ஒருவன் செழிப்பாய் வாழ்ந்தால் அதற்கும் பழுதுகள் பேசிக் குறைப்படுத்தி, தான் என்னவோ இந்த மாதிரியில் செய்வதாயிருந்தால் எவ்வளவோ மேலாகச் செய்திருக்க முடியுமென்று தன்னைத்தானே உயர்த்திப் பெருமைப் பவுடர் பூசிக்கொள்கிறது! பாரப்பா! கடைசியிலே அவன் இன்ஸால்வெண்ட் மஞ்சள் கடிதாசி நீட்டப்போகிறான்; அதற்கு இப்போதே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிவிட்டான் என்கிறது! இதனிடையிலே தானும் இன்ஸால்வெண்டு தந்த பேர்வழிதான் என்பதை மறந்தே விடுகிறது! தன் கடன்களை மறைத்துவிட்டு ஊராரின் கடன்களைப் பேசி, அந்தத் தடபுடல் தம்புப்பிள்ளையின் சங்கதி எனக்குத் தெரியுமே! அவன் பெருந்தொகைகள் கடன் வாங்கிவிட்டு முழிக்கிறானடா அப்பா! அவன் நூறு ஆயிரமாக வாரியதெல்லாம் அது அந்தக்காலம்! இப்போது கோவணத்துக்கே உள்ளுக்குள் திண்டாட்டம் என்று புரளி படிக்கிறது! ஃ

தனது சுதந்திர பாத்தியதையை அறியாதவனை அனைவரும் எறிமிதிக்கலாம். அந்தப் பாத்தியதையைப் பிறகு அவன் அறிந்துகொண்டு விட்டபோதோ அவனுக்கு வணங்கி உட்பட்டுப் போகவேண்டியதே.

மாப்பிள்ளை வீட்டார்கள் பெண் வீட்டிலே காட்டுகிற மேதாவித்தனங்களை விகடன் சொல்லாமலே விட்டுவிடுகிறேன்! நகையைத் தன் அவசரத்துக்கு விற்கப்போகிறவன் அதன் பெறுமான விலையைத் தெரிந்துவைத்திருக்கையிலேயே, 50-ரூபாய் நகையை 25-க்குத்தான் போகுமென்று தன் புத்தியையே உயர்த்தி மேதாவித்தனம் காண்பித்து நகைக்காரனை முட்டாளாக்கப் பார்க்கிறது! எப்போதும் தன் முகத்தைக் கடுகடு சிடுசிடு என்றே வைத்துக்கொண்டு அதையொரு மேதாவித்தனமென்று உள்ளுக்குள் பூரித்துக்கொள்கிறது! தன்கை ஓங்கி மேல்படியில் நிற்கிறதென்றும், மற்றவன் தாழ்ந்து கீழ்ப்படியில் கிடக்கிறவனே யென்றும் எண்ணி மேதாவி நடைபோட்டு நடக்கிறது! எழுந்துவந்து வழியனுப்பாமல் உட்கார்ந்தபடியே ஒரு கும்பிடு எண்ணி விட்டு, இவர்களுக்கெல்லாமா தான் எழுந்து நிற்பதென்பதாகப் பெருமைப்பட்டுக்கொள்ளுகிறது! தன்னை ஒரு ஏமாற்றும் மோசமனிதனென்று மற்றவன் கண்டுகொண்டதை அறியப் புத்தியில்லாமல் தன் சமர்த்தெல்லாம் அவனிடம் காட்டிவிட்டதாகவும், தன்னை வெல்வார் உண்டா என்றும் தன் காலுக்குத் தானே ஒரு கும்பிடு போட்டுக்கொள்கிறது! சங்கீதம், கவித்வம் போன்றவற்றில் தான் மூக்கறுந்த மூளியானாலும் முற்றிலுமே மேதாவிபோலக் காட்டுகிறது!

ஃ

தான் படுமோசக்காரனாயிருந்தும், மற்றவனை ஊர் தாலியறுக்கிறவனென்றும், நடுவழிக் கொள்ளைக்காரனென்றும் பழிக்கிறது ஒரு மேதாவித்தனம்! கடன் பணத்தைத் திருப்பிக் கேட்கவந்தவனைக் கண்டபடி வைது அனுப்புவது ஒரு மேதாவித்தனம்! தன் வீட்டை ஆளத்தெரியாமல், ஊராரின் வீடுகளுக்குப் புத்தி சொல்லப் புறப்படுவது ஒரு மேதாவித்தனம்! தன் மதத்திலுள்ள குப்பை கூளங்களை யறியாமல் ஊராரின் மதத்தைத் தாழ்த்தி வம்பளப்பது ஒரு மேதாவித்தனம்! தான் ஒரு குடியனாகவோ, வேசிக்கள்வனாகவோ, வாங்கினபணம் பண்டங்களைத் திருப்பிக் கொடாதவனாகவோ இருந்துகொண்டு, ஊராரின் சங்கதிகளுக்குக் குறைபேசுகிறது ஒரு மேதாவித்தனம்! தான் செய்த பிசகை மற்றவன்மீது ஏற்றிவிட்டுத் தன்னை யோக்கியனாகச் சமர்த்து பண்ணுவதும் மேதாவித்தனமே! தன் சூது குணங்களை ஒருவன் தெரிந்துகொண்டானென்று கண்டுகொண்டும், அதைத் தான் அறியாததுபோலவே நடித்துப் பசப்புவதும் ஒரு மேதாவித்தனமே! ஒரு வீட்டின் சங்கதியை நடுவழியிலேயே அறிந்துவிட்டு, பிறகு அவ்வீட்டார் அந்த சங்கதியைச் சொல்லவரும்போது, அப்போது தான் புதிதாக அந்த சங்கதியைக் கேட்பவன்போல் காட்டிக்கொள்வதும்—மேதாவித்தனமே! ஒரு வியவகாரத்திலே, ஒரு மனஸ்தாபத்திலே இரண்டு பக்கத்தாருக்கும் தன்னை வேண்டியவனாகக் காட்டிக்கொண்டு எதிலுமே தான் பட்டுக்கொள்ளாமல் —முக்கிய சங்கதிக்கு அந்த வேளையில் இல்லாமலே மறைந்துகொள்வதும் மேதாவித்தனமே! இரண்டு பக்கத்திலும் தப்புத்தாளம் கொட்டி

அந்தந்த பாஷையின் சுவையை அந்தந்த பாஷையின் வழியிலேயே சென்றுதான் காட்டவேண்டுமேயன்றித் தாங்கள் பயின்றுள்ள மற்றொரு, அன்னிய பாஷையின் திறத்தால் மேன்மையுடையதாகச் செய்துவிடுவதற்கில்லை.

இரண்டுபக்கமும் சுரண்டிக்கொண்டு தான் லாபமடைவதும் மேதாவித்தனமே! கடைசியாக, விகடன் இந்த அத்தேரிபாக்ஷா மேதாவிகளை ஒரு கேள்வி கேட்கிறேன்! உங்கள் மேதாவித்தனங்களிலே நீங்கள் உயர்ந்து நின்றாலும், அவைகளெல்லாம் எத்தனை காலத்துக்கு உருப்பட்டு நின்றதென்றும், அவற்றிலே எத்தனை சாய்ந்து தமோறித் தவிடுபொடியானதென்றும், இந்த மேதாவித்தன வாழ்வு நீடித்ததாவென்றும், அதிலே மனத்திருப்திக்கு இடமிருந்ததா என்றும் கேட்கிறேன்! மத்தாப்பு வெளிச்சம் எவ்வளவு நேரத்திற்கு? அப்படிப்போலத்தான் இந்த மேதாவித்தனத்தின் முடிவும்! இருக்கும்! ராம் ராம்! சுபம்! ஸு! சுவாஹா!

கன்னிகாதான பலன்!

ஹிந்து தர்மசாஸ்திரப்படி எல்லா தானங்களிலும் கன்னிகாதானம் மிக விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், இவ்வுலகத்தில் ஒருவன் அருமையாகக் கொண்டாடும் பொருள்கள் எல்லாவற்றிலும் சிரேஷ்டமானது தன் வயிற்றிற் பிறந்த குழந்தையேதான். அதைப் பெற்றெடுத்து உயிர்க்குயிராய் வளர்த்து அப்பெண் ரத்தினத்தையொருவன் பலனை உத்தேசிக்காமல் நிஷ்காம்யமாய்ப் பாத்திரமறிந்து பத்நி சமேதனாய்த் திரிகரண சுத்தியோடு ஒரு புருஷனுக்குத் தானம்செய்து கொடுத்துவிடுவானேயானால் அது மிகவும் சிரேஷ்டமான காரியமாவதுடன், அதற்கு ஸ்வர்க்கபலனும் கிடைக்குமென்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. இந்தப்பலனை நேரில் காணுவிடினும், பெண்ணைக்கொண்ட வீட்டார் அப்பெண்ணைப் படுத்துகிற பாட்டின் பலனையும், பெண்ணைப் பெற்று வயிறு எரிகிற பலனையும், மாப்பிள்ளை வீட்டார் கண்டபடி கேவலப்படுத்தித் தூஷிக்கும் ஆசீர்வாத பலன்களையும் வெகுபேர் பிரத்தியக்ஷமாகக் கண்டும் பெற்றும் இருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இதுதான் உண்மையான கன்யாதான பலனுமாகும்.

பத்திராசிரியர் தனது வியாசமொன்றைப் பிரசுரித்தவுடனே மற்றொரு வியாசத்தையும் எழுதியனுப்பி விடுகிறார்கள். முன் வியாசத்தை எவ்வளவோ திருத்திச் சிரமத்துடன் பதிப்பிக்க வேண்டியதாயிற்றென்பதை அவர்கள் கவனிப்பதில்லை. சிலர் தங்களின் சொந்த விஷயங்களையே ஒரு வியாசமாக அனுப்பிவிடுகிறார்கள்.

ஒரு நகையானது பெட்டியிலிருப்பதைவிட உடம்பிலிருப்பதே அதிக பாதுகாப்பாகக் காண்கிறது.



திரிச்சியில் கூடிய சுயமரியாதை நாட்டில் ஸ்ரீரங்கம் கோவிலையும், அரங்கநாதரையும் பழித்துப் பேசியதைக் கண்ட விகடன் இது அதிகப் படிப்பின் அனர்த்தக் கிறுக்கு என்று சிரித்துக் கொண்டானாம்!

ஃ

ஆடம்பரத்துக்கு 50-ரூபாயும், வயிற்றுக்கு 10-ரூபாயும் செலவிடும் படி நாகரீகம் கூறுகிறதாம்!

ஃ

கோயில், குரு என்பதில்லாமல்: எந்த வேத மந்திரமுமில்லாமல் நடக்கும் கல்யாணங்கள், பிறகு 'கலியாணம்' என்ற பெயரையே பெறுமற் போய்விட்டால் என்னசெய்வதென்று ஒருவர் விகடனைக் கேட்டாராம்!

ஃ

நழுவிப் பேசுகிறவர்களை நன்றாகக் கழுவிப் பார்த்துத் தெரிந்துவிட வேணுமாம்!

ஃ

பிறருக்கு நியாயம் பேசுகிறவர்கள் தங்களின் கோணல் செய்கைக்கு மட்டும் ஒன்றும் பேசுகிறதில்லையாம்!

ஃ

எதிலுமே மேதாவித்தனம் மிகுந்து பேசுகிறவர்கள் ஈனச்செய்கைகளிலும் கையை நனைத்தவர்களாயிருப்பார்களோவென்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு, அப்படியுமுண்டு, எல்லாம் தெரிந்தும் எவற்றிலும் கெடாமல் சன்மார்க்கமாயிருப்பதுமுண்டு என்று பதில் சொன்னானாம்!

ஃ

தான்போன இடத்திலே தன் மானம் கெடுவது தன்னோடு துணைக்கு வந்தவர்களால் தானாம்!

தன்னைப் பிறர் பெருமையாக மதிப்பார்களென்பதில் தான் மனிதன் அதிகமாக மோசம் போகிறானாம்!

ஃ

தன் சொந்தமான குணத்தை மூடி வைத்து நடிக்கவேண்டுமென்று எண்ணியும், பிறகு தனக்கே தெரியாமல் ஏமாறிப்போய் தன் சுபாவத்தை வெளியில் காட்டிக்கொண்டு விடுகிற சங்கதியே அதிகமாம்!

ஃ

குறத்திப் பாட்டை இன்னொரு ஜாதிப்பெண் பாடுவதைவிட, அந்தக் குறத்தியே பாடினால் தான் உண்மையான பாட்டாகுமாம்!

ஃ

ரொம்ப ரொம்ப நேசந்தானாம்! ஆனால் நம்பமட்டும்முடியவில்லையாம்!

ஃ

எதிலும் எல்லை கடந்தால் வேஷம் போடுகிறான் என்ற பேர் ஏற்பட்டுவிடுமாம்!

ஃ

வீட்டிலே படுக்கை நோயாளியில்லாதவர்களுக்கு அமாவாசை வருவதைப்பற்றிக் கவலையேயில்லையாம்!

ஃ

மாடு, குதிரை, ஆடு, கோழிகளை வாங்குவதற்கு முன் அவற்றின் ஆயுள் பாகம் அறிவதற்கு அவைகளின் பிறந்த நாள் ஜாதகத்தைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமாம்!

ஃ

தன் வீட்டுக்கு வருகிறேனென்று கடிதம் எழுதுபவர்களுக்கு உடனே பதில்தரக் கூடாதாம்!

ஃ

இவன் அவனை ஏமாற்ற, அவன் இவனை ஏமாற்ற, இவ்விருவரையும் இன்னொருவன் ஏமாற்ற, இத்தனை பேர்களையும் தெய்வம் ஏமாற்றிவிடுமாம்!

சென்றமாதம்

உபவாஸ வெற்றி :—

பரமாத்மாவுக்கே தம்மை யொப்புக்கொடுத்தவர்களுக்கு சாத்தியமில்லாததொன்றுமில்லை. நாஸ்திகப்பேய் தலைவிரித்தாடும் இக்காலத்தில் மகாத்மா காந்தியடிகள் தவசிரேஷ்டராய் விளங்கி வருவது பாரதஞாலம் செய்த பாக்கியம். தேக சக்தியால் செய்ய இயலாததை ஆத்மசக்தி கொண்டும், ஆத்ம சக்தியாலுங் கூடாமல் இடையூறுபடுங் காலங்களில் தவத்துணையின் சக்திகொண்டும் லோகோபகாரமான கைங்கரியங்களை மாமுனிவர்கள் நிறைவேற்றுவிப்பர். அங்ஙனமாக, மகாத்மா காந்தியடிகள் ஹரிஜன மேன்பாட்டிற்காக இறைவனைத் தியானித்து அருள்பெற நாடி, சென்ற மே மாதம் 8-ம் தேதி முதற்கொண்டு 21-நாள் உபவாஸத்தைத் தொடங்கினார். சிறிது ஜலம்மட்டும் புசித்துத் தம்மை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து நின்றார். பாரதபூமி முற்றும் மகாத்மாவைப்பற்றியே கவலை கொண்டு நின்றது. கடைசியில் 21-தின உபவாஸத்தை வெற்றியுடன் முடித்து, மே மாதம் 29-ம் தேதி இரண்டு அவுன்ஸ் ஆரஞ்சுப்பழ ரஸத்தைப் புசித்து உபவாஸ பூர்த்தி செய்தார்.

பர்த்தாவுக்கேற்ற பத்தினியாக விளங்கும் மகாத்மாவின் மனைவியார் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் தமது பிராணபதியின் உபவாச ஆரம்பதினமுதற்கொண்டு சிறிது பாலும் இரு ஆரஞ்சுப்பழமும் புசித்து விரதமிருந்து வந்து, மகாத்மா உபவாசம் முடிந்ததும் தமது திருக்கரத்தினாலே அரைக்கோப்பை ஆரஞ்சுப்பழ ரஸத்தை அவருக்குக் கொடுத்து, அவர் அருந்தியபின் எஞ்சியதைத் தாம் ஏற்று உண்டு தமது நோன்பை முடித்துக்கொண்டார். சீதா, தமயந்தி, சாவித்திரி முதலிய கற்பரசிகளை மகாத்மாவின் மனைவியார் நமது பூஜார்ஹமான நினைவிலே இன்று தோற்றச் செய்கின்றார்.

நாம் நூல்களில் வாசிக்கும் விசேஷங்களெல்லாம் பூர்வகாலத்தில் நிகழ்ந்ததாகவே அறிகின்றோமாயினும், இன்று மகாத்மா காந்தியடிகளால் நேரிலேயே காணும் பாக்கியத்திற்கு உரியவரானோம். உபவாச விசேஷத்தால் மகாத்மா பெற்ற புனித சக்தியானது தேசத்திற்கு எண்ணற்ற நன்மைகளை விளைவிக்குமென்று எதிர்பார்க்கின்றோம். மகாத்மா வாழ்க.

ஃ

காலத்தின் கோலம் :—

எங்கும் பணத்திற்குக் கஷ்டம் என்ற சொல் வியாபித்து நிற்கின்றது. எவரும் பணமில்லையே என்கி

ஆங்கிலத்தில் மேதாவிகளாயிருந்த ஸ்ரீமான் இராஜமய்யர், ஸ்ரீமான் மாதவய்யா இவர்கள் இயற்றிய தமிழ் நூல்களைப் பார்க்கையில், தங்களின் ஆங்கிலப்படிப்பை ஒருபுறம் தூரத்திலே கட்டி வைத்துவிட்டு, முற்றிலும் தமிழர்களாய்த் தமிழ்ச்சுவையும், தமிழ்நாட்டின் அழகுமே தோன்றும்படி எழுதிச் சென்றிருப்பதாகத் தெரிகிறது.

ளுர்கள். செய்யும் செலவுகளென்னவோ வழக்கப்படி நடந்துகொண்டும், ஏதோ அற்ப சொற்பத்தைக் குறைத்ததாகவும் காணப்படுகின்றன. சிக்கனம் என்பதைக் காட்டும் பொருட்டு ஒரு பக்கத்தில் ஐந்து ரூபாய் செலவு வகை ஒன்றைக் குறைப்பது, மற்ருெரு பக்கத்தில் ஒரு மோட்டார் போதாதென்று, ஒரு புதிய மோட்டார் ஸைக்கிள் வாங்கி விடுவது! பணத்திற்கு வட்டியும் தற்சமயம் குறைந்துபோயிற்று. தபாலாபீஸ் ரொக்க ஸர்டிபிகேட்டுகளில் அநேகர் பணம்போட்டு வைத்திருந்தனர். 100-க்கு வருஷம் 6—ரூபா வட்டி வரையும் தரப்பட்டது. அதுவும் இப்பொழுது குறைந்து, ரூ. 8—4—0 செலுத்துவோருக்கு 5-வருஷத்திற்குப் பின் 10-ரூபா கொடுப்பதென்று முடிந்து விட்டது. ஐந்து வருஷத்திற்கு ரூபா 1—12—0 வட்டியாம்! பணத்தின் கஷ்டம் இவ்வித மிருக்க, தங்கத்தின் விலையோ ரூபா 19-9-0க்குமேல் ஏறியிருக்கிறது. வீட்டிற்கு ஒரு புது நகை செய்ய வழியில்லை! செய்யினும், அந்த விலைக்குப் பிறகு விற்கவும் இயலா. புஸ்தக வியாபாரம் இப்போது மிகு மந்தமென்கிற சொல் எங்குமே வியாபித்துளது. எது எவ்வாருயினும், கிடைத்த சமயத்தைத் தவறவிடாமல் உத்தம நூல்களை வாங்கிச் சேர்த்துவைப்பது அவசியமாகும். அரிசி மலிவாகக் கிடைத்தும் குடும்பக் கவலை குறையவில்லை. இந்தச் சோதனை காலத்திற்கு முடிவுதான் எப்போதோ!

கடிதம் எழுதிப் போவது.

வந்துவிட்டார்களே யென்று நடுங்குகிற வீடுகள் சில உண்டு. "ஆமாம்! வரப்போகிருர்களாம்!—யார் வரும்படி சொன்னது?—ஏன் வரவேண்டும்?" என்று வெறுப்புடன் சலிப்பாய்ப் பேசுகிறவர்களும் உண்டு. நாம் ஒரு வீட்டுக்கு ஆவலுடன் செல்லுகையில் அவ்வீட்டினர் எங்கோ விசேஷத்திற்குப் போயிருப்பதை யறிந்து ஏமாறித் திரும்புவதுமுண்டு. ஆதலின், தாங்கள் வருவதைப்பற்றி முன்னதாகக் கடிதம் வரைந்து, அவர்களும் வருமாறு எழுதியபின்பு அங்கு செல்வதே கௌரவமாம். தன்னிடம் வந்தோர்களையெல்லாம், வெகுதூரத்திலிருந்தும் பொங்கி எழும் அலைகளோடும் விரைந்து நெருங்கி அவர்களின் பாதங்களைக் கழுவித் தன் மகிழ்ச்சி தெரிவிக்கும் சமுத்திரத்தின் ஸ்வபாவத்தை வீட்டினரும் வகித்து விருந்தினரை உபசரிப்பது என்றைக்கும் நினைத்துக்கொள்ளவைக்கும். விருந்தினர் வந்துள்ளபோது வீட்டுக்குள் புருஷன் மனைவி விவாதம் நடப்பது மதிப்பைக் கெடுப்பதாகும்.

அந்த மனோகர சுந்தரன் யார்?

உன்னுடைய ஆவித் துணைவன் யார்? யதார்த்தமான உன் உல்லாஸன் யார்? ஈச்வர ஸ்வரூபமாய் இலங்கி உன்னை மகிழ்விப்பவன் யார்? நீ எப்போது வருவாயோவென்று உன் வரவுக்கு எதிர்பார்ப்பவன் யார்? உன்னைப் பிரிய முடியாமல் உண்மையாய்க் கண்ணீர் பெருக்குபவன் யார்? உன்னையே யாவுமாய்க் கருதி நம்பியவன் யார்? நீ கோபிப்பினுங்கூட அதை அந்த க்ஷணமே மறப்பவன் யார்? நீ இவ்வுலகிலேயே பெற முடியாத ஒரு தனிச் செல்வத்தினை—மகிழ்வினை—பூரிப்பை உனக்கு ஊட்டுபவன் யார்? இவ்வுலகின் ஒரு பெரிய செல்வமாய் உனக்கு விளங்குபவன் யார்? உன் பக்கத்தில் ஸயனித்து உனக்கு இனிய துயிலை உண்டு பண்ணுபவன் யார்? ஈசுவர நாமத்தை இடைவிடாது சிந்திக்கும் ஒரு உபாய மார்க்கத்தை—தன்னை என்றும் நினைப்பது போலும் ஈசனையும் ஸதா நினை—என்று உதாரண முகத்தாற் காட்டுபவன் யார்? பகவானின் பரம சௌந்தரிய விலாஸ முழுமையும் தன்னிலேகொண்டு உன்னை வசிகரிக்கச் செய்கிறவன் யார்? இவ்வுலகில் வசித்தும், இவ்வுலக சம்பந்தமேயற்ற விதமாய்ப் பரமஞான நிலையினில் ஒளிர்பவன் யார்? உன் சொத்துக்களுக்கு எவர் துணை யென்ற கனத்த விசாரத்தைத் தீர்த்தவன் யார்? உன் நெஞ்சுக்கு ஒரு தைரியமாக நிற்பவன் யார்? உன் வீட்டின் இனியதோர் விளக்காய் ஜகஜ்ஜோதியாக ஜ்வலிப்பவன் யார்? வெகுகாலம் ஏங்கி நின்ற உன் குறையைப் போக்கியவன் யார்? வீடுமுற்றும் நிறைந்தவன் யார்? உன் ஆசையை வளரச் செய்து பலவற்றையும் சேர்த்துவைக்கத் தூண்டியவன் யார்? நீ வெளி நாடு சென்ற காலத்தும் உன் உள்ளத்திலே தன் மோகனரூபத்தைப் பதிய வைப்பவன் யார்? ஒரு தூய புன்னகையால் உன்னை மயக்கிவிடுபவன் யார்? உலக கஷ்டங்களால் நீ வீட்டை விட்டு ஓடிவிட நினைக்கையில் அதைத் தடுப்பவன் யார்? உன் மனைவிமீது நீ வெறுப்புற்றாலும் அடுத்த நிமிஷத்திலே ஸமரஸம் உண்டுபண்ணுபவன் யார்? யுவதியின் ஒப்பற்ற இரு தனபாரங்களையும் அச்சம் நாணமற்றுப் பலர் முன்னிலையில் பற்றுபவன் யார்? அங்ஙனம் பற்றியும் மனத்துக்கண் மாசிலானாகி நிர்மல சந்திரனாய் நிலவிடும் நிஷ்களங்க ஹிருதயன் யார்? உன் பெட்டி திறந்திருந்தால் அதில் தாராளமாகக் கையிட்டுச் சோதிப்பவன் யார்? யாழினும் இனிய தொனியுடையான் யார்? உலகபேதமேயற்ற ஞானமூர்த்தி யார்? உன் மனைவியின் பெருஞ்சொத்து யார்? நீ அனாதையாய்ப் போகாதிருக்கச் செய்தவன் யார்? மனஸ்பூர்வமாக மாதா பிதாக்களை நேசிப்பவன் யார்? அவர்களை ஒரு நிமிஷமும் பிரிந்திட மனந்தரியா மாண்பினன் யார்? அது யாரென்றால்—உனது சின்னஞ்சிறு குழந்தைதான். நீ ஆவலுடனும் தூக்கியெடுத்து முத்தமிடும் உன் குழந்தைதான். அவனாலேயே உனது வமிசவிருத்தி. அவனும் நீயும் நீடூழி வாழ்க. ஆயிரம் பல்லாண்டு.

சிறுமணித்திரள்

எளியவனும் இருந்தாலென்ன? மனைவியும் தானும் ஓர் நினைவாகி மாறுபாடின்றிப் பொருந்தி வாழ்வாராகில், அரச வாழ்விலும் அது மகத்தான பாக்கியமே.

எவ்வளவு பாந்தவ்யமும், அன்னியோன்னிய பாவமும் ஏற்பட்டிருந்தாலும் மத ஒற்றுமை இல்லாவிடில் மன ஒற்றுமை உண்டாகாது. ஒரு சமயம் மன ஒற்றுமை உதித்தாலும் அதில் அத்தனை உறுதி பிறவாது.

தாயின் அன்பு எப்போதும் வெளிப்படக்கூடியது.

தந்தையின் அன்போ "மைந்தர்கள் தம்மை நெஞ்சில்" என்றபடி மனதிலேயே மறைத்து வைத்துக் கொள்ளப்பட்டு மக்களுடைய க்ஷேமத்திலேயே கண்ணாக இருக்கச் செய்வது.

தாயின் அன்பு அளவுகடந்து ஒரு சமயம் மக்களைக் கெடுத்துவிடலாம்.

தந்தையின் அன்போ தம் மக்களின் பிற்கால க்ஷேமத்தில் திருஷ்டி வைப்பதாயிருந்து நலம் பயப்பிப்பது.

அன்புக்கும் ஆதரணைக்கும் தாயின் அன்பைப் போற்றுவர்.

எல்லாவற்றையும் தலைமேல் தாங்கிப் பொறுமையுடன் நிர்வகிக்கும் பொறுப்பில் தந்தையின் அன்பு மகத்தான உயர்ந்த தன்மையில் பரிமளிக்கும்.

தந்தையின் அன்பு திருத்துவதிலிருக்கும்.

தாயின் அன்பு தேற்றுவதிலிருக்கும்.

தாயின் அன்பு வளர்ப்பதிலிருக்கும்.

தந்தையின் அன்பு வாழ்விப்பதிலிருக்கும்.

தாய்க்குப் பத்துமாதம் சுமந்து பெற்ற அன்பு.

தந்தைக்கோ எப்பொழுது தமக்குக் குழந்தை பிறக்குமோவென அந்தப் பத்து மாதமும் ஆவலோடு காத்திருந்து கண்ட அன்பு.

கடவுளின் பயமும், பாபபுண்ணிய அச்சமுமே ஜனங்களைத் தீயநெறியின்பாற் செல்லவிடாமல் தடுத்து அவர்களை அடக்கி யாளுகின்றன.

இயன்றவரையில் உடலுக்குத் துன்பம் நேராதவாறு காத்தலும், நேர்ந்தபின் அத்துன்பத்தின் நீண்ட உபத்திரவத்தை உடல் அறியாவண்ணம் ஒருவித மயக்கத்தை உண்டாக்கி, பிரக்ஞையை இழந்துபோக வைத்துச் சாந்தி தருவதும் இயற்கையின் தருமமாம்.

அறிவீனமும் கோபமும் தூண்டப்பெற்று, தன் விவேகமனைத்தையும் இழந்தவனாய் அதன் இடையில் ஒரு கோர கிருத்தியத்தை—தகாத செயலை-ஒருவன் செய்யுங்கால், அந்த நிலையில் அவனைப்பற்றி ஒருவித அபிப்பிராயத்தைத் தன்னில் உண்டாக்கிக்கொள்வது தர்மமாகாது.

பகிரங்க சத்துருவுக்குப் பயப்படவேண்டியதில்லை; இரகசிய விரோதிக்கே நடுங்கவேண்டியது.

யாருக்கு யார் உற்றார்? யாருக்கு யார் சதம்? சந்தையிற் கூட்டம்—இதிலே சந்தேகமில்லை.

மாட மாளிகை மேடை சதுரங்க சேனையோடு வாழ்கின்ற வாழ்வும் கடைசியில் ஓர் இந்திரஜாலக் கோலந்தான்.

மனம் ஒன்றில் லயித்துப்போனால் அது கிடைக்காதவரை வேறு எதனிலும் பற்று இருப்பதில்லை அதே தியானமாய்க் கிட்டாததையே தேடிக்கொண்டு வாடுவதும் அலைவதும் மானுஷீக சுபாவம்.

விவாக பந்தத்திற்குள்ளாகி இரண்டொரு குழந்தைகளுக்குப் பெற்றோராகுமளவும் விரக்திகள். சலிப்புகள் தோன்றுவது வாலிபர்களுடைய சரித்திரத்தில் என்றைக்கும் கண்டு வரும் சம்பவமே

எதை விரும்பித் தேடுகிறோமோ அந்த வஸ்துதான் வெகு தூரத்திற் போய்விடுகிறது.

எந்த சமயத்தில் நமக்கு எவருடைய உதவி தேவையோ, அவர் அந்த சமயத்தில் அருகில் இரார். வெகு தொலைவில் இருக்க. அவருக்கு ஆள் அனுப்பும்படி நேரிடும்.

நம் காலின்கீழ் பொன்கட்டி கிடந்தாலும், மாணிக்கம் நம் காலைத் தடுக்கினும் நாம் அதைத் தெரிந்துகொள்வதற்குக் காலம் வராமையால், நமது காலில் ஏதோ ஒரு கல் தாக்கியதாக நினைத்து அப்பாற் சென்று விடுகிறோம்.

லோக சுபாவத்தையும், பிரபஞ்ச மாய்கையின் தத்துவங்களையும் நன்குணர்ந்த பெரியோர்கள் தங்களிடத்தில் பிறர் அதிக ஆவல் மிகுந்து பின் எங்காமலும், தாங்களும் பிறரிடத்தில் அதிக அன்புவைத்துப் பின் வாடாமலும் இருக்கும் விதமாகத் தங்களின் மனக் குதிரையை இழுத்துப் பிடித்துச் செலுத்துவார்கள்.

புமான்களின் மூடவைராக்கியத்தாலும், பிடிவாத சிந்தையினாலும் எத்தனை ஸ்திரீகள் கண்ணீர் விட்டுக் கதறும் நிலையினராகின்றனர்? எவ்வளவு சுந்தரிகள் தங்களின் சுகம் அனைத்தும் இழந்து பாழ்படுகின்றனர்?

எதற்கும், எந்த சந்திப்புக்கும், எந்தக் காரிய நிறைவேற்றத்திற்கும், எவ்விதமான இஷ்ட பூர்த்திக்கும் அதற்குரிய காலம் வந்துதானே ஆக வேண்டும்.

ஒரு வீட்டிற்கு ஆடவன் சென்றால், அவன் மரியாதையாய் வெளித் திண்ணையில் உட்காருவான். அவனுக்கு வீட்டு விஷயங்கள் எதும் தெரியவராது. தெரிந்ததும் ஒரு சிறிதுதான்.

ஒரு வீட்டிற்குப் பெண்மணி சென்றால் நேராக உள்ளே அழைத்துக் கொள்ளப்படுவாள். அவளுக்கு அங்குள்ள எல்லா விஷயங்களும் சில நிமிஷங்களுக்குள் தெரிந்துபோம்.

தாயிடம் தான் அழலாம், கொஞ்சலாம். அடம் பிடிக்கலாம், அதிகாரம் செய்யலாம். மற்றவர்களிடம் அது செல்லுமோ?

வீட்டின் கண்மணிகளான—இல்வாழ்வின் அரசிகளான—ஸ்திரீ வர்க்கத்தின் சக்திதத்துவமோ, இயற்கையிலேயே அவர்கள் புத்தி சூக்ஷமம் வாய்க்கப் பெற்றவர்கள்.

வஞ்சக மனத்தினர் எவ்வளவு தான் கூடிக்கலந்து நின்று தங்களின் விஷமமயமான ஹிருதயத்தை மறைத்து நின்றாலும், எப்படியேனும் அது வெளிக்குவராமற் போவதில்லை.

ஒரு வித்வானை ஒரு மூடனுடன் வைப்பதை விட, ஒரு சத்துருவின் அருகில் வைக்கலாம்.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(105-ம் பக்கத் தொடர்ச்சி.)

327. "அறுதலிமகனுக்கு அங்கமெல்லாம் சேஷ்டை."

"*அறுதலி மகன்*" என்பது கிராமாந்தரச் சொல். அதாவது, ஒழுக்கங்கெட்ட ரீதியிற் பிறந்தவனென்பது பொருள். எப்பொழுது பிறப்பு நேராக இல்லாமல் தவறு முறையிலிருக்கிறதோ, அதற்குத் தக்கபடியே துர்நடத்தைகளும் ஜென்ம சுபாவமாய்க் கூடிக் கொண்டிருக்கும். அதைத் திருத்தக்கூடாமலும், திருத்தினும், நிலைபடாமலுமிருக்கும். அதாவது, உயர்ந்த குணங்கள் படிவதற்குப் பிறப்பின் ஒழுக்கமும் தேவை என்பதாம். இதனால் உயர்ந்த ஜாதியாக இருக்கவேண்டு மென்பதல்ல. எந்த ஜாதியாயினும் சரி, அந்த ஜாதியில், அந்தக் குடும்பத்தில் நல்லொழுக்கமுடைய பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அதற்குத் தகுந்தவாறு உத்தமர்களாகவே இருப்பார்களென்றும், அவ்விதமே, அவர்களும் வளர்க்கப் படுவார்களென்றும், ஒழுக்கம் கெட்ட குடும்பத்தில் உதித்தோர் இளமையிலிருந்தே தம் பெற்றோரது தீய சுபாவங்களைத் தாமும் மேற்கொண்டு அங்கமெல்லாம் சேஷ்டையாகக் கிடப்பார்களென்றும் இப்பழமொழியின் கருத்து. அன்றியும், ஜாதிக்குத் தக்கபடி சில முக்கிய குணங்கள் அமைவதும் உண்டு. அதற்கு இணங்க, கீழ் குலமக்களுக்குக் கீழான புத்தியே பரம்பரைக் குணமாய் ஏற்பட்டுப் போயிருக்கலாம். அதைச் சுலபத்தில் மாற்ற முடிகிறதில்லையென்பதும், காலக்கிரமத்தில் சிறுகச் சிறுக ஒழுங்குபடவேண்டு மென்பதும் பொதுவான உலக அபிப்பிராயம்.

328. "கடிதான பிள்ளை பெற்றோருக்குதவுமா ?"

முளைக்கும் பொழுதே சில குழந்தைகளுக்குப் பெற்றோர்களையும் மற்றவர்களையும் எடுத்தெறிந்து பேசுகிற குணம் ஏற்படுகிறது. தாயின் ஒரு சொல்லுக்குப் பத்து சொல் சொல்லப் புறப்பட்டுக்கொண்டு அடங்காத் தன்மையும் பிடிவாத புத்தியும் மேலிட்டுப் போகிறதுண்டு. என்ன அடித்தாலும், அந்த நிமிஷத்துக்கு மட்டும் பயந்ததாகக் காண்பித்து அடுத்த நிமிஷத்தில் பயமற்ற கட்டையாய் மீறிப்போவதுண்டு. இப்படிப்பட்ட குழந்தைகள் பிற்காலத்தில் என்ன ஒழுங்காய் நடக்கப்போகிறது ? தம்மைப் பெற்றோர்களுக்குத்தான் என்ன உதவி செய்யப்போகிறது ? சிறு வயதிலேயே கடினமான மனதும் அடக்க விசுவாசமற்ற தன்மையும் மேலிட்டு விடுமாகில் அக்குழந்தைகளால் பிறகு ஸஞ்சலமே தவிர சுகமென்பதில்லை. ஆரம்பத்திலேயே பெற்றோர்களிடத்தில் பிரீதியும், விசுவாசமும்: கீழ்ப்படிதலும், அவர்

களையே சுற்றிக்கொண்டு திரிகிற சேர்ந்து வாழ்கிற தன்மையும் இருக்க வேண்டும். முதலிலேயே கடின சித்தமும், மூர்க்ககுணமும், அடங்காமையு மானால் இதே போக்குதான் பிறகும் தொடர்ந்து கெடுக்கும். இந்த லக்ஷ ணத்திலே இனிவருங் காலத்தில் கலியாணமானால் பெற்றோர்களைத் தன் மனைவி சொற்கேட்டுத் துரத்தவோ, கொடுமைப் படுத்தவோ நேருமன்றி, வேறு நல்ல தன்மை காண்பது அபூர்வம்தான் இவ்வித இழிகுணங்கள் பிறப் பாலும், சில தாய்தந்தையரது கோணலான வளர்ப்பாலும் நேரிடுகின்றன.

329. "கள்ளன் பிள்ளைக்குக் கள்ளபுத்தி"

327 வது பழமொழியின் கருத்தை இந்தப் பழமொழி இன்னும் தெளி வாகச் சொல்லுகிறது. எவரெவர் எந்தெந்த ஜாதியிற் பிறக்கிறார்களோ அந்தந்த ஜாதியின் இயற்கைக்குணமே குழந்தைகளுக்கும் பொதுவாக அமை கிறதென்று உலகினர் கூறுவர். குணங்கள் ஸ்வபாவமாய் வருகின்றனவா, அல்லது படிப்பு, பயிற்சி இவைகளால் வருகின்றனவா என்று விசாரிக்குங் கால், குலத்தின் ஸ்வபாவமும் ஒரு முக்கிய காரணமாகின்றது என்று ஒரு முடிவான அபிப்பிராயத்துக்கு வந்திருக்கிறார்கள். பொதுவாகக் குணம் என்பது பரம்பரை ஞானத்து மூலியமாயும், அந்தந்த வமிஸத்து முன்னோர் களது குணமூலமாகவுமே ஏற்படுகிறதாம். இக்குணங்கள் தேர்ந்த படிப் பாலும் பயிற்சியாலும் சில சமயங்களில் மாறினாலும் மாறலாம். என்ன மாறினாலும், அந்த ஆதியில் ஏற்பட்ட சொட்டுக் குறைவான புத்தி அருவருக் கத்தக்க விதமாய்க் கொஞ்சம் ஒட்டிக்கொண்டுதான் கிடக்குமாம். வர்ணாசிரம தர்மங்கள் எவ்வளவோ அருமையாகக் கொண்டாடப்பட்டுவர, அதில் சில தவறுகளும் கொடுமையுமிருந்தாலும் அதன் மேன்மையையும், அது நல் லொழுக்கத்திற்கு முன்அஸ்திவாரமென்பதையும் ஒரு பக்கம் ஒப்புக்கொள் வதுதான் உயர்ந்த புத்தியாகும். அவ்விதமின்றி, வருணாசிரமத்தையே அடி யோடு சுட்டெரிக்கவேண்டுமென்று கண்டபடி பேசுவது, அதனுடைய அரு மையையும் உயர்குண சீலத்தையும் அனுபவ பூர்வமாய்த் தங்களது பரம்பரை யில் உணராத குணத்தால் தான். இவ்விதம் உணராத ஜாதியில் சில படிப் பாளிகள் திருந்தித் தோன்றினாலும், அந்த உணராத தன்மையை அடிக் கடி தங்களது ஜாதியின் ஸ்வபாவ குணமாய்க் காட்டி உளறி விடுவார்கள். இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், ஜாதிக்குணமும் முக்கியமாய் ஒருவ னுடைய குணத்திற்குக் காரணமாகிறதென்பதே. அப்படியானால், "கள்ளன் பிள்ளைக்குக் கள்ளபுத்தி" யல்லாமல் வேறு என்ன நல்ல புத்தி யுண்டாகப் போகிறது? குலத்தின் புத்திதான் குழந்தைக்கும் முதலிலே வரும். "குலத் தளவேயாகுமாங் குணம்."

அதிகமாகத் தங்களின் சொந்த சங்கதிகளில் கலந்து அன்புடன் ஒருவர் வேலைசெய்ய நெருங்கினால், அந்த வகையில் அந்த மனுஷ்யருக்குத் தாங்கள் எங்கு அதிகமாய் உட்பட்டுப்போக நேருமோவென்று அஞ்சி, அவர்களின் உதவியை வேண்டாமென்று மறுத்துவிடுகிறார்கள்.

எவ்வளவோ சமீபமாக ஒரு ஊருக்குள்ளாகவே நமக்கு வேண்டிய மனி தன் வந்திருந்தபோதிலும், தெய்வத்தின் நியமனப்படிக் குறிப்பிட்ட நாளில் தான் அவனைச் சந்திக்கமுடிகிறது.

கவிதா  விலாஸம்

இறைவனிடம் தன் குறை தெரிவித்தல்.

இரும்பினு மிரும்புகல்லினுங் கல்லென்
றிருக்குமென் னிருதய நின்றுள்
விரும்பிடயான் கொள்பெரும் பிரயாசை
வீணெனவாயினென் செய்வேன்
கரும்பினு மினிய மொழிமலர் மகடன்
கருத்தனே கருத்தனே கருத்து
வரும்புயல் வண்ணா பொன்னி நன்னதியின்
வளங்கெழு மரங்கநாயகனே. (1)

பண்டுளாய் தொண்டர்பாலு ளாயன்பு
படைத்துளாய் பாவியென்றுயரங்
கண்டுளாய் காக்கவொருதி னங்கருதிக்
கனவினில் வந்தெனையடிமை
கொண்டுளாயுனது குணநிறை யருட்குக்
கோடிவந்தன மினிதருள்வாய்
வண்டுழாய் மணக்கு மார்பனேபொன்னி
வளங்கெழு மரங்கநாயகனே. (2)

பாவியென்றுயரம் பகரவோகணக்கிற்
பாரதஞ் சிறியதாமையா
மேவியா னெந்நாள் விளம்புதற்கரிய
விரசையைக்கடந் துணையடைவேன்
கூவியேயழைத் தகுஞ்சரங்காத்த
குணக்கடல் வரதனே இந்த
மாவிரு நிலவை குந்தமாம்பொன்னி
வளங்கெழு மரங்கநாயகனே. (3)

மூக்கினிற் பொடியை விடுதலை யொழித்தேன்
முன்னவ னறியவென்றுரைத்த
வாக்கினைக்காக்க வலியிலேன் றீய
மாயை யைக்கடப்பது நிசமோ

இல்லறச் சீர்கேட்டினால் படும்பாடு யார்தான் தெரியாமலில்லை. தெரிந்தும் பாசபந்தத்தால் பிணிக்கப்படுவதே மிகுதி.

தீர்க்கமாயுனது சேவடிவழுத்துஞ்
        சீரியராய்ந்த மெய்ஞ்ஞான
மார்க்க நானடையவரமருள் பொன்னி
        வளங்கெழு மரங்க நாயகனே. (4)

தேனுகு செழுமைக் கமலமாமுனது
        சேவடிச் சேவையைக்கண்டு
நானுமெய்யடியர் போன்மெனக்களிக்கு
        நல்லநா ளெந்த நாளையா
போனநாள் செய்தபிழை யெலாம்பொறுத்துப்
        புரந்தருளென்றனை யடைந்தேன்
வானவர் மனிதர்வாழ்வெனும் பொன்னி
        வளங்கெழு மரங்க நாயகனே. (5)

பொருளினைத் தேடிப்புல்லரை நாடிப்
        பொய்ப்புகழ்க் கவிதைகள்பாடித்
திரிகிறமோடிப் புலவரைக்கூடிச்
        சிந்தனை பலவழியோடித்
தெருளறு மடையேன் தீவினையுடையேன்
        தெளிந்துனைத்து திசெயவென்பான்
மருவுநின்கருணை மறப்பனோ பொன்னி
        வளங்கெழு மரங்கநாயகனே. (6)

உப்பிடுபாண்ட மனையவிவ் வுடலை
        யுறுதம ரொடுபொருளினையே
மெய்ப்பட நினைத்துச் செப்புதற்கரிய
        விமலநின்ன டியினை மறந்த
தப்பித மிருக்கத் தப்பிலிபோலச்
        சாற்றிடுந் தப்பிலியென்பால்
வைப்பையோகருணை யொப்பிலாப் பொன்னி
        வளங்கெழு மரங்கநாயகனே. (7)

மிஞ்சியதுட்டக் குணம்பெறும் பாலன்
        மீதுநற்றாய்க் குளமுருகும்
கொஞ்சமு மேழையென்மிசைக் கருணை
        கூர்ந்திடாயென்னி லென்செய்வேன்
வஞ்சியர்சாயல் கண்டகம் வருந்து
        மயிலினங்களி கொடுநடிக்க
மஞ்சுவந்திறங்கும் பொழிலுடைப் பொன்னி
        வளங்கெழு மரங்கநாயகனே. (8)

எத்தனையடியாரிணை யினுன்னடிக்கீ
    ழிருந்து நல்லின்பு துய்க்கின்றார்
அத்த நான்மட்டும் பாவியாயுலகி
    லலைகின்றே னிதுவருட் கழகோ
முத்தின நாகாத் தினந்தேக்கு
    முதிர்மணச் சந்தனமுதலாம்
வஸ்துவைக் கரைக்கணெறி திரைப் பொன்னி
    வளங்கெழு மரங்கநாயகனே. (9)

விஞ்சுசிர்ப்பதின் மருரைத்த செந்தமிழாம்
    வேதமந்திரப் பொருளுணரும்
நெஞ்சகமில்லே னேமநிட்டைகளை
    நீக்கினேனருள் பெறநினைத்துப்
பிஞ்சிலேபழுத்த பழமெனத்துதிகள்
    பிதற்றினேன் பிழைபொறுத் தருள்வாய்
மஞ்சுலாம் பொழில்சூழ் மருங்குடைப் பொன்னி
    வளங்கெழு மரங்கநாயகனே. (10)

1890-ம்ஹூ இயற்றியது. S. வேங்கடராயலு நாயுடு.

விருந்திட்ட ஒருவரின் கடிதம்.

எளியேன்மீது கிருபை வைத்து, அன்பும் ஆதரவும் கலந்து, வெகு தாழ்மையும் பணிவும் பூண்ட பக்த சிரோன் மணியராகிய தாங்கள் என்னைக் காணவேண்டி எழுந்தருளிக் காட்சி தந்து ஆசி அருளியதை யாங்களிருவரும் என்றும் மறவோம். ஆண்டவன் நம்மிடைத் தோன்றிய அன்பெனும் நல்லொளியை என்றுங் காத்து வருவராக. தாங்கள் எங்களை விட்டகன்ற ஞான்றிருந்து தங்களது "போதும்", "போதும்" என்று கூறும் இனிய தேனொழுகு வாசகத்தையும், எதையும் பெற்றுக்கொள்ளாது தள்ளி நின்று தயங்கி நிற்கும் காட்சியும், ஆடம்பரமற்ற தூய்மையான தோற்றமும், எங்களது அகக்கண்களினூடே நின்றுகொண்டிருப்பன. எல்லாம் வல்ல இறைவன் தங்களது பொன்னிலும் உயரிய ஒப்பிலா செவ்விய தகைமைக்கு இரங்கி அருள்புரிவராக.

"இனி நீ காட்டுகிற அன்பினால்தான் அந்தத் தாயில்லாக் குழந்தைகள் தங்களின் மறைந்த மாதாவை மறந்திருக்கமுடியும்.

ஜீவகாருண்யக் கும்மி.

பட்டுப் புடவை பளபளென—இரு
பாதசரங்களும் ஓசை செய்ய
செட்டுப் பெண்டீர்களே வாருங்கடி நல்ல
ஜீவ காருண்யத்தைப் பாடுங்கடி. (1)

பாவ வேர்களை அறுத்திடுமோம்—அது
பகரரிய இன்பத்தைத் தந்திடுமாம்
தவத்திலு மிக்கச் சிறந்ததுவா மந்த
ஜீவகாருண்யத்தைப் போற்றுங்கடி. (2)

ஜலசுத்தி செய்யுமீனைக் கொல்லவேண்டாம்—சுத்த
சைவத்தை என்னாளும் தள்ளவேண்டாம்
நலந்தரும் ஜீவகாருண்யத்தை நீங்கள்
நாடிக்கும்மி அடியுங்கடி. (3)

ஆடுகோழியை அறுக்கவேண்டாம்—நம்
ஆன்றோர்கள் வாக்கை நீக்கவேண்டாம்
பாடும் பறவைகளை பிடிக்கவேண்டாமதைக்
கூட்டிலிட்டு நீங்கள் வளர்க்கவேண்டாம். (4)

வளர்த்திடும் ஆட்டைக் கொல்லவேண்டாம்—கொடும்
பலிகளை இட்டு உண்ணவேண்டாம்
நால்வர் கொண்டாடிய சைவத்தை நீங்கள்
நாட்டோரறியக் கூறுங்கடி. (5)

வன்கொலை புரிந்து உண்ணாதே—திரு
வள்ளுவர் கருத்தைத் தள்ளாதே
என்றும் ஜீவனை ஒன்றாய்க்கருதி
ஈசனைப்போற்றிக் கும்மியடி. (6)

பத்தியாய்த் தெய்வத்தைப் போற்றுங்கடி—பசும்
பால்பொங்கல் இட்டுப் படையுங்கடி
நித்தமும் சைவத்தைக் கைக்கொண்டு நீங்கள்
நீடூழிகாலம் வாழுங்கடி. (7)

சென்னைப் பட்டினத்துச் செல்வியாம்—அவள்
செந்தமிழ மிர்தகுண போதினியாம்
கன்னிகளே சைவபோதத்தை யவள்
கொண்டுவருவதைப் பாருங்கடி. (8)

பாருங்கடி களிகூருங்கடி—நல்ல
பாங்கியரை ஒன்றாய்ச் சேருங்கடி
வருடத் தொகையை அனுப்பியே நீங்கள்
வாழ்த்தித் தினமும் பாடுங்கடி. (9)

மு. தங்கமணிப்பிள்ளை.

அடுப்புக்கரியின் அபார சக்தி.

தலைவலியையும் ஹிருதய எரிச்சலையும் தீர்க்கும்.

சாதாரணமாக வீடுகளில் உபயோகிக்கப்படும் அடுப்புக் கரிக்குப் பல அரிய சக்திகள் உண்டு. பல ரசாயன வாயுக்களை உறிஞ்சிக் கொள்ளவும், சில நீர்ப்பண்டங்களைச் சுத்தம் செய்யவும் அதற்குச் சக்தியுண்டு. தலைவலி உபத்திரவத்தினால் கஷ்டப்படும் ஒருவன் கரியைத் தூள் செய்து ஓர் கோப்பை ஜலத்தில் போட்டுக் குடித்தால், அவன் உடனே குணமடைவான். ஹிருதய எரிச்சல் உள்ளவர்களும் இந்த முறையைக் கையாளலாம். ஒருவன் சரீரம் தீயால் எரிக்கப்பட்டால் ஓர் துண்டுக்கரியை அவ்விடத்தில் வைத்தால் வலி குறைந்துவிடும். வெட்டுக் காயங்களுக்கும் சாதாரண காயங்களுக்கும் ஒத்தல் கொடுக்க கரி உபயோகப்படுத்தப்படலாம்.

¼ ராத்தல் சிறு சணல் விதையை 3/4 அவுன்ஸ் கரித்தூளுடன் கலந்து ஓர் சிறு துணியில் அதை எடுத்து காயம்பட்ட இடங்களில் ஒத்தல் கொடுக்கலாம்.

பெருமூச்சுவிடும் ஒருவன் கொஞ்சம் கரித்தூளை தண்ணீரில் கலந்து வாயைக் கொப்பளித்தால், அவன் சுகமாக மூச்சுவிடலாம்.

ஜலத்தைச் சுத்தப்படுத்தவும், துர்நாற்றத்தை நீக்கவும் கரியை உபயோகிக்கலாம்.

செடியிலிருந்து பறித்த புஷ்பங்களை அதிக நாள் வாடிப்போகாமல் காப்பாற்ற அவைகளை ஓர் துண்டு கரி மிதக்கும் ஜலத்தில் போட்டுவைக்கலாம். கண்ணாடிப் பண்டங்களைச் சுத்தம்செய்ய வேண்டுமாகில் கரித்தூளை அதில் போட்டுத் தேய்க்க வேண்டும்.

வாத்து, கோழி, புறா முதலிய பறவைகளின் கழுத்தில் ஓர் கரித்துண்டு கட்டப்பட்டால், அவைகள் வியாதிகளால் பீடிக்கப்படமாட்டா.

இறைச்சி வைக்கப்பட்டிருக்கும் அறையில் ஓர் தட்டில் அடுப்புக்கரி வைக்கப்பட்டால், இறைச்சி கெட்டுப் போகாமல் நல்ல வாசனையுடனிருக்கும். கரித்தூள் வழியாக ஜலம் வடிந்தால் ஜலம் சுத்தமாக இருக்கும்.

ரஸாயன சாஸ்திரிகளிடம் இந்த உபயோகங்களுக்காக பரிசுத்தமான கரி விற்கப்படுகிறது.

"தமிழ் நேசன்"

யாராவது இலவசத்தில் செய்து கொண்டு வந்து கொடுக்கிற பலகார பக்ஷணங்கள் தின்னத்தின்ன வெகு ருசியாயிருக்கின்றனவாம். கொண்டு வந்தவர்களைச் சிலாகித்து அனுப்பிவைப்பதும் மிகச் சுலபமாகவே இருக்கிறதாம். ஆனால், தானாகப் பணம் செலவழித்துச் செய்தோ வாங்கியோ உண்பதென்றால் அது அதிக கஷ்டமாயிருப்பதுடன் பணப்பையும் அழுகிறதாம்.

திருமிகு நாய்ப்பெரியார்! பூனைச்சீமான்!

பூனைச்சீமான்:—நீ ரொம்ப உல்லாஸமாக இருக்கிறாயே: வீடு முழுதும் உனக்கே சொந்தமென்று நினைத்துக் குலைத்துத் துள்ளுகிறாயே? இப்படியெல்லாம் உறவாயிருக்க நீ எங்கே கற்றுக்கொண்டாய்: உன் பிழைப்பு எப்படி நடக்கிறது?

நாய்ப் பெரியார்:—செய் நன்றி மறவாத விசுவாசத்தால் தான் என் பிழைப்பு சுகமாக நடக்கிறது. நான் என்ன குலைத்தாலும் சும்மா குலைக்க மாட்டேனென்று என் எஜமானர் நினைக்கிறார். அவர்மேலே எனக்கு நல்ல மனசு நல்லதுக்கு நல்லதே முடிவு ஒரு கபடமும் நடுவிலே இல்லே.

பூனை:—ஐயோ! என் பாடு, எந்த வீட்டுக்குள் நுழைந்தாலும் உடனே துரத்திவிடுகிறார்கள். எனக்குக் கபடம் ஜாஸ்தியாம்! விசுவாச புத்தியே இல்லையாம்! ஒருவேளை சோற்றுக்கு என்னை வா என்பவர்களையே காணோம்!

நாய்:—ஆனாலும் என்ன? நீ எத்தனை நன்றிகெட்ட ஜெந்துவானாலும் உன்னைத்தான் கோயிலுக்குள்ளே தாராளமாக விடுகிறார்கள். கோயிற் பூனை தேவருக்கஞ்சாதென்பது பழமொழி யல்லவா? அங்கே படைக்கிற பொங்கல் பால் எல்லாவற்றிலுமே நீ ருசிபார்த்து விடலாம். என்னையோ கோவில் வாசலுக்கு வெளியிலேயே நிறுத்திவிடுகிறார்கள். நான் கோவிலுக்குள்ளே போனால் பரிசுத்தம் கெட்டுவிடுமாம்!

பூனை:—நீ என்னதான் நன்றி மறவாத ஜெந்துவாக—இருந்தாலும், மலம் தின்னப்போகிற அந்த அசங்கிதபுத்தி உன்னைவிட்டுப் போகவில்லையே? அதனால்தான் சமையலறைக்குள்ளும் கோவிலிலும் உன்னை விடுவதில்லை.

நாய்:—நீ எலியைப் பிடித்துச் சித்திரவதை செய்து தின்னுவதைவிட நான் கெட்டுப்போனேனா?

பூனை:—நான் எலியைப் பிடித்தாலும், வீட்டுக்காரனுக்கு அந்த எலியால் உபத்திரவமுண்டாகாதிருப்பதற்காகப் பிடித்ததுபோலக்காட்டி மயக்கிவிட்டு, பிறகு அதையே என் வயிற்றுக்குள்ளேயும் தள்ளிவிட்டுக் கொள்கிறேன். உனக்கு அப்படித் தந்திரமாய் வேஷம்போட்டுக் காட்டத்தெரியவில்லை. கேவலம் யதார்த்த ஜந்துவாய் காலை நக்குவதால் உனக்கு உதை! உன்னைப்போல நான் கண்டவர்களையெல்லாம் நக்கி உட்படுவதில்லை. வெகு பரிசுத்தமாய் ரொம்ப அழகாயிருப்பதுபோல் காட்டிக் கொள்கிறேன். 'விஸ்வாசப் பூனை' என்று எனக்குப் பேர். அதாவது, கபடத்தை வெளிக்குக் காட்டாமலிருப்பவன் என்று அதற்கு ரகசிய அர்த்தம்.

வேலை அதிகமிருக்கிறதென்று செய்யாமலே நாட்களைப் போக்கினால் எப்பொழுதும் அது பாரமாகவே தோற்றும். வேலையைச் செய்துகொண்டே சென்றால்தான் அதன் சுமையும் கவலையும் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறையத் தொடங்கும்.

நாய்:—கபடக்காரனுக்குத் தான் இது காலம்! விஸ்வாசக்காரனுக்கு வெண்வீரும் பருக்கையுந்தான் கதி. அதுபோகட்டும். "நாயும் பூனையும் போல" என்று சொன்னால், அதற்குத் தீராப்பகை என்று பொருளாம். எதற்காக நம்மிருவருக்குள்ளும் இப்படித் தீராப்பகை வரவேணுமோ? நாய்ப் பேரியாராகிய நான் பூனைச் சீமானாகிய உன்னுடைய பரிசுத்தத்தையும் சுசிகரமாயிருப்பதையும் கற்றுக்கொண்டும், அப்படியே நீயும் விஸ்வாசம் நன்றிமறவாமை முதலிய நற்குணங்களை என்னிடமிருந்தும் கற்றுக்கொண்டால் எவ்வளவோ மேன்மைப்பட்டு நிற்கலாமே! அப்படித் திருந்தி உயருகிற குணத்தைக் காணோமே! நமது ஜாதியின் அல்ப புத்தியாலேதான் நமக்குக் கெட்ட பேர்!


பூனை:—அதோ அந்த வளையிலிருந்து ஒரு எலி தலையை வெளியில் நீட்டுகிறது. எனக்கு இப்போது உத்தியோக சமயம். பிறகு பேசலாம், நீ போய்வா. உனக்கு வந்தனங்கள்.

இதற்கு வழி எப்படி?

ஒருவனுக்குத் தன் நண்பரொருவருக்கு விருந்தளிக்க வெகு விருப்பம். ஆனால், அவனுக்கு அவனது வீட்டில் அவன் விருப்பப்படி செய்து நடத்தக்கூடியவர்களில்லை. அந்த நண்பரோ ஹோட்டலில் புசிக்க விரும்பாதவர். எதையும் வீட்டில் செய்து உபசரிக்கும்படி கூறுகிறார். வீடு உள்ள நிலைமையை அவரிடம் தெரிவித்துக் கேவலப்படவும் மனமில்லை. விருந்தும் கட்டாயம் செய்யவேண்டியிருக்கிறது. உதவிக்கு வேறு வீடுகளும் கிடையாது. இதற்கு வழி எப்படி? ஹோட்டலிலிருந்தும் தருவித்து விடுவதா?

அழகிய நீண்ட கேசங்களைத் தாம் செய்துகொண்ட தெய்வப்பிரார்த்தனையின்படி நாவிதனிடம் எறிந்துவிட்டு சிரமுண்டிதம் செய்துகொள்கிறார்கள். இதில் ஒருவித மனப்பக்குவமும், வைராக்கிய சித்தமும் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும். தனது கேசங்களை இழந்துவிட மனம் ஒப்புவதென்பது சாமான்ய சங்கதியல்ல.

ஒரு பத்திராசிரியர் தமது பத்திரிகைக்காகத் தனிப்பட எழுதவேண்டுமென்று கேட்டுக்கொண்ட விஷயத்தை ஒரு நிருபர் அவ்விதம் செய்யாமல் வேறு பத்திரிகைக்கு அனுப்புவாரானால், அதை ஒரு பொருட்டாக மதிக்காமல், அந்த நிருபர் எழுதவேண்டிய இடத்திற்கு வேறு விஷயங்களைச் சேர்த்துப் பத்திரிகையைப் பூர்த்திசெய்து விடுகிறார். சிப்பை எடுத்து மறைத்த தினாலேயே கல்யாணம் நின்றுவிடுவதில்லை.



பெரியாரின் மொழிகள்



Illness and want are sad calamities in any place.

எவ்விடத்தில் நோயும், தேவையும் இருக்கிறதோ அவ்விடத்தில் கலவரம் இருக்கும்.

Do good to thy friend to keep him, to thy enemy to gain him.

உன் நட்பு அகலாதிருக்க உன் நண்பனிடம் உத்தமனுகவும், உன் விரோதியை வெல்ல அவனிடத்தில் நல்லவனுகவும் நட.

No Noble task was ever easy.

எந்த நற்காரியமும் எக்காலத்திலும் எளிதாய் இருந்ததில்லை.

He that will have all, looses all.

எவன் அதிகம் வேண்டுமென்று விரும்புகிருனே அவன் எல்லாவற்றையும் இழக்கிருன்.

That what is good for the back is bad for the head.

நமக்கு நன்மையைப் பயக்கும் ஒன்றே மற்ெருரு காரியத்திற்குத் தீமையாகிறது.

A fool may give a wise a good counsel.

ஒரு மூடனும் கூட ஒரு புத்திசாலிக்கு ஒரு சிறந்த அனுபவம் கூறலாம். (எல்லாம் அறிந்தவரும் ஏதும் அறியாதவரும் இப்பூவுலகில் கிடையார்.)

If poverty is the mother of crimes, want of sense is the father of them.

வறுமையானது குற்றங்களுக்குத் தாயாயிருந்தால், புத்தியின்மை அதற்குத் தந்தையாகிறது.

There is no better counsellor than time.

நேரத்தை விட சிறந்த மந்திரி கிடையாது.

The trap to the highborn is ambition.

உயர் குடியில் பிறந்தவர்களுக்கு ஆசைதான் தகுந்த வலை.

When friends meet, hearts warm.

சிநேகிதர்களைச் சந்தித்தவுடன் மனம் புளகாங்கிதமடைகிறது.

The better the day the better the deed.

காலம் சரியாயிருந்தால் காரியம் கைகூடும்.

God's mill grinds slowly but surely.

கடவுளின் எண்ணம் மெதுவாக நடைபெற்றாலும் நிச்சயமாக நடைபெறும்.

The whole man to one thing at a time.

சிலர் வலியச்சென்று ஆர்வத்துடன் நேசிக்க முயன்றும், மற்றவர்கள் அதற்கு இடம்தராமல் விலகி விடுகின்றனர். அவரவர் நெஞ்சத்தளவேயாகுமாம் நேசமும் அன்பும்.

முழு மனதையும் ஒரு காரியத்தில் ஒரு சமயத்தில் வைக்கவேண்டும்.

Age considers, youth ventures.

முதிர்ந்த வயதுள்ளோர் ஒரு காரியத்தில் இறங்குமுன் அதைத் தீர்க்காலோசிக்கின்றனர். ஆனல், இளைஞர்கள் பயப்படாமல் முன்னணியில் புகுகின்றனர்.

Astrology is true, but the astrologers cannot find it.

ஜோஸ்யம் நிஜமே. ஆனல் ஜோதிடர்கள் அதைக் கண்டுபிடிப்பதில்லை.

Time wasted is existence lost in life.

வீணுக்கிய ஒரு விஞடி நம்மாயுள் நாளில் ஒரு விஞடியை இழப்பதொக்கும்.

Better counsel comes overnight.

அதிகாலையில்தான் நல்ல புத்திமதிகள் உதயமாகின்றன.

A heart unspotted is not easily daunted.

மாசு மறுவில்லாத மனது எதற்கும் அஞ்சாது.

A heavy purse makes a light heart.

அதிகப் பணமுடையோன் குதூகலமாயிருக்கிறன்.

Beautiful flowers are soon picked.

நல்ல வஸ்துக்கள் சீக்கிரத்தில் மறைந்துவிடுகின்றன.

The only way to have a friend is to be one

ஒரு நண்பனே ஒருவனுக்கு சிநேகனுக இருந்தால் அவன் சிறந்தவனுக இருக்கிறன்.

Catch not at the shadow, and loose the substance.

ஒரு வஸ்துவைப் பெறுவதற்குப் பதிலாக அதன் சாயலை அடையாதே.

He needs no advice whose mind is made up.

ஒருவன் ஒரு காரியம்செய்யத் தீர்மானித்துவிட்டால் அவன் ஒரு புத்திமதியையும் கேளான்.

Facility of action comes by habit.

துரிதமாகச் செய்தல் அக்காரியத்தில் மிகவும் அனுபவம் மிகுந்ததினலேயே.

Every man of true genius has his peculiarity.

ஒவ்வொரு நிஜபுத்திகூர்மையுள்ளோரும் மற்றைய ஏனையோரில் ஏதாவது ஒரு வகையிலாவது வித்தியாசப்படுவர்.

A fie of straw yields naught but smoke.

கல்யாணப்பெண் காணமற்போய் விவாகம் நின்றுவிடுவதுண்டு. முதல் மனைவி மரித்ததனல் பிறகு இரண்டாவதாக வந்தவளால் குடும்பம் சீர்படாமலே உயிரஞ் சுக்கலாகச் சிதறிப்போனதுமுண்டு. ஒரு பத்திரிகையை ஆரம்பித்த ஆசிரியர் காலஞ்சென்றுவிட, அவரோடு பத்திரிகை அந்த அமைப்பில் நடத்த முடியாமல் நின்றுபோனதுண்டு. இவை பெரிய சம்பவங்களாகும்.

ஒரு வைக்கோல் போர் எரிந்தால் புகையைத் தவிர வேறு நமக்குக் கிடைப்பது ஒன்றும் கிடையாது. அதைப்போல் அற்பர்கள் அழிந்தால் பலன் எதும் கிடையாது.

As a man makes his bed so must he lie.

எவ்விதமாக மனிதன் தன் வாழ் நாட்களுக்கு வழி பண்ணுகிறானே அவ்விதமே அவன் நடக்கவேண்டியவனுகிருன்.

Many a one threatons while he quakes with fear.

எத்தனையோ பேர் தாங்கள் பயத்தினுல் பீதியடைந்திருக்கும்போது பிறரையும் பயப்படுத்துகிருர்கள்.

Never trouble yourself with trouble till trouble troubles you.

கஷ்டம் வரும்வரையில் நீ கஷ்டப்பட்டுக் கொள்ளாதே.

S. ஸ்ரீரங்கராஜு,
ஜெகன்னுதபாக், சைதாப்பேட்டை.

சித்திர விநோதங்கள்.



பத்திராசிரியர் செத்து வாரமாயிற்று, அவர் ஸ்தானத்துக்கு உதவி ஆசிரியர் உயர்த்தப்பட்டார். ஆனல் சம்பளம் உயரவில்லை. உயராவிட்டாலென்ன?—உதவி ஆசிரியர் உயரமாகவே வளர்ந்திருந்தார். வேலைகளும் இரட்டித்து உயரமாகவே வளர்ந்துவிட்டது. இரவு இரண்டுமெணி வரைக்கும் ஆபீஸ் அறையில் எழுதிக்கொண்டிருந்தார். எண்ணெயில்லாதத்தால் விளக்கணைந்துவிட்டது. என்ன செய்வதென்று மற்றொரு மேஜைக்கருகே வந்தார். அங்கே நாற்காலியிலே பழய செத்த ஆசிரியர் உட்கார்ந்திருப்பதுபோல் தோன்றவே அலறிக்கொண்டு தெருக்கதவைத் திறந்து வெளியே ஓடிவர அந்நேரத்தில் அந்தப்பக்கம் வந்த போலீஸ்வீரர் எவனே கள்வன் ஓடுவதாகக் குடுமியைப் பிடித்துக் குலுக்கினர். பிறகு விஷயம் தெரிந்து அப்போது ஆசிரியர் பாதிவரை எழுதியது எதைப்பற்றி என்று போலீஸ்வீரர் ஆபீஸ் அறையில் பார்த்தபோது "அச்சமில்லை, அச்சமில்லை" என்பதைப்பற்றிய வியாசமா யிருந்ததாம்.




ஃ



சாந்தி முகூர்த்தமான மறுநாள் இரவு மூன்றுமணிக்கு மணப்பெண்ணுக்கு வயிறு கடாமுடா எனவே தன் கணவனை எழுப்பித் தன் அவசரத்தைச் சொன்னாள். புது மாப்பிள்ளை "லாந்தர் எடுத்துக்கொண்டு பின்னேவர" பெண் முன்னேயாகத் தோட்டத்திற்குச்செல்ல வெளிச்சத்தைக்கண்ட இரு பெண்கள் ஓடிவந்தனர். அவர்களைக் கண்டதும், மாப்பிள்ளை விளக்கை அங்கு வைத்து விட்டுச் சென்றுவிட்டார். பெண்கள் விஷயம் தெரிந்துகொண்டு, "என்னடியம்மா, அதற்குள்ளே வெட்கம் தீர்ந்து போச்சாடி, நன்றாயிருக்கு, மாப்பிள்ளையைத் துணைக்கு அழைச்சுகிட்டு வந்தயே" என்று பழித்துப்பேச, அதற்கு மணப்பெண் "என் அவசரத்திலே வெட்கத்தைப்பார்க்க நேரமில்லை" என்றனளாம்.

ஃ

இரண்டு திருடர்கள் ஒரு வீட்டில் நுழைந்து திருடிக்கொண்டிருந்தனர். அப்போது ஒருவன் ஒரு நாற்காலியில் இடித்துக்கொண்டு சப்தம் உண்டாக்கினான். அந்த ஓசை கேட்டுக் கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்தபடியே வீட்டுக்காரர் "யார் அது?" என்று உரத்த குரலில் கேட்டார். திருடரில் ஒருவன் "மியா, மியா" என்று சப்தமிட்டான். வீட்டுக்காரர் ஏதோ பூனை எதையோ தள்ளிற்று என்று எண்ணினார். சில நிமிஷம் பொறுத்து மற்றொரு திருடனும் ஒரு நாற்காலியில் மோதிக்கொண்டு விழவே, அந்த சத்தத்தைக் கேட்டு வீட்டுக்காரர் "யாரது" என, திருடன் மற்றொரு பூனை யென்று சொல்லி விட்டு ஓடினான். வீட்டுக்காரர் உடனே விளக்கேற்றப்போக, அதற்குள் மற்றொருவனும் பறந்துவிட்டான்.



ஃ

புஸ்தகப் படிப்பே கல்வியா? இங்கிலாந்தில் மாணவர்கள் நடுத்தரப்படிப்பு முடிந்தவுடன் பட்டாளத்தில் சேர்ந்து விடுகிறார்கள். ராணுவ உத்தியோகஸ்தர்கள் பலர் இந்தியாவில் நிர்வாகிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களிடத்தில் அனுதாபமுள்ளவர்களாகவும், இரக்கமுள்ளவர்களாகவும் மனித சுபாவத்தை அறிந்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் உயர்தரக் கலாசாலைகளில் படிக்காததால் குணம் பெறவில்லையா?

•



பையன்:—அக்காளே இன்னைக்கு ரொம்ப சிங்காரித்திருக்கிறையே என் அம்மா?

தாயார்:—அக்காவை கட்டிகிறதுக்குப் பார்க்க வருகிறுங்கோ, அக்காவுக்கு கண்ணாலமாகிக் குட்டிபோட்டா நீ கட்டிக் கொள்ளலாம்.

பையன்:—இப்பவே அக்காளேக் குட்டி போடச்சொல்லு. எனக்கு விளையாட்டுக்கு அந்தக்குட்டி துணையாயிருக்குமே. இந்தப் பொம்மையை அக்கா வயிற்றுக்குள்ளே போட்டுவிட்டால் உயிருள்ள குழந்தையை அக்கா பெற்றுவிடுவாள்.

ஒத்த குணத்தினர் ஒருங்கு கூடுதல்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு துறையில் உற்சாகமிருக்கிறது. அப்படி ஒரே துறையில் உற்சாகமுடையவர்கள் ஒருங்கு கூடும்போது அனுபவிக்கும் ஆநந்தம் எல்லை கடந்து விடுகின்றது. பத்திரிகை வாசிப்புள்ளவர்கள் ஒன்று கூடுகையில் வெகு உற்சாகம் உண்டாகி விடுகிறது. ஒரே தொழிலினர் சிலர் ஒன்ருகச் சேருகையில் அங்கும் பரவசம் பெருகுகின்றது. இவ்விதமே நல்லோர் சிலர் ஒன்று சேர்கையிலும், பக்திமான்கள் பலர் ஓரிடத்திற் சந்திக்கையிலும் மகிழ்ச்சி பொங்குகின்றது. அச்சமயம் அங்கு எவரேனும் வந்து சூழ்ந்துள்ளவர்களின் குணங்களுக்கு எதிரிடையானவர்களாக இருப்பின், அவர்கள் இந்த உற்சாகத்தில் கலந்து கொள்ள முடிகிறதில்லை. நடிப்பு வேஷமிட்டபோதிலும் தெரிந்துவிடுகிறது.

மனைவியின் கற்பிலுள்ள சந்தேகமும், தன் சட்டைப்பையின் ஜேப்பிலுள்ள கிழிச்சலும் எவ்வளவு ஜாக்கிரதையான நினைவுடனிருப்பினும் பிறகு பேராபத்தையே உண்டுபண்ணும்.

—

அதிகமாகச் சிலரிடம் பழகுவதில் ஏற்கெனவே இருந்த மரியாதையும் ஒழுங்கும் கெட்டுவிடுகிறது. முதலிலே தட்டிக்கொடுத்தும் குத்தியும் பேசத் தொடங்கி சரசமாட நெருங்கி விடுகிருர்கள். உடனே எச்சரிக்கையுடன் விலக நேர்கிறது.

க்ஷேம விசாரணை.

ஆதிகாலத்திலும் இப்பொழுதும் நம்மவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது நமஸ்காரம் என்று சொல்வது வழக்கம். மற்ற தேசங்களிலும் வெவ்வேறு விதமாக க்ஷேமம் விசாரித்து வருகிறார்கள். அவை கீழ் வருமாறு.

பிரஞ்சு தேசத்தில், 'உங்கள் விஷயம் எப்படி இருக்கிறது' என்று கேட்கிறார்கள். இடாலியர், 'எப்படி யிருக்கிறாய்' என்று சொல்லுகிறார்கள். ஸ்பானியர் ஒன்றும் சொல்வதில்லை. சில சமயங்களில் 'கடவுளைப் பின்பற்று' என்கிறார்கள். ருஷ்யர் 'எப்படி ஜீவிக்கிறாய்' என்று கேட்கிறார்களென்றாலும், விடை யின்னதென்பது விளங்கவில்லை. எகிப்திலும் துருக்கியிலும் அதிக உஷ்ணமாயிருப்பதால் அவர்கள் 'வியர்வை எப்படி' என்று கேட்கிறார்கள். உஷ்ணப் பிரதேசங்களில் சரீர சர்மத்தை பாதுகாப்பது அவசியமேயாகும். ஜெர்மனியர் 'உன்னில் நீ எப்படியிருக்கக் காண்கிறாய்' என்கிறார்கள். அராபியர் 'கடவுளுக்கு வந்தனம், எப்படி யிருக்கிறாய்' என்று கேட்கிறார்கள். பாரசீகன் 'உனது நிழல் உன்னில் குன்றாதிருக்கக்கடவது' என்றும். ஸ்வேதியர் 'நீ எப்படியிருக்கக் கூடும்' என்றும், டச்சுக்காரர் 'உன் காலம் எப்படி' என்றும், (ஆசியா) துலுக்கர் 'கடவுளின் கடாட்சத்துக் குட்பட்டிரு' என்றும், சைனாக்காரர்கள் 'இரைப்பை யெப்படி யிருக்கிறது. நீ உன் ஆகாரத்தைப் புசித்தாயா' வென்றும் கேட்கிறார்கள்.

வார்த்தை. தேச ஆசாரத்துக்கும். நடையுடை பாவனைக்கும். கல்வியறிவுக்குத் தக்கவாறும் ஏற்படுகிறது.


ச. முனிஸ்வாமி பிள்ளை.

மனித இருதயம்.

"மனித இருதயமானது மிகவும் அதிசயமான மிஷின் என்று சொல்லலாம். கடவுளுடைய அதி உன்னதமான படைப்புகளில் இதுவும் ஒன்று. மனிதனுடைய வெற்றிக்கும் செயல்களுக்கும் இருதயமே பிராணாதாரமாயிருக்கிறது; ஆதலால், மனிதனுடைய முயற்சியின் பலாபலன்கள், இந்த அதிசயமான சிறிய யந்திரம் நல்ல நிலையிலிருப்பதையும், குற்றமற்ற தன்மையினையும் பொருத்து நிற்கின்றன. கோடிக்கணக்கான பேர்களின் அதிருஷ்டத்துக்கு இதுவே காரணமாயிருந்தது. பெரிய ராஜ்யங்களை உண்டாக்குவதற்கும், மனிதவர்க்கத்தின் ஆக்கக் கேடுகளை நிர்ணயிப்பதற்கும் மனிதனுக்குத் துணைபுரிந்தது இதுவேயாகும். நல்ல நிலையிலுள்ள இருதயமானது, இளமையில் மனிதர்கள் எண்ணக்கூடிய பெரிய நோக்கங்களைக் கைவரப் பெறுவதற்குச் சாதகமாக இருக்கின்றது. மேலும் மனித அபிவிர்த்திக்கு இன்றியமையாததான ஊக்கத்தையும் வீரியத்தையும் தைரியத்தையும் கொடுக்கிறது. ஆகவே, மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட யாதொரு இயந்திரத்தைக் காட்டிலும், இந்தச் சிறிய இயந்திரமானது மனிதனுக்கு சுகத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது."

அண்ணன் மனைவி—அம்மாவா ?

"என் அருமை மருமகளே! லக்ஷ்மி! இந்தா சோமுவை நீ வாங்கிக் கொள்ளு. இனிமேலே அவன் உன் சொத்து. உன் குமாரன் ராமுவின் பாலை இந்த சோமுவுக்குக் கொடுத்து வளர்த்து ஒரு பெரிய மனிதனாக்கு. நான் இனி பிழைக்கமாட்டேன். என் பர்த்தா போன இடத்துக்குப் போகிறேன்" என்று மரகதம் பிரலாபித்தவளாய் தன் வியாதிப் படுக்கையிலிருந்து சற்றே உட்கார்ந்து சோமுவை தன் மருகியிடம் தூக்கிக் கொடுத்தாள். மருகியான லக்ஷ்மியும்தன் கணவனோடும் கண்ணீர் வடியப் பெற்றுக்கொண்டாள்.



ஃ

மரகதம் அமாவாசைக்கு முன் இரண்டாம்நாள் கண்மூடிவிட்டாள். லக்ஷ்மி இந்தப் பக்கத்தில் சோமுவைப் படுக்கவைத்துப் பால் கொடுத்துக்கொண்டும், அந்தப் பக்கத்தில் தன் குமாரனைப் படுக்கவைத்துக் கொண்டும் இப்படியாக வளர்த்து சோமுவை ஐந்து வயது பையனாக்கினாள். சோமுவும் ராமுவும் பள்ளிக்கூடம் சென்று வருவதாயினர்.



ஃ

தங்களின் ஆபரணங்களை அதன் மெருகும் பளபளப்புக் கெடாதபடி எப்பொழுதோ ஒரு சமயம் அணிந்து மற்றக் காலங்களில் பெட்டியில் பத்திரப்படுத்தியிருந்த சில பெண்மணிகள் அவற்றைத் தங்கட்குப் பிறகு வருகிற இளையாளுக்கு விட்டு விட்டுக் கண்மூடிய காட்சிகளுமுண்டு.

போர்வீரர்கள் ரணகளத்தில் உயிரையும் விடத் துணிந்துபோகிறார்கள். வீட்டில் குந்திக்கொண்டிருக்கிறவர்களோ மந்திரி பதவிகளையும், நிர்வாக சபை அங்கத்தினர் பதவிகளையும் பெறுகிறார்கள். உண்மையான உழைப்பாளிகளைத்தான் உலகம் அதிசீக்கிரத்தில் மறந்துவிடுகிறது.



அந்த ஊரிலே ஒருவர் புதிதாக டாக்டரானார். வருமானம் குறைவாக இருந்தது. ஒரு மோட்டார் வாங்கிக்கொண்டு அதில் ஏறிப்போய் வியாதியஸ்தர்களைப் பார்ப்பதானால் அதிகமாகப் பீஸ் வந்து பணக்காரனாகலாமென்று ஒரு மோட்டார் வாங்கிவிட்டார். மோட்டாரில் ஏறிப்போய் நோயாளிகளைப் பார்த்து வந்தும் அதிக பீஸ் அவ்வளவாக வரவில்லை. எங்குமே பணத்துக்குக் கஷ்டம் ஊரிலே நோய்களும் அதிகப்படவில்லை. எவருக்கும் கட்டி சிறங்கு புறப்படவுமில்லை. என்ன செய்கிறது?

ஃ

செட்டியிடம் மோட்டாருக்காக வாங்கியிருந்த கடனுக்கு வாரண்டு பிறந்து அமீனாவும் ஒரு போலீஸ்காரனுமாக நடு வழியிலே மோட்டாரில் டாக்டர் போகும்போது பிடித்துவிட்டனர். டாக்டர் கலங்கினார். வாரண்டில் கையெழுத்து போட்டுவிட்டு ஜாமீன் கொடுத்து வீடு சேர்ந்தார். மோட்டார் கடன் தீர்ப்பதற்கென்று தன் நிலத்தை விற்பதென்று முடிவு கட்டினார்.



ஃ



அவ்வூரில் பெரிய மிராசுதாரரான முத்துகிருஷ்ண முதலியார்தான் தன் நிலங்களையும் தோட்டங்களையும் வாங்கக்கூடிய பணமுள்ளவரென்று தெரிந்து அவரை யழைத்துப்போய் தன் வயலையும் தென்னந்தோப்பு மாந்தோப்புகளையும் காண்பித்தார். தன் தம்பி சோமுவைக் கேட்டுவந்து பிறகு சொல்வதாய் முத்துகிருஷ்ண முதலியார் சொன்னார். நிலத்திற்குப் பதிலாக மோட்டாரையே விற்கக்கூடாதென்றாலோ 4000-ரூபாய் மோட்டார் 1000-த்துக்குப் போவதே கஷ்டம் தான்.

மூத்துகிருஷ்ண முதலியாரின் சம்சாரம்தான் லக்ஷ்மி. அவளிடம் டாக்டர் தனது நிலத்தை விற்கப்போகும் சங்கதியைச் சொல்லி, நல்ல நன்செய் நிலம், நல்ல தோப்பு தோட்டங்கள். எழாயிரம் ரூபாய் பெறுமானதை நாலாயிரத்துக்குத் தருவதாகச் சொல்லுகிறார். என் கையிலே பணமில்லையே. நீதான் ஒரு யோசனை சொல்லவேண்டுமென்று கேட்டார்.

ஃ

லக்ஷ்மி:—யோசனை என்ன? நமது சோமுவின் பாகத்திற்கு வந்த பணம் பாங்கியிலிருக்கிறதல்லவா? அதில் எடுத்து வாங்கி விடுகிறது.

முத்து:—சோமு இப்போது சிறுவனல்ல. விவரம் தெரிந்தபிள்ளை. அவனைக் கேட்டுத்தானாகவேண்டும்.

லக்ஷ்மி:—மகா விவரம் தெரிந்த பிள்ளைதான். வயது 18-ஆகப் போகிறது. இன்னும் அண்ணி என்கிற மரியாதையில்லாமல் என் மேல் கால்போட்டுக் கட்டிக்கொண்டு தூங்குகிறான்.

முந்து:—உனக்கு ‘அண்ணி மரியாதை’ வேண்டுமோ? அது இந்த ஜென்மத்திலே உனக்கு இல்லை. அண்ணி என்பதற்குப் பதிலாக நீதான் தாய் போல இருந்து உன் மார்பில் சுறந்த பாலையெல்லாம் உன் குழந்தைக்குக் கூடத் தாமல் சோமுவுக்கே கொடுத்து அவனைப் பெரிய ஆளாக்கிவிட்டாயே! என் தாயார் ஒரு வயசுக் குழந்தையிலே அவனைவிட்டுப் போனதற்கு, நீ அவனை வளர்த்திருக்கிற அருமையை என் தாயார் உயிரோடிருந்து கண்டால் எவ்வளவோ சந்தோஷப்படுமே.

லக்ஷ்மி:—என் மாமி இருந்தால் என்னை மடியில் வைத்துக் கொஞ்சுமே! நான் வீட்டுக்குள் வந்த மூன்றும் வருஷத்திலேயே என் மாமியை வாயில் போட்டுக்கொண்டேனே (என்று கண்ணீர் விட்டாள்.)

முத்து:—உன்மேல் தோஷமில்லை. சோமுவின் ஜாதகப்பலனே அவன் தாயைத் தூரத்திவிட்டது.

லக்ஷ்மி:—சோமுவின்மேலே ஒன்றும் என் எதிரில் சொல்லவேண்டாம். எனக்குக் கோபம் வரும்.

முத்து:—ஆமாம்! வளர்த்த தாயல்லவா? கோபம் வருந்தான். நீயே பணத்திற்கு அவனைக்கேள். நான் கேட்கக்கூடாது. அவன் பெயருக்குப் பத்திரம் எழுதிவிடலாம்.

லக்ஷ்மி:—அவனைக் கேட்கிறதென்ன? நான் தான் சொல்லுகிறேனே! பாங்கியில் பணமிருப்பதைவிட, ஒரு நிலத்தை அவனுக்கு வாங்கிவிட்டால் வயிறாறப் பசியில்லாமல் சுகமாக சாப்பிட்டுக்கொண்டிருப்பான்.

[இந்த சமயம் சோமு அங்கு வருகிறான்.]

அகராதியில் காணப்படாததினாலேயே ஒரு சொல் இல்லையென்று கூறிவிடுவதற்கில்லை. சாதாரணமாய்த் தெரிந்த எத்தனையோ வழக்கச்சொற்கள் அகராதியில் இடம் பெறவில்லை.



முத்து:—தம்பி, ஒரு நல்ல நிலம் நயமான விலைக்கு வந்திருக்கிறது. பாங்கியிலுள்ள உன்னுடைய ஐயாயிரம் ரூபாயிலே நாலாயிரம் எடுத்து வாங்கி விடட்டுமா?

சோமு:—என்னை என் அண்ணு கேட்கிறாய்? அம்மாவைக்கேட்டு, அம்மா எப்படிச் சொல்லுறதோ அப்படிச் செய்யண்ணு.

லக்ஷ்மி:—நான் அப்போதே சொன்னேனே பார்த்தீர்களா? அவனுக்கு என்ன தெரியும், பாவம் சின்ன குழந்தை, எப்படியோ அவனுக்கு நல்லதைச் செய்துவையுங்கள். தாயில்லாக் குழந்தை பிழைத்துப்போகட்டும்.

சோமு:—என் அம்மா, எனக்குத் தாய் இல்லை யென்கிறாய்? கல்லுப் பிள்ளையாரைப்போல நீ எதிரிலிருந்துகொண்டு என் இப்படிப் பொய் பேசுகிறாய்?

லக்ஷ்மி:—என் கண்ணே! உன் தாய் நான் அல்லடா, நான் உன் அண்ணுவின் மனைவி. என்னை நீ அண்ணி என்று மரியாதையாக அழைக்கவேணும். என்னை நீ தொடாமல் தூர நிற்கவேணும். என் பக்கத்திலே நீ படுத்துக் கொள்ளக்கூடாது. இது அண்ணியாருக்குச் செய்கிற மரியாதை.

சோமு:—அண்ணியோ கிண்ணியோ! நீதான் என் அம்மா. உன் பக்கத்தில் படுத்தால்தான், நீ ஒரு கதை சொன்னால்தான் எனக்குத் தூக்கம் வரும். செத்துப்போன அம்மா உன்னைப்போல சிவப்பாய் அழகாயிருக்குமா?



லக்ஷ்மி:—(கண்ணீர் கலங்க) பார்த்தீர்களா சோமு என்னைக் கேட்கிற கேள்வியை? சும்மா என்னை நோண்டி நோண்டிக் கேட்கிறான். அவனுடைய அம்மாவைப்பற்றி நீங்களே அவனுக்குச் சொல்லுங்கள். பழய ஞாபகங்கள் வந்து என் நெஞ்சை யடைக்கிறது. அவன் முன்னாலே நான் கதறிவிடக் கூடாது. கொஞ்சம் பக்கத்து வீட்டிற்குப்போய் சற்று இருந்து கொஞ்சம் மனதை ஆற்றிக்கொண்டு வருகிறேன் [என்று தன் மாமியின் நினைவுடனே கண் கலங்கி வெளியிற் செல்கிறான்.]

முத்து:—உன் அம்மா என்னைப்போல சிவப்பாய் இருப்பாள். என் மூக்கு கண்ணு எல்லாம் உன் அம்மா மூக்கு கண்ணுதான். நீ என் தகப்பனார் ஜாடையில் இருக்கிறாய். போனதை நினைக்காதே மறந்துவிடு. தைரியமாயிரு. நாளைக்குப் பாங்கியிலிருந்து பணம் பெற்று நிலத்தை உன் பேருக்கு வாங்கி விடுகிறேன். [என்று கூறித் தமது கண்களைத் துடைத்துக்கொள்வதானார்.]

" அமிர்த குணபோதினி "

ஸ்ரீமுக ஸம்வத்திய ஆனி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங் (ஜூலைமீ)	தமிழ் (மிதுனமீ (5—28))	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
சி-அ	14	1	புத	ஸப்-28-2, சத-8-33, மிதுனரவி 16-43, கரிநாள், [ஷடசீதி சூன்யர்க்கம்.
சி	15	2	வியா	அஷ்-28-38, பூட்-10-33, நவமி அசுபம்.
சி-அ	16	3	வெ	நவ-30-55, உட்-14-6, தசமி ரேவதி அசுபம்.
பி-சி	17	4	சனி	தச-34-37, ரே-19-3, எகாதசி அசுபம் வாய்க்காலில் நீர்போக்குவிட.
சி-பி	18	5	ஞா	எகா-39-21, அசு-25-9, துவாதசி அசுபம்.
சி-ம	19	6	திங்	துவா-44-51, பர-32-0, கரிநாள், லக்ஷபத்மவிரதம்
சி-அ	20	7	செ	திர-50-44, கிரு-39-17, கிருத்திகா விரதம்.
சி	21	8	புத	சதி-56-46, ரோ-46-40, சிவராத்திரி.
ம	22	9	வியா	●-60-0, மிரு-54-7, ஆனி அமாவாசை.
சி	23	10	வெ	●-3-31, ஆரு-60-0, தான்யஞ் சேர்க்க.
சி	24	11	சனி	பிர-8-17, ஆரு-1-13, ஆஷாடசுத்தம்.
சி	25	12	ஞா	துவி-13-27, புந-7-55, ராமரதம்.
சி	26	13	திங்	திரி-17-56, பூச-13-58.
சி	27	14	செ	சது-21-29, ஆயி 19-9, ஸ்கந்தபஞ்சமி.
சி-அ	28	15	புத	பஞ்-23-52, மக-23-12, மனைகோல.
சி-ம	29	16	வியா	ஷஷ்-24-48, பூர-25-50, ஷஷ்டி அசுபம்.
சி-அ	30	17	வெ	ஸப்-24-5, உத்-26-52, ஆனிதிருமஞ்சனம், அசுபம்.
ம	1	18	சனி	அஷ்-21-41, ஹஸ்-26-13, திதிதுவயம்.
சி	2	19	ஞா	நவ-17-33, சித்-23-49, காமேசுவரஸ்வாமி ரதம்.
அ-ம	3	20	திங்	தச-11-48, ஸ்வா-19-52, ஆனி-கருடன்.
ம-சி	4	21	செ	எகா-4-40, விசா-14-31, உப-51-43, சயனஏகாதசி
அ-சி	5	22	புத	திர-47-18, அநு-8-9, ஜயேஷ்டாபிஷேகம்.
பி-சி	6	23	வியா	சதி-38-0, கேட்-1-7, உப-52-45.
பி சி	7	24	வெ	○-28-49, பூரா-46-50, அழகியசிங்கர் ரதம்.
சி	8	25	சனி	பிர-20-9, உரா-40-37, திதிதுவயம்-
அ-ம	9	26	ஞா	துவி-12-26, ஶ்ரவ-35-30
சி	10	27	திங்	திரி-6-2, அவி-31-53, பந்தல் போட.
ம	11	28	செ	சது-1-15, சத-30-0, உப-57-9.
அ-சி	12	29	புத	ஷஷ்-57-40, பூட்-30-5, வாஸ்து கர்மவிதி.
சி	13	30	வியா	ஸப்-58-47, உட்-32-4, கிருஷியாரம்பிக்க.
அ	14	31	வெ	அஷ்-60-0, ரே-35-52, அஷ்டமி ரேவதி அசுபம்.
சி	15	32	சனி	அஷ்-1-39, அசு-41-8, கடகரவி 43-55, தக்ஷிணாய[ணம், நவமி அசுபம்.

		ரவி	பு-சு
ரா	15உ-க்கு ராசி		
சனி			குஜ குரு கேது

" அமிர்த குணபோதினி " பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.